கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–14, இதழ் – 1 Volume - 14, Issue - 1	மார்கழித் திங்கள் December 2022	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

சென்னை கார்காத்தார் சங்கம் நூற்றாண்டு விழா

சங்கம் வளர்த்த சான்றோர்கள்

1. S. இரத்தினம் பிள்ளை, 2. L.N. பரமசிவம், 3. R.P. சேதுப்பிள்ளை, 4. A. கனகசபை, 5. S. வடிவேல், 6. R. கனகசபை, 7. பொன்னம்பலம், 8. S. வேதபுரி, 9. மு. அருணாசலம், 10. V. கோவிந்தன், 11. N. திருஞானசம்பந்தம், 12. குன்றக்குடி அடிகளார், 13. A. நமச்சிவாயம், 14. D.S. கணபதி, 15. B.S. ஞானதேசிகன், 16. K.G. சீனிவாசன்

"Delivered by India Post"

www.indiapost.gov.in

SAPPIDA VANGA CATERERS

PURE VEGETARIAN

சாப்பிட வாங்க

சுத்த சைவம்

திருமணம், வரவேற்பு, வீட்டு வைபவங்கள்
மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும்
கூப்பிடுங்க சாப்பிட வாங்க

இப்பொழுது இன்னும் புது பொலிவுடன்

Contact: 9176657165, 9176657136,
9884302456, 6385732827, 9176657108,
hotelvassi123@gmail.com

சென்னை கார்காத்தார் சங்கம்

நூற்றாண்டு விழா அழைப்பிதழ்

தருமையாதீன குருமகா சந்நிதானம் அவர்களின் நல்லாசியுடன், நமது சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா 08.01.2023, ஞாயிற்றுக்கிழமை, பூந்தமல்லி **S.V.V. திருமண மண்டபத்தில்** சிறப்புடன் நடைபெற உள்ளது. நூற்றாண்டு விழா மலர் வெளியீடு மற்றும் கார்குல முன்னோடிகளுக்குப் பாராட்டும் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம்.

தங்களின் நல்வரவை அன்புடன் எதிர்நோக்கும்

தலைவர்
விளாகம் S. சிவக்குமார்

பொருளாளர்
S. ஞானசேகரன்

செயலாளர்
கைலை. சண்முகம்

நிகழ்ச்சி நிரல்

காலை 9.00 மணி	கொடியேற்றுதல் கேப்டன் திரு. **R.S. ஜெகதீசன்**
குத்து விளக்கேற்றுதல்	
இறை வணக்கம்	தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை	செயலாளர் திரு. **கைலை. சண்முகம்**
தலைமை உரை	தலைவர் திரு. **S. சிவக்குமார்**
சங்க வரலாறு	திருமதி. **வனஜா இளங்கோவன்**
கார்காத்தார் ஒப்புரவின் வளர்ச்சி	மேலையூர் திரு. **S. அன்பழகன்**

நூற்றாண்டு விழா மலர் வெளியீடு

தலைமை ஏற்று	கார்குல வள்ளல்
மலர் வெளியிடுபவர்	திரு. **S. வெங்கடேசன் பிள்ளை**
முதல் பிரதி பெறுபவர்	திரு. ஸ்டெர்லிங் **R. சுப்ரமணியன்**
முன்னிலை	நீதியரசர் **T.N. வள்ளிநாயகம்**
	தாசில் பண்ணை **R. இராஜசேகரன் பிள்ளை**
	திரு. **V. இரத்தினசபாபதி**
	விளாகம் திரு. **S. சுந்தரேசன்**
	முனைவர் திரு. **K.K.R. சுரேஷ்** என்கிற **ராஜசுந்தரம்**
வாழ்த்துரை	நீதியரசர் திருமதி **விமலா வேல்முருகன்**
	திரு. **M. பாலசுப்ரமணியன்**, திருச்சி
	திரு. **G. இராமநாதன் பிள்ளை**, ஜெயங்கொண்டம்
	திரு. **M. சத்தியபால்**, மயிலாடுதுறை
	திரு. **T.M. வைத்தியநாதன்**, கும்பகோணம்
	திரு. **V. ரத்தினசாபாபதி**, விருத்தாசலம்
	திரு. **M.S. முத்தையா பிள்ளை**, திருநெல்வேலி
	திரு. **U.S.S.R. நடராஜன்**, சென்னை
	மனிதநேயம் திரு. **T.N. முத்துக்குமாரசுவாமி**, சென்னை
	திரு. **C. சிவஞானம்**, வசி பேலஸ், சாப்பிட வாங்க ஹோட்டல், சென்னை

கார்குல முன்னோடிகளைப் பாராட்டி, சிறப்பு செய்தல்

மதியம் 1.00 மணி – அறுசுவை விருந்து

மதியம் 2 மணி முதல் 3 மணி வரை **சிறப்பு பட்டிமன்றம்**

நடுவர் – நகைச்சுவைத் தென்றல் **S. சிவகுருநாதன்,** திருச்சி

மாலை 3 மணி முதல் 4 மணிவரை **மகளிர் அரங்கம்**

தலைமை : முனைவர் ஞானவதி அசோகன்

முன்னிலை : முனைவர் நளினி ராஜகோவிந்தன்

திருமதி கல்யாணி இளங்கோ

இளைஞர்களின் நலன் – தொழில் முனைவோர் கருத்தரங்கம்

திரு. A. சண்முக வேலாயுதன்	IPL Product
திரு. M. கமலகண்ணன்	Utracon Structural Systems
திரு. S. செல்வகுமார்	Maruthi Power Control
திரு. M. சுவேதகுமார்	Saradharam Group
திரு. S. சபாநாயகம்	Excel Powers Switchgear Pvt. Ltd.,
திரு. M.N. பாலமுருகன்	Xtra Chef

மருத்துவ ஆலோசனை

Dr. S. முத்துகுமார்	பார்வதி மருத்துவமனை
Dr. R. ராஜசேகரன்	மயிலாடுதுறை
Dr. V. நடராஜன்	சென்னை
முனைவர் R. இளங்கோவன்	யோகக்கலை

கலை நிகழ்ச்சி மற்றும் பரிசு வழங்குதல்

பாட்டு	செல்வி ஸ்ரீநிதி அம்பலவாணன்
பரதநாட்டியம்	அஷ்மிதா ராமலிங்கம், சக்தி சபரிநாதன், ஓவியா செந்தில்நாதன்
பரிசு வழங்குதல்	
நன்றியுரை	திரு. கனக சுப்ரமணியன்

நாட்டுப்பண்

7.00 மணி – இரவு விருந்து

சங்க நிர்வாகிகள்

துணைத் தலைவர்கள் : S. சோமசுந்தரம், கனக. சுப்ரமணியன்

இணை செயலாளர் : S. மதிவாணன்

செயற்குழு உறுப்பினர்கள் : மேலையூர் S. அன்பழகன், வனஜா இளங்கோவன், T. செல்வகுமார், G. தியாகராஜன், A. இராமலிங்கம், S. சிவனருள், R. கார்த்திகேயன், R. குந்தவி, S. ஞானகுமார், G. சபரிநாதன், G. சுந்தர்கணபதி, S. புவனேஸ்வரி,

இணைக்குழு : N. சிதம்பரம், G. ரகு, R. உதயகுமார், P. ரத்தினசபாபதி

குறிப்பு : Lucky Draw பரிசுக் கூப்பன்களை வாங்கி பரிசுகளை வெல்வீர்!

தொடர்புக்கு : 94440 48509, 90429 57792

இதழின் உள்ளே....

மனவலிமை தரும் தன்னம்பிக்கை 7

சொற்பொழிவு அருவி 9

நட்சத்திரங்களும், மரங்களும் 11

சங்கப் பலகை 14

இரண்டு வகை ஜன நாயகம் 19

மணமகன் / மணமகள் தேவை 22

திருவிளையாடற் புராணம் 36

சங்க நிகழ்வுகள் 43

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

நூற்றாண்டு காணும் சென்னை கார்காத்தார் சங்கத் தோற்றமும் சாதனைகளும்

1922 ஆம் ஆண்டில், ஒன்றிணைந்த மதராஸ் மாநிலத்திலும் குறிப்பாக சென்னை மாநகரிலும் வசித்து வந்த கார்குல மக்கள் ஒன்றிணைந்து கார்காத்தார் சமுதாயத்துக்காக ஒரு சங்கம் அமைத்திட முடிவு எடுத்தனர். சங்கம் அமைப்பதில் முன்னோடியாக இருந்து செயல்பட்ட அந்த நாள் கல்வியாளர் திரு. ரத்தினம் பிள்ளை அவர்களே மதராஸ் கார்காத்த வேளாளர் சங்கத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன் பிறகு 1928ல் சங்கத்தைத் துவக்கிய திரு. ரத்தினம் பிள்ளை B.A.L.T. அவர்களே மீண்டும் சங்கத்தைச் சீரமைத்து பெயரையும் மதராஸ் கார்காத்தார் சங்கம் என மாற்றி அதற்குண்டான கட்டமைப்பு விதிகளை உருவாக்கி, சங்கத்தை செவ்வனே நடத்திச்செல்ல ஒரு நிர்வாகக் குழுவினையும் தேர்ந்தெடுக்கச் செய்தார். தொலை நோக்கு பார்வை கொண்ட அப் பெருந்தகையாளர் மதராஸ் கார்காத்தார் சங்கத்தை, சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு பண்ணவும் செய்தார்.

அந்த காலத்திலேயே 1928 ல் மாயூரத்திலும் 1930ல் வடலூரிலுமாக இரண்டு மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

1930ம் ஆண்டுகளிலேயே கல்வி உதவித் தொகை வழங்குதல், பட்டதாரிகளைப் பாராட்டுதல், பெண் கல்வியில் ஆர்வம் காட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு சங்கத்துக்குகென குரோம்பேட்டையில் ஒரு அழகிய சிறு கட்டிடம் லால்குடி கார்குலமுன்னோடிகளின் பெரு முயற்சியாலும் மற்றும் நம் மக்கள் அளித்த நன்கொடைகள் மூலம் கட்டப்பட்டு 1950ம் ஆண்டில் புகுமனை புகுவிழாவும் கொண்டாடப்பட்டது. பின்னர் அந்த இடம் விற்கப்பட்டு, தற்பொழுது சங்கம் இயங்கும் சூளைமேடு சௌராஷ்ட்ரா நகர் 10வது தெருவில் சுமார் 5 1/2 கிரவுண்ட் மனை 1965ல் வாங்கப்பட்டு 1971 வாக்கில் அந்த இடத்தில் கார்காத்தார் இல்லம் கட்டப்பட்டு குறைந்த வாடகையில் நமது குல மாணவர்களுக்கு

வாடகைக்கு விடப்பட்டது தற்போது அந்த இடத்தில் நம் இன மக்களின் நலனுக்காக குடியிருப்பு வளாகம் கட்டப்பட்டு வருகிறது.

பள்ளி மூலம் ஈட்டிய வருமானம் மற்றும் இதர தொகைகளைக் கொண்டு பூந்தமல்லிக்கு அருகில் படூரில் நமது இன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன் 2004 ஆம் ஆண்டில் 8.24 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது . அந்த நோக்கம் நிறைவேறாதால் அந்த இடம் நல்ல விலைக்கு விற்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் மதுராந்தகத்துக்கு அருகில் கீரல் வாடி என்னும் இடத்தில் சுமார் 14 ஏக்கர் நிலம் இரண்டு கிரையங்களாக வாங்கப்பட்டது பின்னர் 2020 ஆம் ஆண்டில் கோடம்பாக்கத்தில் ஒரு குடி இருப்புத் தட்டு வாங்கப்பட்டது

இதர சாதனைகள்

1990 லிருந்து இன்று வரை ஒப்புரவு இதழை தற்போது கார்காத்தார் ஒப்புரவு மாதந்தோறும் தவறாமல் வெளியிட்டு வருகிறது

சென்னை கார்காத்தார் சங்கம்1–4–2016 முதல் வருமான வரிச் சட்டப் பிரிவு 12 ஏ ஏ யின் கீழ் பொதுத் தொண்டு சங்கமாகப் பதிவு செய்யப்படது

சுய தொழில் செய்யும் கார்காத்தார் சமுதாயத்தைப் பாராட்டி ஊக்குவிக்கும் முகமாக ஆண்டில் கார்காத்தார் சமுதாயத்தைச் சேர்ந்த ஹோட்டல் தொழிலில் ஈடு பட்டுள்ள "சாப்பிட வாங்க" திரு. சிவஞானம் அவர்களைப், பாராட்டி அவருக்கு "விருந்து வேந்தர்" என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

அதே போல் நம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை எழுத ஊக்குவிக்கும் வண்ணம் அவர்கள் படைப்புகளை கார்காத்தார் ஒப்புரவில் வெளியிடுவதுடன் அவர்களைப் பாராட்டி ஊக்கு விக்க 2015–16ஆம் ஆண்டில் படைப்பாளிகள் சங்கமம் நடத்தி அவர்களுக்கு பட்டயமும் வழங்கப்பட்டது .

இவை போல் மேலும் பல சாதனைகளைச் செய்துள்ள சென்னை கார்காத்தார் சங்கம் 2023 ஜனவரி 8 ஆம் தேதி நூற்றாண்டு விழா கொண்டாட இருக்கிறது. இந்த நல்ல நேரத்தில் இச்சங்கத்தை வளர்த்த சான்றோர்களை (அட்டையில் காண்க) நினைவு கூர்ந்து வணங்கி இச்சங்கம் மேன்மேலும் வளர்ந்து தொடர்ந்து சமுதாய மக்களுக்கு பணியாற்றிட வாழ்த்துவோம் .

அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவு சந்தா மற்றும் விளம்பர தொகையை **ONLINE** மூலம் செலுத்தும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. நமது சொந்தங்கள் அதை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. online fund transfer / QR CODE / UPI https:/karkathar.com/payment.html மூலமாக செலுத்தலாம். இதன் விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

online fund Transfer

Account Number :
130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name :
M/S Karkathar Oppuravu
Bank Name and Branch :
Indian Overseas Bank/
Choolai Medu - Chennai.

QR CODE/UPI

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்த்துகிறோம்

செம்பனார்கோவிலில் வசிக்கும் ஆக்கூர் திரு. ஏ. இராமலிங்கம் திருமதி. செந்தமிழ்செல்வி இவர்களின் மகன் இரா. விக்னேஷ்வர்–க்கும் சென்னை வேளச்சேரியில் வசிக்கும் கீழையூர் சி. ரவிச்சந்திரன், திருமதி. சந்திரபிரபா இவர்களின் மகள் R. கஜப்பிரியா–க்கும் திருமணம் ஆறுபாதி ஸ்ரீ அபிராமி திருமண மஹாலில் 13.11.2022 அன்று சிறப்பாக நடந்தது. இந்த திருமணம் 'கார்காத்தார் ஒப்புரவு' இதழ் மூலமாக முடிந்த திருமணம் என மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

மனவலிமை தரும் தன்னம்பிக்கை

Dr. D. Kalyanakumar, Trichy-18.

நாம் எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றி பெற ஆசையுடன் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் தேவை. அந்த நம்பிக்கை என்னால் நிச்சயம் இந்த காரியத்தை முடிக்க இயலும் என்ற மனஉறுதியுடன் அமையவேண்டும். அப்படி இருந்தால் வெற்றி உங்களை தேடி வரும். அரிய சாதனைகள் செய்யப்படுவது வலிமையினால் அல்ல. விடாமுயற்சியினால் தான். தன்னம்பிக்கையும் உற்சாகமும் மட்டும் இருந்தால் போதும் வெற்றி இலக்கை அடைந்துவிடலாம். சிந்தனையைவிடச் செயல்தான் எல்லோரையும் எல்லாவற்றையும் மாற்றி அமைக்கும்.

நம்மை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் தன்னம்பிக்கை நிரம்பப்பெற்றவர்கள் சோர்வு அடைவதில்லை. துவண்டு போவதில்லை தோல்வியானது நம்மைத் துவண்டு போகச் செய்கிறது என்றால் நம்முடைய தன்னம்பிக்கையின் அளவு குறைவாக இருக்கிறது என்று பொருள். தாழ்வு மனப்பான்மை நம்முடைய முயற்சியின் மீது நம்பிக்கையின்மை. மற்றவர்களுடைய வெற்றியைக் கண்டு வெதும்புதல் சோம்பேறித்தனம். மற்றவர்களோடு கலகலப்பாக இல்லாமல் இருத்தல் போன்றவை தன்னம்பிக்கை குறைவாக இருப்பதின் வெளிப்பாடு ஆகும்.

உழைப்பதில் மகிழ்ச்சி வேண்டும். உழைக்கத் தயங்கிக் கொண்டேயிருந்தால் தோல்வியைத் தழுவ நேரும். முயற்சி, பயிற்சி, உழைப்பு, மகிழ்ச்சி, நம்பிக்கை இவ்வைந்தும் வெற்றியின் ரகசியங்கள். எதில் ஈடுபட்டாலும் மனஉறுதியோடு ஈடுபட வேண்டும். விட்டுக் கொடுத்தால் மன நிம்மதியோடு விட்டுக் கொடுக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையில் எது செய்தாலும் ஒருபோதும் மற்றவர்களைப் பின்பற்றாதீர்கள். பிரதியெடுப்பது தவறு. புதுமையாக சிந்தனை செய்து வாழ்பவனுக்கு என்றும் எதிர்காலம் உண்டு. உல்லாசத்தை மட்டுமே தொழிலாகக் கொண்டு வாழ்ந்துவரும் ஒருவன் உண்மையான சந்தோஷக்காரனாக இருக்க முடியாது.

எதிர்ப்பு இல்லை என்றால் அங்கு முன்னேற்றம் இல்லை. கனவு காணுங்கள் வாழ்க்கையில் முன்னேற அன்பு, அறிவு, கனிவு, துணிவு இந்நான்கும் இருந்தால் உனக்கு நல்வழி காட்டும். எவ்வளவு நேரம் வேலை செய்கிறோம் என்பதைவிட எப்படி வேலை செய்கிறோம் என்பதுதான் முக்கியம். திட்டம் இல்லாத வாழ்க்கை பிரேக் இல்லாத வண்டியைப் போன்றது. உங்களால் என்ன செய்ய முடியும் என்பதை பார்த்து யாரும் தேர்வு செய்வதில்லை. நீங்கள் இதுவரை என்ன செய்துள்ளீர்கள் என்பதைப் பார்த்துத்தான் உங்கள் தகுதியைத் தீர்மானிக்கிறார்கள். வயதைக்கூட்டுவதல்ல நம் வாழ்க்கையின் நோக்கம் வயதிற்கு உயிர் ஊட்டுவதுதான் நம் வாழ்க்கையின் நோக்கம்.

உயர்ந்த பண்புக்கு அடிப்படை சின்னச் சின்ன தியாகங்கள். நம்பிக்கை வைத்தவனை ஏமாற்றுவது சாமர்த்தியம் அல்ல. அது துரோகமே. பொறுப்பில் இருக்கும் ஒவ்வொருவரும் வெற்றியும் தோல்வியும் தம்முடைய பணியில் இருக்கிறது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். ஒரு காரியத்தை சாதிக்க நினைத்து. தோல்வி அடையும் ஒவ்வொரு சமயத்திலும் வெற்றிப்படிகளில் அடியெடுத்து வைக்கிறோம் என்று எண்ணினால் நிச்சயம் வெற்றி பெறலாம். ஆற்றில் ஓடுகின்ற நீரானது தடைகளை கண்டு நின்றுவிடாமல் வளைந்து ஒதுங்கி ஓடுவது போல நாமும் வெற்றியை நோக்கி ஓட வேண்டும். வெற்றியை நோக்கி நம் பாதங்கள் நடக்க தயாரானால் அதற்கான வழிகள் நம் முன்னே பிரகாசமாக தெரியும்.

பில்கேட்ஸ் என்றதும் கோடீஸ்வர பிம்பம் தான் நமது மனதில் எழும். அவருடைய இன்றைய நிலை அப்படி ஆனால் அவர் ஒரு சாதாரண தொழிலாளியாய் வாழ்க்கையைத் தொடங்கியவர். வாழ்க்கையின் சவால்களைத் தாண்டி தான் இன்று சர்வதேச பிஸினஸ் ஜாம்பவானாக உருவெடுத்திருக்கிறார். பில்கேட்சின் வாழ்க்கை சாதிக்க நினைக்கும் மனிதர்களின் தன்னம்பிக்கை அகராதி. அபரிமிதமான பணத்தின் ஒரு பகுதியை பிறருக்காய் செலவழிக்கும் இவருடைய பண்பு மதிக்கத்தக்கது. கலவைகளாலான அவருடைய வாழ்க்கை இளைஞர்களுக்கான பாடம். இவரைப் போலவே ஸ்டீவ் ஜாப்ஸ், லக்ஷ்மி மிட்டல், வாலே டின்னுபு, வாரன் பப்ஃபெட் போன்ற பல்வேறு தொழிலதிபர்களின் வாழ்க்கை வரலாறுகள் தன்னம்பிக்கையை வலுவாக்கும் பாடங்கள். தன்னம்பிக்கை மனிதர்களின் பட்டியலில் அன்னை தெரசாவின் பெயரா என ஆச்சரியப்படலாம். ஆனால் தேசம் விட்டு தேசம் வந்து, பல்வேறு இன்னல்களைத் தாங்கி, ஆயிரக்கணக்கான எதிர்ப்புகளைத் தாண்டி ஏழைகளின் பணியாளனாய் நின்ற அவருடைய வாழ்க்கை பிரமிப்பூட்டுகிறது. இறை மீது வைத்த நம்பிக்கையும், அந்த நம்பிக்கையை மனதில் ஏற்று தன்னம்பிக்கை வாதியாக பரிமளித்த அவரது வாழ்க்கையும் சிலிர்ப்பூட்டுகிறது. பிற மதங்களல்ல, கிறிஸ்தவமே அவருடைய பணிக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கவில்லை. அனைத்தையும் அன்பினால் கடந்தார் அன்னை தனது முடிவில் ஆழமாய் வேரூன்றி பணி செய்தவன் மாபெரும் முன்னுதாரணமாய்த் திகழ்கிறார் புனித தெரேசா.

உலகத் தலைவர்களைப் பற்றிப் பேசும் போது ஆபிரகாம் லிங்கனைப் பற்றி நாம் படிக்காமல் இருப்பதில்லை. அமெரிக்க அதிபராய் இருந்தவர். கருப்பின அடிமைத்தளையை அகற்ற பாடுபட்டவர் மிகச்சிறந்த பேச்சாளர். அற்புதமான நிர்வாகி என இவருக்கு பல பெருமைகள். ஆனால் இவருடைய வாழ்க்கை துவக்கம் முதல் இனிமையாக இருக்கவில்லை. செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகனாய்ப் பிறந்தார். படிப்பில் ரொம்ப சுமாரான பையன் தான் வீட்டில் வசதிகளும் இல்லை. ஆனாலும் அவருக்குள் ஒரு கனல் இருந்தது. வெள்ளை மாளிகையில் அமரவேண்டும் எனும் தாகம் இருந்தது. அதை நோக்கிய பயணம் அவரை வெற்றியாளராய் உயர்த்தியது. ஆபிரகாம் லிங்கனைப் போன்ற பல்வேறு தலைவர்கள் தன்னம்பிக்கை மனிதர்களாக நிலைக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் வலுவூட்டும் வழிகாட்டிகள்.

நம்பிக்கை நார் மட்டும் நம் கையிலிருந்தால் உதிர்ந்த பூக்களும் வந்து ஒவ்வொன்றாய் ஒட்டிக்கொள்ளும் என்றார் கவிஞர் மு. மேத்தா. முயற்சி திருவினையாக்கும் என்றார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர். முயற்சியும் பயிற்சியும் கொண்டு தன்னம்பிக்கை என்னும் திறவுகோலால் வெற்றியெனும் கதவினை திறக்கலாம். வானம்பாடியென வானில் பறக்கலாம். தன்னம்பிக்கை என்பது ஒரு நாளில் உதிர்ந்துவிடும் பூவாக இருந்து விடக்கூடாது. மேலும் மேலும் மலரை உருவாக்கும் செடியாக இருக்க வேண்டும் என்றார் அரிஸ்டாட்டில். மண்ணில் விதைத்த விதை முதல், விண்ணில் பறக்கும் பறவைகள் வரை அனைத்து உயிரினங்களின் உடலோடும் ஒட்டியது தன்னம்பிக்கை. உயர வேண்டிய ஒவ்வோர் உயிரினத்திற்கும் வேண்டியது தன்னம்பிக்கை. போட்டிகள் நிறைந்த இன்றைய பூவுலகில் தன்னம்பிக்கையோடு ஒவ்வொரு நாளின் விடியலையும் யார் எதிர்கொள்கிறார்களோ, அவர்களுக்கே உண்மையான விடியல் கிடைக்கிறது. தன்னம்பிக்கையின் நிறைவு என்னால் முடியும். என்றும் விடியும் என்பது இன்றைய மாணவர்களிடமும், இளைஞர்களிடமும் அவர்களது மன வயலில் விதைக்க வேண்டியது தன்னம்பிக்கை விதைகளே. சின்னச்சின்னத் தோல்விகளை, ஏமாற்றங்களை, துரோகங்களை எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடிய மனநிலையில் இன்றைய பெரும்பாலான மாணவர்களும் இளைஞர்களும் இல்லை என்பது வருத்தத்திற்குரியது.

புதைக்கப்படவில்லை, விதைக்கப்படுகிறது' என்றுணர்ந்த விதை இருளுக்கு அஞ்சாது. ஒதுக்கப்படவில்லை, செதுக்கப்படுகிறோம் என்றுணர்ந்த மனம் தோல்விக்கு அஞ்சாது. தன்னம்பிக்கையோடு போராடி தோல்வியைத் தழுவினாலும், ஒருவன் தோளில் அமரும் தோல்வி வெற்றிக்கு அருகில் வீறுநடையிட்டுக் கொண்டிருக்கிறது என்று தான் அர்த்தம். ஒரு பறவை மரத்தின் கிளையில் அமரும் போது அது எந்த நேரத்திலும் முறிந்துவிடும் என்ற பயத்தில் அமர்வதில்லை. ஏனென்றால் அப்பறவை நம்புவது மரத்தின் கிளையை அல்ல அதன் சிறகை, தோல்வியின் அடையாளம் தயக்கம். வெற்றியின் அடையாளம் துணிச்சல். துணிந்தவர் தோற்றதில்லை. தயங்கியவர் வென்றதில்லை. விழுவதெல்லாம் எழுவதற்காகத்தானே தவிர அழுவதற்காக அல்ல என்பதை நம் மனம் உணர வேண்டும். எடுத்த செயலை முடிக்காமல் கைவிடும் போது வெற்றிக்கு எவ்வளவு அருகில் இருக்கிறோம் என்பது பலருக்குத் தெரிவதில்லை. எனவே தோல்வியைத் தழுவுகின்றனர் என்றார் மக்களின் விஞ்ஞானி எடிசன்.

வெற்றி ரகசியம் : ஒரே ஓர் எண்ணத்தைக் கையில் எடுங்கள் அந்த எண்ணத்தையே உங்கள் வாழ்க்கை ஆக்குங்கள் அந்த எண்ணத்தையே சிந்தியுங்கள். கனவு காணுங்கள் உடலின் ஒவ்வொரு செல்லும், நரம்பும் அந்த எண்ணத்திலேயே ஊறட்டும். இதுவே வெற்றியின் ரகசியம் என்றார் சுவாமி விவேகானந்தர்.

மனவலிமைதான் தன்னம்பிக்கை. தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா கதவுகளும் திறந்து வரவேற்பு அளிக்கும்.

முடியாது என்று சொல்வது **மூடநம்பிக்கை!** முடியுமா என்று கேட்பது **அவநம்பிக்கை!** முடியும் என்று சொல்வதே **தன்னம்பிக்கை!**

வாழ்த்துகிறோம்.

பெண்ணாகடம் காமராஜர் தெரு, திரு. V. மணிவாசகம் பிள்ளை – வசந்தா ஆச்சி இவர்களின் சதாபிஷேகம் 27–10–2022 அன்று திருக்கடையூர் அருள்மிகு அபிராமி அம்மன் சமேத அமிர்தகடேசுவரர் ஆலயத்தில் நடைபெற்றது.

சங்க சட்ட ஆலோசகர் த. வேல்முருகன் – வே. விமலா இல்ல திருமணம் 28–10–2022 அன்று ARS திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மணமக்கள் : V. அபிநயா – விஷால்.

பெண்ணாகடம் சங்கத்தின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



சொற்பொழிவு அருவி
– அவ்வை நடராசன்

அன்றாட வாழ்வில் சில உன்னத மனிதர்கள் வழியாக நல்ல தகவல்களை இறையருள் நமக்கு அனுப்பும்; அவற்றை உணர்ந்து பின்பற்றும்போது, ஆச்சரியமான அனுபவங்கள் நமக்குக் கிடைக்கும் என்பது ஆன்மிகத்தில் திளைத்த ஆன்றோர் வாக்கு. அந்த வரிசையில் தமிழுக்கும் தமிழ் சமூகத்திற்கும் கிடைத்த பெரிய புதையல் புகழ் பூத்த தமிழறிஞர் திரு. அவ்வை நடராஜன் ஐயா அவர்கள்.

திருமண மாலை என்பது வாழ்வில் ஒருமுறை தான் கழுத்தில் விழும். ஆனால் செல்லும் இடமெல்லாம் தமிழ் மாலை சூடிக்கொண்டு மக்கள் வெள்ளத்தில் திரண்டவர் நானிலம் போற்றும் நாவலர் திரு. அவ்வை நடராஜன் ஐயா அவர்கள்.

அவருடைய நுட்பமான அறிவு சங்க இலக்கியம் தொடங்கி பழைய இலக்கியங்களில் பயணித்து புராண இதிகாசங்களுக்குள் நுழைந்து அதன் பிறகு புதுக்கவிதையில் ஆய்ந்து அறிவு சார்ந்த செய்திகளை மேற்கோள் காட்டியே அவருடைய சொற்பொழிவு இருக்கும். தமிழ் இலக்கிய வரலாறு என்று நாம் எதை படிக்கிறோமோ அதற்கு கை கால் முளைத்தால் அதுவே திரு. அவ்வை நடராஜன் அவர்கள்.

இவர் தற்போதைய திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாறு எனும் ஊரில் லோகாம்பாள் – ஔவை துரைசாமி இணையருக்கு மகனாக 24 ஏப்ரல் 1936 அன்று பிறந்தார். மதுரை தியாகராசர் கல்லூரியில் பயின்று தமிழில் முதுகலைப் பட்டம் (Master of Arts) பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் "சங்க இலக்கியத்தில் பெயரிடு மரபு" என்னும் பொருளில் ஆய்வு செய்து 1958–ஆம் ஆண்டில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றார். அதன் பின்னர் "சங்க காலப் புலமைச் செவ்வியர்" என்னும் பொருளில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். தமிழ், ஆங்கிலம் எனும் இரு மொழிகளிலும் சிறப்பாகப் பேசும் திறன் கொண்டவர். மாணவப் பருவத்தில் இருந்தே இலக்கண நுட்பமும் இலக்கிய துப்பமும் அறிவார்ந்த சிந்தனை நுட்பமும் கொண்டர் தான் தமிழாசான் அவ்வை நடராஜன் அவர்கள்.

மதுரை தியாகராசர் கல்லூரி, தஞ்சாவூரிலுள்ள மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி ஆகியவற்றில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அதன் பிறகு, புதுதில்லியிலுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தில் செய்து வாசிப்பாளர், அறிவிப்பாளர் எனப் பணியாற்றினார். தமிழக அரசின் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர், தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறைச் செயலர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், செம்மொழி நிறுவனத்தின் துணைத்தலைவர், இறுதியாக 2015 முதல் பாரத் பல்கலைக்கழகத்தின் நிரந்தர வேந்தர் முதலிய பல்வேறு பணிகளின் மூலம் தன் வாழ்க்கைப் பயணத்தை அனுபவச் செழுமையோடு நிரப்பியவர். எல்லாவற்றிற்கும் மேலாக உலகத் தமிழர்கள் அனைவரும் போற்றும் சொற்பொழிவாளராகவும் பட்டிமன்றப் பேச்சாளராகவும் புகழ்பெற்றுத் தமிழர்களின் மனப்பரப்பில் அவர் நிலை பெற்றவர்.

இளமையிலேயே திராவிட இயக்கத் தலைவர்களின் மேடைப் பேச்சால் ஈர்க்கப்பட்டவர் ஔவை. மேன்மையான ஒரு மேடைப் பேச்சை எவ்வாறு நிகழ்த்திக் காட்டுவது என்பதை நுணுக்கமாகப் புரிந்துகொண்டு, தனக்கெனத் தனிப் பாணியை கொண்டவர். கனமான செய்திகளையும் கருத்துகளையும் எவ்வாறு எளிய மொழியில் எடுத்துரைப்பது என்ற நுட்பத்தைக் கடைப்பிடித்தவர். எந்த ஒரு பொருளைக் குறித்துச் சொற்பொழிவாற்றினாலும் முதலில் ஓர் ஆலாபனை மாதிரி மெதுவாகத் தொடங்கிக் கொஞ்சம் கொஞ்சமாகப் பொருளின் மையத்திற்குள் நுழைந்து அலசுவார்; அப்பொருள் குறித்து இதுவரை யாராலும் சொல்லப்படாத பல புதுக் கருத்துகளைப் பார்வையாளர்களுக்குக் கடத்திவிடுவார்.

எடுத்துரைக்கும் முறையில் ஆழமான நகைச்சுவை உணர்வு ஒன்று இயல்பாக ஓடிக்கொண்டிருக்கும். கடைந்து கடைந்து தேர்ந்தெடுத்த சொற்களைக் கையாளுவார். கேட்பவர்களை அச்சொற்கூட்டம் கட்டிப்போட்டுவிடும். இவ்வளவுக்கும் கையில் ஒரு சிறு குறிப்பு கூட இருக்காது. அவ்வளவு சிறந்த நினைவாற்றல்; மிகப் பெரிய சொற்பொழிவாளர்கள் அனைவரும் இந்த நினைவாற்றலில் முதல் தரமானவர்களாக விளங்குவார்கள். அவருக்குப் பெரிதும் பிடித்தமான வள்ளலாரின் திருவருட்பா குறித்துக் கையில் ஒரு சிறு குறிப்புகூட இல்லாமல், வள்ளலாரின் உள்ளம் கவரும் பாடல் வரிகள் பலவற்றோடு ஒரு முறை ஒன்றரை

மணி நேரம் அவர் பேசியதை வியப்போடு கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

அரசியல் தலைவர்களுக்கும் அவ்வை நடராஜனுக்கும் இடையே உள்ள தொடர்புகள் மிகவும் சுவாரசியமானது.

இவர் தொல்காப்பியம் புறநானூறு சங்க இலக்கியங்கள் அனைத்திலும் கரை கடந்தவர். அவர் எந்த விடயங்களை எந்த தருணத்தில் எப்படி சொல்வது என்பதற்கு அவருடைய கூர்ந்த மதிக்கு ஒரு சில உதாரணங்கள்.

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது அவருடைய கையெழுத்திட்டு ஒரு உத்தரவு நடராஜன் பார்வைக்கு வருகிறது. கார் ஓட்டுநர்களுக்கு ஊதிய உயர்வு சம்பந்தமாக கார் ஓட்டிகளுக்கு ஊதிய உயர்வு கொடுக்கலாம் என்று முதல் உத்தரவு.

இந்த உத்தரவுக்கு பதில் எழுதும்போது நடராஜன் அவர்கள் காரோட்டி என்று மாற்றி எழுதி அனுப்புகிறார். முதல்வரின் பக்கத்தில் இருந்த சிலர் இதை எம்ஜிஆரின் பார்வைக்கு கொண்டு சென்று நீங்கள் போட்ட உத்தரவை எழுத்துப்பிழை கண்டுபிடித்து மாற்றி எழுதியிருக்கிறார் என்று பற்றவைத்து விட்டார்கள். அதற்கு திரு. எம்ஜிஆர் நடராஜ் அவர்களை கூப்பிட்டு என்னைவிட நீ தமிழ் புலமைப் படைத்தவரா என்று கேட்க அதற்கு மிக நயமான சொற்களில் நான் எங்கெங்க தமிழ் இலக்கணம் படிச்சேன்? படகோட்டி பார்த்து தானே தமிழ் படித்தோம் என்று நாசுக்காக பதில் அளித்தார். படகு ஓட்டி என்பதை அந்த படத்தில் படகோட்டி என்று பயன்படுத்தியிருப்பார்கள். இதைக் கேட்டதும் எம்ஜிஆர் சிரித்து அணைத்துக்கொண்டார்.

ஒருமுறை மத்திய அமைச்சர் ஒருவர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களை பாராட்டி பேசிக் கொண்டிருக்கும்பொழுது அவருக்கு ஒரு விருது கொடுத்து சிறப்பித்ததை சிறப்பாக சொல்லும் பொழுது it is feather on his cap (அவருடைய தொப்பியில் மேலும் ஒரு மயில் இறகு) என்று கூறினார். அப்போது இந்த பேச்சை மொழிபெயர்ப்பு செய்துகொண்டு இருந்தவர் அவ்வை நடராஜன் அவர்கள் மன்னாதி மன்னனின் மணிமகுடத்தில் மற்றும் ஒரு மாணிக்க கல் என்று மொழிபெயர்த்தார்.

இவர் அரசு பணியில் இருந்த பொழுது அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி அவர்களிடம் இருந்து ஒரு கோப்பு வருகிறது.திண்டுக்கல் அருகேஉள்ளகுஜிலிபாளையம் என்ற ஊரை மாற்ற வேண்டும். இதற்கு சரியான பெயரை பரிந்துரை செய்து அனுப்பவும் என்று வருகிறது. குஜிலி என்று சொன்னால் குஜராத்தியர்கள் குடியேறி கடை வைத்திருந்த பகுதி, அதனால் குஜிலிபாளையம் என்று அழைக்கப்படுகிறது. இதனை மாற்றுவது என்று சொன்னால் திண்டுக்கல் பகுதியை சார்ந்தது என்பதற்காக குறிஞ்சிபாளையம் என்று மாற்றலாம். குறிஞ்சிப்பாளையம் என்று மாற்றுவதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் பங்கஜம் என்ற சொல்லை மாற்றினால் பங்கயம் என்று மாற்றுவது போல குயில்பாளையம் என்று மாற்றவேண்டும். சிலப்பதிகார சிந்தனை அதுதான் கூறுகிறது என்று பரிந்துரை செய்து அதுவே நடைமுறைப்படுத்தப்பட்டது.

அவ்வை நடராஜன் அவர்களின் இலக்கிய நந்தவனத்தில் இருந்து பூத்த மலர்கள் ஏராளம். எல்லா மலர்களுமே இப்போது தமிழகம் மட்டுமல்லாது உலகம் எங்கும் மனம் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

விண்ணுலகம் சென்று இருக்கின்ற அவ்வை நடராஜன் அவர்கள் அங்கேயும் தித்திக்கும் தேன் தமிழில் அங்குள்ள எல்லோருக்கும் பாடம் நடத்திக்கொண்டிருப்பார். எங்கு சென்றாலும் தமிழை சுவாசிக்காமல் அவரால் இருக்க முடியாது.

பேசு தமிழ் உள்ளவரை திரு. அவ்வை நடராஜன் அவர்களுடைய தமிழ் தொண்டு அவருடைய தமிழ் பெருமையை இச்சமூகம் பேசிக்கொண்டு இருக்கும்.

- C.S. நாராயணசாமி
அண்ணாநகர், சென்னை – 101. 98400–28815

CREW அறக்கட்டளை

40, சப்தகிரி காலனி, சென்னை–83.

முக்கிய அறிவிப்பு

பொறியியல், மருத்துவம், கால்நடை, சட்டம், பட்டயம் மற்றும் பட்டபடிப்பு தொடர்பான கலந்தாய்வு, தொடர்ந்து நடைபெற்று வருவதால், CREW அறக்கட்டளைக்கு, மாணவர்கள், கல்வி உதவி பெற 31.12.2022 முடிய விண்ணப்பங்கள் அனுப்ப கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தி.நெ. முத்துக்குமாரசாமி,
கௌரவ ஆலோசகர்,
CREW அறக்கட்டளை.
09445451604

நட்சத்திரங்களும், மரங்களும்

(தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்பிரமணியன், சிதம்பரம்.

அலைபேசி : 9443665642

8. பூசம் :

இருபத்தேழு நட்சத்திரங்களுள் எட்டாவதாக வரும் பூசம் நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் கடக இராசியில் இடம் பெறுவதால் இது ஒரு முழுமையான நட்சத்திரமாகும். இந்த நட்சத்திரத்தின் கிரகாதிபதி சனிபகவான். இராசி அதிபதி சந்திரனாவார். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஆரம்ப திசை சனி திசையாக அமையப்பெறும். இந்த நட்சத்திரத்தின் கணம், தேவகணம், அதிதேவதை பிரகஸ்பதி என்றும் தேவகுரு – குணம் தாமசம், மிருகம்– ஆடு, பட்சி –நீர்க்காகம், விருட்சம் – அரச மரம் என்பவையாகும். அயோத்தியை, இராமனுடைய பெயரால் ஆண்ட பெருந்தன்மைமிக்க, இராமனின் சகோதரனான பரதன் பிறந்தது பூசம் நட்சத்திரமாகும். இது ஒரு சிறந்த நட்சத்திரமாகக் கருதப்படுகிறது. தைப்பூசத் திருநாளில்தான் பார்வதிதேவி உடனிருக்க சிவபெருமான் நடனக் காட்சி அருளினார். தைப்பூசத்தில் தான் அசுரனை அழிக்க முருகப் பெருமான் பார்வதி தேவியிடமிருந்து வேலினைப் பெற்றார். தைமாதத்தில் பூசம் நட்சத்திரம், பௌர்ணமியுடன் இணைந்து வரும். தைப்பூசத்தில் தான் வள்ளியம்மை முருகப்பெருமானின் கரம் பிடித்தார்.

---------- நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம் காணாதே போதியோ ? பூம்பாவாய், தி.மு. 2–47–5 என்று திருஞானசம்பந்தர், திருமயிலாப்பூரில் பூம்பாவையை எழுப்பிய பதிகத்தில் தைப்பூசத்தைச் சிறப்பித்துப் பாடுகிறார். தைப்பூசத்தன்று காவிரி போன்ற புனித நதிகளில் நீராடினால் பாவங்கள் விலகும். இதனை ஞானசம்பந்தரின்,

பூசம் புகுந்து ஆடிப்பொலிந்து அழகு ஆய
ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ.... (தி.மு. 1–32–5)

என்னும் தேவாரம் உணர்த்துகிறது.

பூசம் நட்சத்திரத்துக்குரிய விருட்சம் அரச மரமாகும். அரசமரத்தை தலமரமாகக் கொண்டு விளங்கும் தலங்கள், திருவாவடுதுறை, ஆவூர்ப்பசுபதீச்சரம், திருச்சுழியல், திருநல்லம் (கோனேரிராஜபுரம்), திருஅரசிலி (ஒழுந்தியாப்பட்டு), திருப்பரிதி நியமம் (பருத்தியப்பர் கோயில்) திருச்சேறை ஆகியவையாகும். இத்திருத்தலங்கள் பூசம் நட்சத்திரக்காரர்களுக்குப் பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன. இத் தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்ய அவர்களுக்கு இன்னல்கள் நீங்கி நன்மைகள் விளையும். மேலும் அரச மரக்கன்றுகளை வாய்ப்புள்ள இடங்களில் நடுவதும், அவற்றைப் பராமரிப்பதும், வணங்குவதும் மிகச்சிறந்த பலன்களை அளிக்கும் ஸ்ரீதட்சிணா மூர்த்தியை வணங்கி வருவதும் நன்மைகள் நல்கும்.

பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் உறவுகளை நேசிப்பவர்களாகவும், கல்வி, கேள்விகளில் சிறந்தவர்களாகவும் இருப்பார்கள். சாந்தமான குணம் படைத்தவர்கள், வழக்காடுபவர்கள், மற்றும் தர்ம சிந்தனை உடையவர்கள். சுகபோக வாழ்க்கையை விரும்புபவர்கள். சட்டென்று கோபம் கொண்டாலும் மறக்கும் குணம் உண்டு.

வரலாறு :

அரசமரத்தை விருட்சமாகக் கொண்ட திருவாவடுதுறைத் தலமானது மயிலாடுதுறை – கும்பகோணம் சாலையில் திருவாலங்காடு என்னும் பேருந்து நிறுத்தத்தின் அருகே அமைந்துள்ளது. இத்தலபுராணத்தின்படி சிவபெருமானும், திருமாலும் பார்வதி தேவியை நடுவராக கொண்டு சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த போது, இறைவி தனது தமையனுக்கு ஆதரவாகச் செயல்பட்டார் என்பதால் பூமியில் பசுவாகப் பிறக்குமாறு இறைவனால் சாபம் இடப்படுகிறார். மாதவனும் மாடு மேய்க்கும் இடையனாக மாறுகிறார். இப்படி பசுவாகப் பிறந்த பார்வதிதேவி பல இடங்களில் இறைவனைப் பூசித்துவிட்டு இத்தலத்துக்கு வந்து சிவனை வேண்டித் தவம் இருந்தார். சிவபெருமானும் அவருக்குக் காட்சி தந்து அம்மையைத் தன்னுடன் அணைத்துக்கொண்டு எழுந்தருளினார் ''கோ'' என்றால் பசு என்று பொருள் தரும். பசுவுக்கு விமோசனம் அளித்ததால் இறைவன், ''கோமுக்தீசுவரர்''எனப் பெயர் பெற்றார்.

திருவிசைப்பா பாடிய திருமாளிகைத் தேவர், கோயில் மதில் மேல் இருந்த நந்திகளை உயிர் பெறச்செய்து நரசிங்க மன்னனுடைய படைகளை விரட்டிய அற்புதம் நிகழ்ந்த தலம்.

முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு புத்திரப் பேறு அளித்த திருத்தலம்.

திருமூலர் 10–ம் திருமுறையாகிய திருமந்திரத்தை இங்குதான் அரச மரத்தடியில் யோகத்தில் அமர்ந்து ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் 3000 பாடல்களை அருளினார்.

திருஞானசம்பந்தர் தனது தந்தையின் வேள்விக்காக இறைவனிடம் ''இடரினும் தளரினும்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி பொற்கிழியைப் பெற்றதும் இத்தலத்தில்தான்.

தரும தேவதை இறைவனை வழிபட்டு அவருக்கு வாகனமாகும் பேறு பெற்றதும் இத்திருத்தலத்தில்தான்.

இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்ற இத்தலத்தில் தம்பதிகள் ஒற்றுமை வேண்டியும், புத்திரப்பேறு பெறவும் உரிய வழிபாடு செய்ய நன்மைகள் விளையும்.

அரச மரம்:

மரங்களின் அரசு என்னும் பொருளில் அரசமரம் என அழைக்கப்படும் இம்மரம், மழை மேகங்களை ஈர்க்கும் பால் வடியும் மரங்களில் ஒன்றாகும். இதன் தாவரவியல் பெயர், Ficus religiosa.Linn. என்பதாகும். Moraceae என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. மிகுதியான ஆக்சிஜனை வெளியிடும் இம்மரம், 30 மீட்டர் உயரம் வரை படர்ந்து வளரக் கூடியது. இதன் இலைகள் கூரிய முனையுடன் கூடிய இதய வடிவானவை. நுனிப்பகுதி கீழ்நோக்கி இருப்பதால் வான மண்டலத்து ஓசோன் படலத்திலிருந்து அதிக ஆக்சிஜன் பெற்று பூமிப்பரப்பில் விட வல்லது. ஆண், பெண் பூக்கள் தனித்தனியே பூக்கின்றன. பழங்கள் இலைக்கோணத்தில் காம்பில்லாமல் பழுப்பு நிறத்தில் காணப்படும். பறவைகளின் எச்சங்களிலிருந்து விதைகள், கட்டடங்கள், மற்றும் கடினமான இடங்களிலும் விழுந்து முளைத்து வீரியமுடன் வளரும்.

சிறப்புகள் :

அரச மரம் திருமூர்த்திகளின் வடிவம் எனவும், தினந்தோறும் அதனைச் சுற்றி வருபவர், மூவரையும் வணங்குபவராகவும், புண்ணிய உலகை அடைபவராகவும் ஆகிறார் எனப் புராணங்கள் கூறுகின்றன. பகவத்கீதை விபூதியோகம் என்னும் அத்தியாயத்தின் 26–வது சுலோகத்தில் கண்ணன், "நான் மரங்களில் அரச மரம்" என்கிறான்.

அனைவரும் பக்தியுடன் வணங்கும் இம்மரத்தை யாவரும் வெட்டவோ, காயப்படுத்தவோ அஞ்சுவர். இம்மரத்தினடியில் அமர்ந்து கௌதம புத்தர் ஞானம் பெற்றார் என்பதால், பௌத்தர்களும் இதனைப் போதிமரம் எனப்போற்றி வணங்குகின்றனர். அரச மரத்தடியின் கீழ் விநாயகர், நாகர் போன்ற தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து வலம் வந்து வணங்குவதை நாம் காணலாம். ஊர் மக்கள் கூடி கிராம சபையில் நியாயம் பேசி நீதி பெறுவதும் அரச மரத்தடியில்தான். ஏனெனில் அரச மரத்தடியில்தான் உண்மையான நியாயம் கிடைக்கும் என்றும் நம்பிக்கை உள்ளது. வேம்பும் அரசும் அருகருகே நட்டு திருமணச் சடங்கு செய்து வணங்குவதாலும் வலம் வருவதாலும் நல்ல உடல் நலமும், மகப்பேறும் உண்டாகும் என்னும் நம்பிக்கையும் உள்ளது.

திரு அரசிலி என்னும் தொண்டை நாட்டுத் திருத்தலத்தில் இறைவன் அரச மரத்தையே தனது உறைவிடமாகக் கொண்டு அருள்பாலிப்பதால் அரசிலி நாதர் எனப்பெயர் பெற்றார்.

மருத்துவப் பயன்கள் :

பழுத்த இலைகளைத் தீயில் இட்டும் பொசுக்கி, சாம்பலை தேங்காய் எண்ணெயில் குழைத்து தீப்புண்பட்ட இடங்களில் பூசிவர புண்கள் ஆறும்.

இலையும்,இளந்தண்டும்நல்லமலமிளக்கியாகச் செயல்படும். இளந்தண்டை நறுக்கி பாலில் கொதிக்க வைத்து சிறிது சர்க்கரை சேர்த்து காலையில் பானமாக அருந்திவர நல்ல ஊட்டச்சத்தும், புத்துணர்ச்சியும் கிடைக்கும்.

மரப்பட்டையை இடித்துச் சாறு ஆக்கி நீருடன் கலந்து வாய்கொப்புளிக்க ஈறுகள் பலமாகும். பல்வலிக்கும் நல்லது. காய்ந்த மரப்பட்டையினைப் பாலில் இட்டுக்காய்ச்சி அருந்திவர ஆண்மை பெருகும்.

கனிகளை உலரவைத்துப் பொடி செய்து நீரில் கலந்து 14நாட்கள் அருந்திவர ஆஸ்துமா குணமடையும். பெண்களுக்கு குழந்தைப்பேறு அமையப்பெறும். கனிகள் மலமிளக்கியாகவும் செயல்படும்.

அரசமரம் ஒரு நாளைக்கு 1800 கிலோ கரியமில வாயுவை உட்கொண்டு 2400 கிலோ பிராண வாயுவை வெளியிடும். இதனால்தான் பெண்கள் அரசமரத்தைச் சுற்றிவர அவர்களுக்கு இரத்த ஓட்டம் சீராகி புத்திரப்பேறு கிடைக்கிறது எனலாம்.

அரசமரக் குச்சிகளை மந்திர பூர்வமாக அக்னியில் இட்டுப் பூசை செய்வதால் தீயவை நசிந்து நன்மைகள் பெருகும். அரசமரக் குச்சிகளை அக்னியில் இடுவது குருபகவானுக்கானது.

எனவே பூசம் நட்சத்திரத்துக்குரியவர்கள் பரிகாரத் தலங்களைச் சென்று வழிபடுவதும் அரசமரக்கன்றுகளை நட்டு பராமரிப்பதும் நல்லது.

அடுத்த இதழில் ஆயில்யம் நட்சத்திரம் பற்றி அறிவோம்.

– (பயணிப்போம்)

வருந்துகிறோம்

சென்னை கார்காத்தார் சங்கத்தின் துணை தலைவர் திரு. கனக சுப்ரமணியன் அவர்களின் சகோதரர் திரு. K. விஜயகுமார் அவர்கள் 28.11.2022 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்கள். அவரது பிரிவால் வாடும் அன்னாரது குடும்பத்திற்கு சென்னை சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

.....

குடவாசல் தாலுக்கா, இலையூர் S. ராஜகுமார் (திருச்சி) அவர்களின் தாயார் திருமதி. S. ஆண்டாள் அம்மாள் அவர்கள் 20–09–2022 அன்று இயற்கை எய்தினார்கள்.

தமிழ் மொழி பேசுவோருக்கு ஆயுசு அதிகம்!

ஞான அம்புலி

மனிதர்கள் விடும் மூச்சுக்கும் அவர்களது ஆயுள் பலத்துக்கும் தொடர்வு உள்ளதை நமது வேத சாஸ்திரங்கள் விளக்கமாக கூறியுள்ளன. நவீன ஆராய்ச்சி வல்லுநர்களும் இக்கருத்தை வலுப்படுத்தியுள்ளார்கள்.

சமீபத்தில் உலக பன்மொழி ஆராய்ச்சி கூடம் ஒன்றில், அனைத்துமொழிகளின் உச்சரிப்பு நேரம், அப்பொழுது வெளிப்படும் மூச்சுக்காற்று அளவு காற்றின் வேகம் ஆகியவற்றை பற்றி கணக்கெடுத்து ஒரு பட்டியல் வெளியிட்டுள்ளார்கள். அதிலே தமிழ்மொழி பேசுபவர்களின் ஆயுட்காலம் அதிகம் என குறிப்பிட்டள்ளார்கள் அதற்கு அவர்கள் கூறும் காரணம் பின்வறுமாறு;

யானை ஒரு நிமிடத்துக்கு 4 தடவைதான் மூச்சு விடுகிறதாம். அதே நேரத்தில் ஆமை ஒரு தடவை மூச்சுவிட 4 நிமிடம் எடுத்துக்கொள்ளுமாம். அதனால்தான் இவ்விரண்டின் ஆயுட்காலம் மற்றவைகளைவிட மிக அதிகமாம்.

மனிதனைப் பொருத்தவரை சாதாரண நிலையில் 1 நிமிடத்துக்கு 15 தடவையும் நடக்கும்போது 18 தடவையும் ஓடும்போது 28 தடவையும், தூங்கும்போது 32 தடவையும் மூச்சிழுத்து விடுகிறார்களாம். பேசும்போது மொழிக்கு மொழி மூச்சு விடும் நேரம் நிறைய மாறுபடுகிறது. இதில் ஆச்சரியமான விஷயம் தமிழ்மொழி பேசுபவர்கள் மற்ற அனைத்து மொழிகளை பேசுபவர்களை விட குறைந்த அளவு மூச்சு விடுவதாக கண்டறிந்துள்ளார்கள். இம்மொழி பேசுபவர்கள் ஒரு நிமிடத்திற்கு 12 தடவைதான் மூச்சிழுத்து விடுவதாக தெரிகிறது. இதற்கான காரணத்தையும் ஆராய்ந்து சொல்லப்பட்ட செய்தி; தமிழ் மொழியில் பேசும்போது, வல்லினத்தை மார்பிலிருந்தும் மெல்லினத்தை மூச்சியிலிருந்தும் இடையினத்தை கழுத்திலிருந்தும் பேசுகின்ற காரணத்தால் மூச்சுக்காற்றின் அளவு குறைகிறது. மற்ற மொழிகளில் ஒரே சீரான வார்த்தைகளை பயன்படுத்தப்படுவதாலும் அவை அனைத்தும் மூச்சுக்காற்றால் வருவதாலும் ஒரு நிமிடத்தில் விடும் மூச்சுக்காற்று அதிக எண்ணிக்கையிலுள்ளதாம். தமிழ்மொழி பேசுபவர்களுக்கு மேலும் ஒரு பெரிய நற்பயனானது பேசும்போது இயக்கப்படும் மார்பு, தொண்டை, கழுத்து ஆகிய உறுப்புகள் பயனும் பலனும் பெருகிறதாம். அதனால்தான் தமிழில் எவ்வளவு நேரம் பேசினாலும் களைப்போ, சோர்வோ ஏற்படாது எனச் சொல்லப்படுகிறது. தமிழ்மொழி தெய்வமொழி என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்!

(படித்தலி பிடித்தது)

குரு போட்டோ
ஸ்டுடியோ & வீடியோ

64 பட்டமங்கல தெரு, ராஜ்பில்டிங் ஷாப்பிங் காம்பளக்ஸ்,
GRT எதிர்புறம், மயிலாடுதுறை.

திருமண நிச்சயதார்த்தம் போட்டோ, வீடியோ
எடுக்க 10 தினங்களுக்கு முன்னதாக
ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 10% கேஷ் டிஸ்கவுண்ட்

9443395554,9655848055

gurustudio1980@gmail.com, GPS GURU STUDIO, gps_gurustudio

சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : மங்களம், அலமேலு, ஆண்டாள், சித்ரா, வசுமதி, தீபிகா, கோமதி, பிரியா, கௌரி, பவித்ரா

இடம் :- நடேசன் பார்க் . தி நகர்

அலமேலு – என்னம்மா இன்னைக்கு யார் ஆரம்பிக்கிறீங்க எதைப் பத்தி சொல்லப்பபோறீங்க.

கௌரி – வழக்கம் போல் சித்ராதான் ஆரம்பிக்குணும் எதைப் பத்திங்கறத மாமிகள் தான் சொல்லணும்.

ஆண்டாள் – உலக நாடுகளில் உள்ள விசித்திர சட்டங்கள் பத்தி எல்லாம் சொல்லி இருக்கீங்க நம்ம நாட்டு சுதந்திரப் போராட்ட வரலாறு பத்தி கொஞ்சம் சொல்லுங்களேன்.

பவித்ரா – அதுவும் சரிதான் மாமி சட்டத்தைப் பத்தியே கேட்டுகிட்டு இருந்தா உங்களுக்கும் கொஞ்சம் போர் அடிக்கும் சரித்திரத்தைப் பத்தி சொன்னா கொஞ்சம் இன்ட் ரெஸ்டா கேப்பீங்க.

ஆண்டாள் – அதுக்காக இல்லம்மா நம்ம நாட்டு வரலாற்றைப் பத்தி நாமும் கொஞ்சம் தெரிஞ்சுக்கலாம் இல்லியா அதுக்குதான்.

கௌரி – அவசியம் சொல்றோம் மாமி ஆனா இதில எங்கள விட உங்களுக்குத்தான் அதிகம் தெரியும். அப்போதைகப்போது நீங்க சொல்லி உதவுங்க சித்ரா ஆரம்பி.

சித்ரா – பூமியில் சொர்க்கம் என்று ஒன்று இருக்குமானா அது இந்தியா தான் என பேரரசர் ஜஹாங்கீர் கூறினார். இயற்கை வளங்களும் பெருமதிப்புள்ள பொருட்களும் இந்தியாவில் காணப்பட்டமையினால் உலகின் எல்லா பகுதிகளில் இருந்தும் அந்நிய நாட்டவர்கள் இந்தியாவை நோக்கி படையெடுத்தனர்.

அலமேலு – அப்படின்னா வெள்ளைக்காரன்னு சொல்றோமே அந்த பிரிட்டிஷ்காரங்க இல்லாம வேறு நாட்டவங்களும் இந்தியாவில ஆட்சி பண்ணினாங்களா.

சித்ரா – இந்தியாவிற்கு முதன் முதலில் போர்த்துக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டை துறைமுகத்தில் வந்து இறங்கினார். அவர் இந்தியாவில் இருந்த வாசனை திரவியங்கள், ஏலக்காய், கறுவா, ஏலம், முத்துக்கள், யானை தந்தம் போன்ற ஏராளமான வளங்கள் காணப்பட்டமையினால், வணிக நோக்கிலும் அதிகளவிலான அந்நியர்கள் வர துவங்கினார்கள். இது பாரததேசத்திற்கும் மக்களுக்கும் ஆபத்தாய் முடிந்தது.

மங்களம் – அவர் எப்போ வந்தார் எப்படி வந்தார்னு விபரமா சொல்லும்மா.

வசுமதி – அதை எல்லாம் நான் சொல்றேன்.

ஆப்பிரிக்காவின் கேப் ஆஃப் குட் ஹோப்பைச் சுற்றியதன் மூலம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு முதன்முதலில் பயணம் செய்ததற்காக வாஸ்கோடகாமா மிகவும் பிரபலமானவர். 1497 மற்றும் 1502 இல் தொடங்கி, இரண்டு பயணங்களின் போது, வாஸ்கோடகாமா மே 20, 1498 இல் இந்தியாவை அடைவதற்கு முன்பு தென்னாப்பிரிக்காவின் கடற்கரை யோரங்களில் இறங்கி வர்த்தகம் செய்தார்.

வளம் மிக்க இந்தியாவை நாடி போர்த்துக்கீசியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஐரோப்பியர்கள் வந்து கொண்டிருந்தார்கள். பிரிட்டனைச் சேர்ந்த கிழக்கிந்திய நிறுவனத்தால் அனுப்பப்பட்ட ராபர்ட் க்ளைவ் படை, 1757ஆம் ஆண்டு பிளாசிப் போரில் வங்காள நவாப்பைத் தோற்கடித்தது. இதன் மூலம் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி காலூன்றியது. கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவின் பிற பகுதிகளையும் தங்களின் ஆட்சிக்குள் கொண்டு வந்தது.

அலமேலு – இந்திய மன்னர்கள் யாரும் எதிர்க்க வில்லையா ?

தீபிகா – அவர்கள் ஆயுத பலம் அதிகமாக வைத்திருந்தமையால் இந்திய அரசுகள் ஆங்கிலேயர்களிடம் அடிபணிய நேரிட்டது. பல அரசுகள் ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டும் சூழலும் உருவானது.

மன்னராட்சி பகுதிகள் மாகாணங்களாக்கப்பட்டன. எல்லைக்குட்பட்ட மன்னர்களிடம் இருந்து வரி வசூல் செய்தனர். வரி செலுத்த மறுத்தவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. சொந்த நாட்டிலேயே அந்நியருக்கு வரி செலுத்தும் அவல நிலை இந்தியர்களுக்கு ஏற்பட்டது.

அவற்றை கண்டு சில மன்னர்கள் மாத்திரம் ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டனர். இவர்களுள் தமிழ்நாட்டில் மருது பாண்டியர்கள், பூலித்தேவன் முதலான மன்னர்களை குறிப்பிடலாம்.

அந்நியர்களிடம் அடிபணிந்து வாழ்வதை விட போராடி உயிர் நீப்பது மேல் என இவர்கள் பேராடி வீர மரணம் எய்தினர். இவ்வாறு இந்தியாவில் அடக்குமுறைகளும் அதனை எதிர்க்கும் போராட்டங்களும் இடம் பெற்றன.

விடுதலை வேட்கையின் ஆரம்பம்.

ஆயுத வழி போராட்டங்கள் மட்டும் போதாது என உணர்ந்த காந்தியடிகளின் வருகை இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் புதுமையான அத்தியாயத்தை உருவாக்கியது. எதிர் தாக்குதல்கள் எதுவும் இல்லாமல் அகிம்சை வழியில் போராட்டங்களை உருவாக்கினர் அகிம்சை வழியில் உப்பு சத்தியாகிரகம் எனும் போராட்டம் இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் மிகவும் முக்கியமானது. வெள்ளையனே வெளியேறு என்ற கோஷம் இந்தியாவெங்கும் எதிரொலிக்க துவங்கியது.

மறுபுறம் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் ஆயுத வழியில் ஒரு பெரிய போராட்டத்தை முன்னெடுத்தார்.

இந்த பெரும் போராட்டத்தில் நேருஜி, ராஜாஜி, பகத்சிங் போன்றவர்களும் தென்னகத்தில் பாரதியார், வ.உ.சி, சுப்ரமணியசிவா, வாஞ்சிநாதன் போன்றவர்களும் மிக முக்கிய பங்காற்றி உள்ளார்கள். பல வீரர்கள் தமது வாழ்க்கையினை இந்திய சுதந்திரத்துக்காக தியாகம் செய்தனர்.

1780ஆம் ஆண்டு கிழக்கிந்திய நிறுவனத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடினார் சிவகங்கை ராணி வேலுநாச்சியார். இவரே இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்ட வீராங்கனை. இவருக்குத் திப்புசுல்தானின் தந்தை ஹைதர் அலி, படைகளைக் கொடுத்து உதவினார்.

இந்தியாவின் பிற பகுதி மன்னர்களைப் போல அல்லாமல், ஆங்கில அரசாங்கத்துக்கு அச்சத்தை ஏற்படுத்தினார் மைசூரை ஆண்ட திப்புசுல்தான். இவரின் சொந்த ஏவுகணை தொழில்நுட்பத்தைக் கண்டு ஆங்கிலேயரே ஆச்சரியப்பட்டனர். போரில் கொல்லப்பட்டாலும் திப்புசுல்தான் ஏற்றி வைத்த 'சுதந்திரத் தீ' இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

1806ஆம் ஆண்டு இந்தியப் படைகள் ஐரோப்பிய உடைகளை அணிய வேண்டும், மத அடையாளங்களை வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஆங்கிலேயரிடமிருந்து உத்தரவு வந்தது. இதை எதிர்த்து வேலூர் கோட்டையில் சிப்பாய் கலகம் வெடித்தது. இதுவே பின்னால் வந்த சிப்பாய் புரட்சிக்கு முன்னோடி.

தீரன் சின்னமலை, வீரபாண்டிய கட்டபொம்மன், கர்நாடகத்தின் கிட்டூர் சென்னம்மா போன்றவர்கள் ஆங்கிலேயப் படைகளைத் துணிச்சலாக எதிர்த்தனர்.

1857... துப்பாக்கிக் குண்டுகளில் பசு, பன்றியின் கொழுப்பு தடவப்பட்டதாக வதந்தி கிளம்பியது. இதை எதிர்த்து சிப்பாய்கள் கலகம் செய்தனர். இதனைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்தன. ஆங்கிலேயர்கள் இரும்புக்கரம் கொண்டு போராட்டக்காரர்களை அடக்கினர்.

1858ஆம் ஆண்டு குவாலியரில் நடைபெற்ற போரில் ஜான்சியின் ராணி லஷ்மிபாய் கொல்லப்பட்டார்.

இதுவரை கிழக்கிந்திய நிறுவனம் மூலம் ஆட்சி செய்து கொண்டிருந்த ஆங்கிலேய அரசு பின்னர் நேரடியாகவே இந்தியாவை ஆட்சி செய்ய ஆரம்பித்தது

அலமேலு – சரிம்மா நேரமாகி விட்டது இதோடு இன்றைக்கு நிறுத்திக் கொள்வோம்

அத்துடன் எல்லோரும் கலைகிறார்கள்

ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுபிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

அலுவலக நேரம் : மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

அங்கோர்வாட்

உலகின் மிகப் பெரிய கோவிலான அங்கோர்வாட், கம்போடியா நாட்டில் உள்ளது. இது ஒரு கலைப் பொக்கிஷம். தமிழ் மன்னர் இரண்டாம் சூரியவர்மன், ராஜராஜ சோழன் வழிவந்தவர் கட்டிய கோவில் இது. போரில் வென்றதால் கிடைத்த இடத்தில் கட்டியதாம். இக்கோவில் 500 ஏக்கர் பரப்பளவு கொண்டது. சுற்றிலும் அகழியால் சூழப்பட்டது. அந்த அகழியே 200 மீட்டர் அகலம், 4 மீட்டர் ஆழம், 6 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டது. ஒரு சுற்றுப்புறச் சுவரே மூன்றரை கிலோ மீட்டர் நீளமானது.

12–ஆம் நூற்றாண்டில் இரண்டாம் சூரியவர்மனால் தொடங்கப்பட்ட இப்பணி நிறைவு பெற 27 ஆண்டுகள் ஆகி உள்ளது. இவர் கட்டிய போது வைணவக் கோவிலாக இருந்ததாகவும், ஆறாம் ஜெயவர்மன் ஆட்சிக்கு வந்தபின் புத்த கோவிலாக மாற்றப்பட்டதாகவும் ஒரு குறிப்பு உள்ளது.

அங்கோர்வாட் கோவில் மூன்று அடுக்குகளாகத் தோற்றமளிக்கிறது. முதல் அடுக்கில் மகாபாரதச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் அடுக்கில், நான்கு புறமும் சதுர வடிவாக கட்டப்பட்டுள்ளது. மூன்றாம் அடுக்கில் வானை நோக்கும் ஏவுகணையாய் கோபுரங்களும், நான்கு பிரம்மாண்ட வாசல்களும் கொண்ட இக்கோவிலில், நடுவில் உள்ள அடுக்கின் சுவரில் சொர்க்கம் செல்லும் பாதை, நரகம் செல்லும் பாதை வடிவமைப்பு சிற்பமாக செதுக்கி உள்ளார்கள். சூரியவர்மன் ஆட்சியின் போது அங்கோர்வாட் அந்நாட்டின் தலைநகராக இருந்துள்ளது.

சிவனுக்கு எழுப்பப்பட்ட மிகப்பெரிய அடையாளம் தஞ்சை பெரிய கோவில் என்றால், விஷ்ணுவுக்கு எழுப்பப்பட்ட உலகிலேயே மிகப்பெரிய கோவில் அங்கோர்வாட்.

இரண்டாம் சூரியவர்மன் இறந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு சம்பா இனத்தவரால் கோவில் ஆக்ரமிப்பு செய்யப்பட்டது. ஒரு இனம் இருந்ததற்கான அடையாளத்தை அழிக்க வேண்டுமென்றால், அவர்களின் பாரம்பரியத்தை அழித்தாலே அந்த இனம் அழிந்ததற்குச் சமம். இதை சம்பா இனத்தவர்களும் செய்தார்கள். விஷ்ணு வழிபாட்டுத் தலமாக இருந்த இந்த கோவிலை 1432ம் ஆண்டுக்கு பிறகு புத்தவழிபாட்டுத்தலமாக மாற்றி, மூலவர் புத்தராக மாற்றி நிறுவி விட்டார்கள் என்றும் வரலாற்றுக் கூற்று ஒன்று கூறுகிறது.

200 கற்களால் ஆன சிரிப்பு முக கட்டுமானம் ஒன்றும் இங்கு உள்ளது. இதற்கு முன்பாக நின்று வணங்கினால் அதிர்ஷ்டம் கொழிக்கும் என ஐதீகம்.

கம்போடியாவில் பொதுவாக கிழக்கு நோக்கியே கோவில்கள் கட்டப்பட்டிருக்கும். இக்கோவில் மேற்கு பார்த்து கட்டப்பட்டுள்ளது. சூரிய அஸ்தமனமாகும் திசை என்பதால், அதாவது முடிவை நோக்கி கட்டப்பட்டதால், இதை கல்லறைக் கோவில் என்றும் சொல்கிறார்கள். மறைந்த மன்னர்களின் அஸ்தியை இக்கோவில் கோபுரத்தில் வைத்து பாதுகாப்பதாகவும் சொல்லப்படுகிறது. சூரிய உதயத்தையும், அஸ்தமனத்தையும் பார்க்க உலகில் இதைவிட சிறந்த இடம் இல்லை எனலாம். கோள்களில் சூரிய அடிப்படையில் கட்டி உள்ளார்கள்.

இந்த சிறப்பு வாய்ந்த கோவிலை மேலும் சிறப்பிக்கும் வகையில் கம்போடிய அரசு அந்நாட்டு தேசியக் கொடியில் இக்கோவிலை தேசியச்சின்னமாக பொரித்து வைத்துள்ளார்கள். அந்த நாட்டின் கரன்சியிலும் இக்கோவில் இடம் பிடித்துள்ளது.

1992–ல் யுனெஸ்கோ வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டு, மேலும் சிதைவுறாமல் பராமரிக்கப்பட்டும் வருகிறது. ஆண்டுதோறும் இக்கோவிலைக் காண 20 லட்சம் மக்கள் வருவதாகச் சொல்கிறார்கள்.

உலக அதிசயங்களைக் கணிக்க தயாரித்த பட்டியலில் 21 அதிசயங்களில் இதுவும் இடம் பிடித்து இருந்துள்ளது. நாம் இதை எட்டாவது அதிசயம் என்றே கூறலாம்.

எந்த ஒரு கேமராவிலும் இக்கோவிலை முழுமையாக படம் பிடிக்க முடியாது என்பதே இதன் பிரம்மாண்டத்தைப் பறைசாற்றும். 1000 அடி உயரத்திலிருந்து தான் இதன் முழு தோற்றத்தை படம் பிடிக்கலாம். படம் பிடிக்கவே இவ்வளவு சிரமம் என்றால் அக்காலத்தில் கட்ட எவ்வளவு சிரமம் இருந்திருக்கும்! பிரமிப்பாகத்தான் உள்ளது அல்லவா?

எந்த தொழில்நுட்பமும் இல்லாத காலத்தில் கட்டிமுடிக்க 27 ஆண்டுகள் ஆன இந்த கோவிலை, இக்காலத்தில் கட்ட வேண்டுமென்றால் இவ்வளவு தொழில் நுட்பத்திலும் 200 ஆண்டுகள் ஆகும் என்பது பொறியாளர்களின் கூற்று.

நம் வம்சாவழியினர் கட்டிய கோவில் என்ற பெருமை நமக்கு உண்டு. தமிழரின் பெருமையை எடுத்துக்காட்டும் காலத்தை வென்ற காவியமாக, பல நூற்றாண்டுகளாகவும் கடந்து அங்கோர்வாட் கோவில் கம்பீரமாக இன்றளவும் நிமிர்ந்து நிற்கிறது.

– கீரந்தங்குடி நீலாராஜசேகரன்,
கும்பகோணம்–2. Cell No - 9751065491

வியப்பூட்டும் பிரபஞ்சம்

வால் நட்சத்திரங்கள் (Comets)

ஆதிகால மக்களின் மூடநம்பிக்கையும், பயமும்:

கி.பி. 1200 முதல் 1650 வரை, வால் நட்சத்திரங்களை கண்ட மக்கள் பயந்து போனார்கள். வால் நட்சத்திரங்கள், பூமியில் உள்ளவர்களுக்கு தெரிந்தால், பூமியில் நிலநடுக்கம், புயல், மிக அதிக வெப்பம் அல்லது மிக அதிகமான குளிர், வேளாண் உற்பத்தி குறைவால் ஏற்படும் பஞ்சம், மக்களுக்கு நிரந்தர வியாதிகள், அயல் நாட்டு போர், மற்றும் விலை வரி உயர்வு என பல பேரழிவுகள் ஏற்படும் என்று நம்பி பயத்தில் வாழ்ந்தார்கள் என்ற குறிப்பு உள்ளது. கி.பி. 1700–இல் மேற்கண்டவை எல்லாம், வால் நட்சத்திரங்களால் ஏற்படுபவை அல்ல என்று சில அறிவியல் அறிஞர்கள் உறுதி செய்தார்கள்.

வால் நட்சத்திரம் என்பது தவறான பெயராகும்:

வானூர்தி விபத்திற்குள்ளாகும் பொழுது, அதிகம் பேசப்படும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சொல் கருப்புப் பெட்டி என்பதாகும். கருப்புப் பெட்டி கிடைத்தால் தான், விபத்திற்குள்ளான காரணம் தெரியும். அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெட்டி கருப்பு நிறத்திற்கு பதிலாக ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். ஆனாலும் Black Box என்று ஆங்கிலத்திலும், கருப்புப் பெட்டி என்று தமிழிலும் பல ஆண்டுகளாக சொல்லப்படுகிறது. கருப்புப் பெட்டி என்ற பெயர், பொருத்தமில்லாத பெயராக உள்ளது. இதை ஆங்கிலத்தில் Misnomer என்று சொல்லுவார்கள். வால்நட்சத்திரங்கள் என்பவை, அறிவியல்படி நட்சத்திரங்களே அல்ல. நட்சத்திரங்கள் என்பவை வெப்பம் மிகுந்த மிகமிகப் பெரிய நெருப்பு பந்துகள் போன்றவையாகும். ஹீலியம் மற்றும் நைட்ரஜன் என்ற இரண்டு மூலகங்களால் அவை எந்நேரமும், கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு எரிந்துகொண்டே இருக்கும். மேலும் நட்சத்திரங்கள் என்பவை நிலையான இருப்பிடத்தை கொண்டவை. மேற்கண்ட தகுதிகளில் ஒன்று கூட வால் நட்சத்திரங்களுக்கு கிடையாது. அப்படி இருந்து அவை தமிழ்மொழியில் வால் நட்சத்திரங்கள் என்று சொல்லப்படுகின்றன. ஆனால் ஆங்கில மொழியில் Star அல்லது Star with tail என்று சொல்லப்படாமல் Comet என்று சொல்லப்படுகின்றது.

வால் நட்சத்திரங்கள் என்றால் என்ன?

விண் கற்களைப் போன்ற மிகப் பெரிய வான்பொருட்கள், பனிக்கட்டி, உலர் பனிக்கட்டி (Frozen gas is called as Dry ice) பாறை துகள்கள், தூசு மற்றும் அங்ககப் பொருட்களால் சூழப்பட்டு, சூரியனைச் சுற்றி வந்தால், அவை அறிவியலில் Comets என்றும், தமிழ் மொழியில் வால் நட்சத்திரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் Dirty Snow Balls என்றும் சொல்லப்படுவதுண்டு. வால் நட்சத்திரமானது, கரு (Nucleus) அதன் வெளிப்புறத்தில் Coma எனப்படும் வளி மண்டலம், அயனிகளைக் கொண்ட வால்பகுதி (Gas or ion tail) மற்றும் தூசுகளைக் கொண்ட வால்பகுதி (Dust tail) என நான்கு பகுதிகளைக் கொண்டது. கரு என்பது சில கிலோ மீட்டர் விட்டம் கொண்டது. வால் நட்சத்திரங்கள் நீள் வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருபவை. தனது சுற்றுப் பாதையில் சூரியனை நெருங்கும் பொழுது, சூரியனின் வெப்பத்தால் உலர் பனிக்கட்டி மற்றும் பனிக்கட்டி ஆவியாகி அதிலிருந்து பிரிந்த அயனிகளால், அயனி வால் (Ion tail) உருவாகிறது. தூசுகள் ஒன்று சேர்ந்து Dust tail உருவாகிறது. இப்படியாக ஒரு வால் நட்சத்திரம் சூரியனை நெருங்கும் பொழுது, அருகருகே இரண்டு வால்கள் உருவாகி பிரகாசமான ஒளியைத் தருகின்றன. Dust tail மஞ்சள் அல்லது வெள்ளை நிறத்திலும், Ion tail நீல நிறத்திலும் காணப்படும். இந்த அமைப்பே நாம் காணும் வால் நட்சத்திரம்.

வால் நட்சத்திரங்களைப் பற்றிய ஆய்வு:

1986–ல் ஹேலி என்ற வால் நட்சத்திரத்தின் கரு பகுதி படம் பிடிக்கப்பட்டது. நாசா 2001–ம் ஆண்டு அனுப்பிய Deep space - 1 என்ற விண்கலம் "போரல்லி" என்ற வால்நட்சத்திரத்தின் கரு பகுதியை படம் பிடித்ததில், அந்த கரு பகுதியானது 8 கி.மீ. நீளம் இருப்பதாக அறியப்பட்டது. நாசா 2004–ம் ஆண்டு அனுப்பிய Star dust Mission என்ற விண்கலம் Wild-2 என்ற வால் நட்சத்திரத்தை மிக அருகில், அதாவது 236 கி.மீ. தூரத்தில் இருந்து படம் எடுத்து வந்தது. நாசா, 2005–ம் ஆண்டு ஜூலை மாதத்தில் அனுப்பிய Deep Impact என்ற விண்கலம் Temple-1 என்ற வால் நட்சத்திரத்தின் தன்மைகளை ஆராய்ந்து, பல விபரங்களை அறிய உதவியது. DIXI என்ற விண்கலம் 2010–ம் ஆண்டு Hartly-2 என்ற வால் நட்சத்திரத்தின் தன்மைகளை அறிய உதவியது.

வால் நட்சத்திரங்களை வகைப்படுத்துதல்:

வால் நட்சத்திரங்கள் ஒருமுறை சூரியனைச் சுற்றிவர ஆகும் கால அளவு, 200 ஆண்டுகளுக்கு அதிகமாக இருந்தால், அவை நீண்ட கால

வால்நட்சத்திரங்கள் என்று வகைப்படுத்தப்பட்டன. குறுகிய கால வால் நட்சத்திரங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடையே உள்ள குயிபேர் மண்டலம் என்ற பகுதியில் இருந்து சூரியனைச் சுற்றி வருகின்றன. குயிபேர் மண்டலம் என்பது, சூரியனிலிருந்து 1.52 AU தூரத்திற்கு அப்பால் உள்ளது. ஒரு AU தூரம் என்பது 15 கோடி கிலோமீட்டர் ஆகும். நீண்ட கால வால் நட்சத்திரங்கள் சூரிய மண்டலத்திற்கு வெளியே வெகு தூரத்தில் அதாவது ஒரு லட்சம் AU தூரத்தில் உள்ள ஊர்ட் மேகம். (Oort cloud) என்ற பகுதியிலிருந்து சூரியனை சுற்றி வருவதால், அவை 200 ஆண்டுகளுக்கும் அதிகமான கால அளவை எடுத்துக் கொள்கின்றன. மேலும் வால் நட்சத்திரங்கள் Periodic மற்றும் Non Periodic என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் சூரியனை ஒருமுறை சுற்றி வருபவை Periodic வகை எனப்படும். எடுத்துக்காட்டாக, ஹேலி என்ற வால் நட்சத்திரம் 75 அல்லது 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியனை சுற்றி வருகிறது. கால இடைவெளியை கணிக்க முடியாதவை Non Periodic எனப்படும்.

வால் நட்சத்திரங்களின் எண்ணிக்கை:

நவம்பர், 2021–ஆம் ஆண்டு நிலவரப்படி பிரபஞ்சத்தில் 4584 வால் நட்சத்திரங்கள் மட்டுமே அறியப்பட்டுள்ளன. கடந்த 14 ஆண்டுகளில் கண்டறியப்பட்ட வால் நட்சத்திரங்களின் எண்ணிக்கை 160. அதன் விபரம் இங்கு அளிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	2007	2008	2009	2010	2011	2012	2013
எண்ணிக்கை	12	7	8	4	13	10	16
ஆண்டு	2014	2015	2016	2017	2018	2019	2020
எண்ணிக்கை	9	16	5	18	10	15	17

ஆனால் சூரிய மண்டலத்திற்கு வெளியே ஊர்ட் மேகம் (Oort Cloud) பகுதியில் பலகோடி வால் நட்சத்திரங்கள் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

பெரிதும் அறியப்பட்ட வால் நட்சத்திரங்கள்:

1. ஹேலீஸ் வால் நட்சத்திரம்

இதை ஆய்வு செய்து கூறியவர் ஹேலீ என்பவராகும். ஆகவே அவருடைய பெயரே இந்நட்சத்திரத்திற்கு இடப்பட்டது. இது ஒரு குறுகிய கால வால் நட்சத்திரம். ஒரு முறை சூரியனைச் சுற்றிவர ஆகும் காலம் 75 முதல் 76 ஆண்டுகள் என ஹேலி கூறினார். சூரியனை நெருங்கும் காலத்தில் இரவில் நாம் காண முடியும். ஹேலி என்பவரின் ஆய்வுப்படி கி.பி. 1531, 1607, 1682 ஆண்டுகளில் மேற்கண்ட நட்சத்திரம் தெரிந்துள்ளது. கடைசியாக 1986–ஆம் ஆண்டு தெரிந்தது. ஆகவே இருபத்தி எட்டாம் தேதி ஜூலை மாதம் 2061 ஆண்டு இந்த நட்சத்திரம் மீண்டும் தெரிய உள்ளதால் பூமியில் உள்ள மக்கள் பார்க்க முடியும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஹேலீஸ் வால் நட்சத்திரக் கருவின் விட்டம் 11 கி.மீ. ஆகும்.

2. ஹேலி – பாப் வால் நட்சத்திரம்:

ஆலன் ஹேலி மற்றும் தாமஸ் பாப் என்ற இரு வானியல் வல்லுநர்களால் 23.07.1995–ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. வெற்றுக் கண்களால் பார்க்க கூடியது. மிகவும் பிரகாசமாக தெரியும். விட்டம் 60 கி.மீ. ஒரு முறை சூரியனைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் கால அளவு 2533 ஆண்டுகள். மீண்டும் தெரிய வாய்ப்புள்ள ஆண்டு 4380 ஆகும்.

3. ஹியா குட்டேக் வால் நட்சத்திரம்:

யூஜி ஹியாகுட்டேக் என்பவரால் 31.01.1996–ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. விட்டம் 1.25 கி.மீ. எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தெரியும். வெற்றுக் கண்களால் பார்க்க முடியும். மார்ச் மாதம் 1996–ல் பூமிக்கு அருகில் தெரிந்தது.

முக்கிய அறிவிப்பு

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு அன்பளிப்பு.

நம் "கார்காத்தார் ஒப்புரவு" மாத இதழை, கல்லூரி மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்க உள்ளேன்.

முதல் 100 மாணவர்களுக்கு, ஜனவரி 2023 முதல் ஒரு வருடம் அனுப்பப்படும். மாணவர்கள், தங்களது முழு விலாசத்துடன், கல்லூரி அடையாள அட்டையுடன் கடிதத்தை அனுப்ப வேண்டிய முகவரி.

தி.நெ. முத்துக்குமாரசுவாமி,
மனிதநேய மையம்,
64, ஜீவன் நகர் முதல் தெரு,
ஆதம்பாக்கம், சென்னை–88.

கடிதம் அனுப்புங்கள், "கார்காத்தார் ஒப்புரவு" உங்கள் வீடு தேடி வரும்.

இரண்டு வகை ஜன நாயகம் – பகுதி 2
TWO TYPES OF DEMOCRACY - Part 2

மேலையூர் ச. அன்பழகன் – 98413 73184

அதிபர் சார்ந்த முறையில் உள்ள நிறைகள் வரை சென்ற பகுதியில் பார்த்தோம். அம்முறையில் உள்ள குறைகள் மற்றும் இதர அம்சங்களைப் பற்றி இப்பகுதியில் பார்ப்போம்

அதிபர் சார்ந்த முறையில் உள்ள குறைகள்

குறைவான பொறுப்பு உள்ள நிர்வாகி

நிர்வாகியான அதிபர் மற்றும் அரசின் மீது நாடாளுமன்றம் எந்த வித கட்டுப்பாட்டினையும் பெறாததால் அரசாங்கம் நிர்வாகி யதேச்சாதிகாரமாக நடக்கக் கூடும்.

நிர்வாகிக்கும் நாடாளும் மன்றத்துக்கும் இடையே முடக்கம்

நிர்வாகி மற்றும் நாடாளும் மன்றத்துக்கு இடையே அதிகாரத்தில் அதிக–ப் பிரிவு இருப்பதால் இருவரிடையே அடிக்கடி அரசின் இரண்டு அங்கங்களான நிர்வாகம் மற்றும் சட்ட மன்றம் இவற்றிடையே அடிக்கடி மோதல் ஏற்பட வாய்ப்புண்டு. அதன் விளைவாக ஏற்படும் வீண் கால விரயத்தால் அரசின் திறமை குறைய வாய்ப்புண்டு.

தீடமான அரசாங்கம்

அதிபரைச் சார்ந்த அரசாங்கம் எப்போதும் ஒரு திடமான பிடிவாதமான அரசாங்கமாக இருக்கும் வளைந்து கொடுக்கும் தன்மை விட்டுக் கொடுக்கும் தன்மை இருக்காது என்ற குற்றச் சாட்டு ஒன்று உண்டு.

அமைப்பைக் கெடுக்கும்

இந்த முறையில் அதிபருக்கு அபரிமிதமான அதிகாரங்கள் உண்டு. இதில் நிர்வாகத்துக்கு அவர் இஷ்டப்பட்ட நபர்களைச் சேர்க்கலாம். அதாவது அவரது உறவினர்கள் வியாபாரக் கூட்டாளி போன்றவர்களைச் சேர்த்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கச் செய்யலாம். அது அமைப்பைக் கெடுக்கக் கூடும்.

ஒத்துழைப்பு குறைவு

அதிபர் சார்ந்த முறையில் உள்ள மற்று மொரு பலஹீனம் சட்டம் இயற்றுபவர்களுக்கு அதனை நிறை வேற்றும் நிர்வாகிக்கும் இடையே முழு ஒத்துழைப்பை உறுதி செய்வது கடினம், இருவருக்கும் இடையே அடிக்கடி ஏற்படும் மோதல்கள் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும்

வளைந்து கொடுக்காத தன்மை

இந்த முறையில் உள்ள பெரிய குறைபாடே இதில் உள்ள வளையாத தன்மை என்னும் முடிவில் உறுதியாக இருத்தல் மற்றும் இறுதிப் பொறுப்பை நிர்ணயிப்பதில் உள்ள நிலையில்லாமை வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாததற்குக் காரணம் ஒரு முறை அதிபர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நாடு அவரைப் பின்பற்ற வேண்டும் அதாவது அவரது கொள்கைகளை நாட்டு மக்கள் விரும்பினாலும் வெறுத்தாலும் அவரைப் பின்பற்றித் தான் தீர வேண்டும்

முக்கியமான பிரச்சினைகளில் தடங்கல்

சட்ட மன்றத்துக்கும் நிர்வாகத்துக்கும் அதிபர் இடையே அடிக்கடி ஏற்படும் மோதல்களால் முக்கியமான பிரச்சினைகளில் தடங்கல் ஏற்படக்கூடும்.

நாடாளும் மன்றம் சார்ந்த அரசாங்கத்தில் உள்ள நிறைகள்

நாடாளும் மன்றம் சார்ந்த ஜனநாயகத்தில் நிர்வாகத்துக்கும், பிரதமர் நிர்வாக உறுப்பினராக உள்ள நாடாளும் மன்றத்துக்கும் இடையே நல்ல ஒத்துழைப்பு இருப்பதால் பிரதமர் / அமைச்சரவை நினைப்பதை நாடாளும் மன்றம் மூலம் நிறைவேற்றிக் கொள்வது சாத்தியமாகிறது.

இந்த வகை ஜனநாயகத்தில் நிர்வாகியான பிரதமர் / அவர் சார்ந்துள்ள அமைச்சரவை ஆகியவை நாடாளும் மன்றத்துக்குஅவர்களுடைய செயல்பாடு பற்றி பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளதால் அதிபர் முறையில் உள்ளது போல் இதில் அவர்கள் யதேச்சாதிகார மாக நடக்க வாய்ப்பில்லை

நாடாளும் மன்றம் சார்ந்த ஜனநாயகத்தில் தேவைப்பட்டால் மாற்று அரசாங்கம் அமைக்க வாய்ப்பு உள்ளது. அதாவது அரசு அமைத்துள்ள கட்சி நாடாளும் மன்றத்தில் தன்னுடைய பெரும்பான்மையை இழந்து அதன் விளைவாக ஆட்சியையும் இழந்து, விட்டால் அதுவரை எதிர்க் கட்சியாக இருந்த வேறு கட்சி நாடாளும் மன்றத்தில் தன்னுடைய பெரும்பான்மையை நிரூபித்தால் அக்கட்சி ஆட்சி அமைக்க வாய்ப்பு உள்ளது

இந்த முறையில் வளைந்து கொடுக்கும் தன்மை இருப்பதால் மக்கள் நினைத்தால் அரசாங்கத்தை மாற்ற முடியும். நெருக்கடியான நேரங்களில் தலைவரை மட்டும் பிரதமரை மாற்றி அரசாங்கம் கவிழாமல் காப்பாற்ற முடியும் உதாரணமாக இரண்டாவது உலக யுத்தத்தின் போது சர்ச்சில் எந்த விதமான கஷ்டமும் இல்லாமல் சாம்பர்லைனை இங்கிலாந்தின் பிரதமராக மாற்றினார்

பொறுப்புள்ள அரசாங்கம் – இந்த முறையில் நாடாளும் மன்ற உறுப்பினர்கள் அவையில் அரசாங்கத்தை, அமைச்சர்களை

கேள்விகள் கேட்கலாம். மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் பற்றி நாடாளும் மன்றத்தில் அமைச்சர்களுடன் விவாதித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம். அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சரி பார்க்கலாம்.

மாறுபட்ட பிரிவினையும் சேர்த்துக் கொள்ளுதல் – நாடாளும் மன்றம் சார்ந்த முறையில் பல்வேறு மாறு பட்ட கருத்துக் கொண்டவர்களையும் கூட்டணியில் இணைத்து அரசு அமைக்கலாம். இந்தியா போன்ற நாடுகளுக்கு இது பொருந்தும்.

நாடாளும் மன்ற முறையில் உள்ள குறைகள்

அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்கும் கொள்கையை இந்த முறை மீறுகிறது. அதன் மூலம் நாடாளுமன்ற மற்றும் நிர்வாக அதிகாரம் இரண்டையும் ஒரே இடத்தில், அதாவது அமைச்சரவையில் சேர்க்க வகை செய்கிறது. இது அமைச்சரவை சர்வாதிகாரியாகும் ஆபத்தை உருவாக்கலாம்.

இந்த நாடாளும் மன்றம் சார்ந்த முறையில் நிர்வாகி பிரதமர். நாடாளும் மன்றத்தில் சட்டம் உருவாக்கும் பணியில் பங்கு பெறுவதுடன் சில நேரங்களில் தேவை இல்லாமல் நிர்வாகத்தில் தலையிடவும் கூடும். இது குழப்பத்தை கொடுப்பதுடன் நிர்வாகம் மற்றும் நாடாளும் மன்றம் இரண்டிலுமே திறமை குறைய வாய்ப்பளிக்கும்

நாடாளும் மன்றத்தில் எந்த ஒரு கட்சிக்கும் அரசு அமைக்கும் அளவுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால் கூட்டணி ஆட்சி அமைய நேரிடும் தனிக் கட்சி ஆட்சி அளவிற்கு கூட்டணிக் கட்சிகளின் ஆட்சி திறமையாகப் பணியாற்றுவதும் தனிக் கட்சி ஆட்சி அளவிற்கு நீண்ட காலம் நீடித்திருப்பதும் ஐயப்பாட்டுக்கு உரியது.

இந்த முறையில் அமைச்சர்கள் தாங்கள் வகிக்கும் துறை பற்றி போதிய அனுபவமும் அறிவும் உடையவர்களாக் இல்லாமல் இருந்தால் அவர்கள் அத்துறையில் பணியாற்றும் அரசு அதிகாரிகளைப் பெரிதும் சார்ந்திருக்க வேண்டும் அத்தகைய அரசாங்கங்கள் ஜனநாயக அரசாங்கமாக இல்லாமல் அதிகாரிகள் அரசாங்கமாகத் திகழ நேரிடும்.

நாடாளும் மன்றம் சார்ந்த முறையில் அரசாங்கம் தேர்தல் நோக்கத்தோடு எதையும் செய்யும் நிலைக்குத் தள்ளப்படக்கூடும். நாட்டில் உள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஆளும் கட்சி உட்பட, அடுத்து தேர்தலில் வெற்றி பெறுவதையே நோக்கமாகக் கொண்டு செயல்படுவார்கள். மக்கள் வாக்குகளைப் பெறுவதற்கு ஏற்ப அவர்கள் கொள்கைகள் ஆட்சியில் செயல் பாடு அனைத்தும் அமையும்.

தகுதியில்லாத நாடாளும் மன்ற உறுப்பினர்கள் – சட்ட / நாடாளும் மன்ற உறுப்பினர்கள் நோக்கம் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகி ஆக வேண்டும் என்பதாக இருக்கும் ஆனால் பெரும்பாலானவர்களுக்கு அதற்கான தகுதி இருக்காது.

நிரந்தரமின்மை – இந்த முறையில் அரசு அமைக்கும் கட்சி நாடாளும் மன்றத்தில் தங்கள் பெரும்பான்மையை நிரூபிக்கும் வரைதான் என்பதால், தேர்தலுக்குப் பிறகு நாடாளும் மன்றத்தில் பெரும்பான்மை பெற்ற ஒரே கட்சியாக இல்லாத பட்சத்தில் ஆட்சி நிரந்தரமாக இருப்பது கடினம். கூட்டணி அரசாங்கங்கள் பெரும்பாலும் நிரந்தர மற்றவையாகவும், குறுகிய காலத்துக்குமே செயல்படும். அதனால் அவ்வாறான சூழலில் ஆட்சியில் உள்ள நிர்வாகி தன் ஆட்சியைத் தப்பவைக்கவே அதிகம் கவனம் செலுத்தத்தேவைப்படும். அதனால் நாட்டு நலன் மக்கள் நலன், ஆகியவற்றுக்குப் போதிய கவனம் செலுத்த இயலாது.

அமைச்சர்கள் – நாடாளும் மன்றம் சார்ந்த அரசாங்கத்தில் நிர்வாகிகள் என்னும் அமைச்சர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். இதனால் அந்தக் கட்சியில் இல்லாமல் வெளியில் உள்ள பல துறை வல்லுநர்கள் நிபுணர்களை அமைச்சரவையில் சேர்க்க இயலாது.

நீண்ட கால முடிவு எடுக்க இயலாது – குறிப்பிட்ட காலம் நிச்சயமாக அமைச்சர்களாக் இருப்பார்கள் என்பதைச் சொல்ல இயலாது என்பதால் அவர்கள் துணிச்சலான நீண்டகாலத் திட்டங்கள் பற்றி முடிவு எடுக்கத் தயங்குவார்கள்./

அதிகாரிகள் கட்டுப்பாடு – இந்த முறையில் அரசு அதிகாரிகள் நிறைய அதிகாரம்படைத்தவர்களாக இருப்பார்கள். எனவே அவர்கள் அமைச்சர்களுக்குப் பல விஷயங்களில் ஆலோசனை கூறுவார்கள். மேலும் அவர்கள் நாடாளும் மன்றத்துக்கும் பொறுப்பு அல்ல.

அதிபரைச் சார்ந்த அரசாங்கம் மற்றும் நாடாளும் மன்றத்தைச் சார்ந்த அரசாங்கம் என்ற இரண்டு வகை ஜனநாயகத்தைப் பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் அரசியல் சட்டம் மற்றும் வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் பைஜஸ்.காம், ஜக்ரன் ஜோஷ்.காம் ,ப்ளாக். ஃபாமியாஸ் .காம் மற்றும் லாடீச்சர் .நெட் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம் சென்னை 97 போன் 98413 73184.

உண்மையான இன்பத்தைப் பெற யாது செய்ய வேண்டும்?

தி. கபீர்தாஸ், சிதம்பரம். 9445473386

ஒரு செயலை செய்வதற்கு, கருவி கரணங்கள் தேவை என்பதை நாம் அறிவோம். மனம், மெய், மொழி இதன்மூன்றும், ஆன்மாவாகிய உயிர் வினைகளைச் செய்வதற்குத் துணை செய்கின்றன. உயிர்கள் வினைப்பயனை அனுபவிப்பதற்கு, மெய்ப்பொருளை உயிருக்கு, மாயையிலிருந்து உடம்பு, உலகப்பொருள், உணர்கருவி, நுகர்ச்சி என்ற நான்கினையும் இறைவன் தோற்றுவிக்கிறான்.

மனம், மொழி, மெய் யாவும் விரிந்து வெளிப்பட உதவியது மாயா காரியங்களே. ஆணவ, கன்ம, மலங்களிலிருந்து வினையும், துன்ப சூழலிருந்து, ஆன்மா விடுபடுவதற்காகவே, மாற்று ஏற்பாடாக மாயா காரியங்களை இறைவன் படைத்தான். இது இடைக்கால ஏற்பாடு. இவற்றை ஆன்மா உணரவில்லை. அது மாயா காரியங்களில் மயங்கி விரும்பியோ விரும்பாமலோ புதுவினைகளின் தோற்றத்திற்கு கருவி ஆகிறது.

அந்தக்கரணங்கள் என்று சொல்லக்கூடிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற இந்த நான்கும் வினை ஈட்டத்திலும், பயன் ஊட்டத்திலும் தொடர்புடையவை. மனம் பொருள்களை பற்றுகிறது. புத்தி திட்டங்களை தீட்டுகிறது. அகங்காரம் கை, கால் போன்ற புறக்கருவிகளை இயக்குகிறது. சித்தம் என்ற விதி, நிகழ்வுகளை ஏட்டில் பதிவு செய்கிறது. வாழ்வின் பண்பு நலன்கள் மனம், புத்தி, அகங்காரம் என்ற முக்குணங்களில் அமைகின்றன. இந்த முக்குணங்களும் பிரிவுபடாமல் ஒருங்கு கூடி நிற்கும் நிலையே சித்தம் என்ற மூலப் பிரகிருதி.

நம்மைச் சுற்றி பல பொருள்கள் உள்ளன. அவற்றிற்கும் மூன்று நிலைகள் உண்டு. அவை தோற்றம், இருப்பு, அழிவு அதனை ஆக்கல், காத்தல், அழித்தல் என்பர். இந்த சடப்பொருள்கள் பல்வேறு வடிவங்களில் தோன்றுகின்றன. இந்த மூவகை மாற்றங்கள் பெற மூன்று காரணங்கள் தேவை. அவற்றை முதற்காரணம், நிமித்த காரணம், துணைக்காரணம் என்பர். காரணம் இல்லாமல் காரியம் இல்லை.

சட்டி, பானை செய்ய முப்பொருள் தேவை. அவைகள் களிமண், குயவர், சக்கரம். இதில் மூலப்பொருள் மண், அதுதான் முதற்காரணம். பானையை மண்ணிலிருந்து நிமித்தம் செய்கிறவர் குயவர், அவர்தான் நிமித்த காரணம். பானை செய்ய துணைபுரிவது சக்கரம். அதுதான் துணைக்காரணம். அதுபோல வினையாகிய செயல்களுக்கு மூலம், மூலகன்மம் தான். அதுவே முதற்காரணம். நிமித்தம் என்றால் ஏதேனும் ஒன்றன் பொருட்டு என்பது பொருள். உலகப்பொருள் அனைத்தும் ஏதோ ஒரு நோக்கத்துக்குதான் படைக்கப்படுகின்றன. உயிர்கள் நன்மை அடைய உலகத்தைப் படைத்தவன் இறைவன். எனவே இறைவன் உலகத்தோற்றத்திற்கு நிமித்தம் காரணம். உயிர்கள் இன்பம் துய்த்தல் நிமித்தம் வினைகள் செய்கின்றன. எனவே உயிர்தான் வினை ஈட்டத்திற்கு நிமித்த காரணம். வினை செய்வதற்கு உயிரைத் தூண்டி துணைநிற்பவர் யார் என்றால் ஆணவம், சிவசக்தி, மனம் முதலிய அந்தகாரணங்கள். அறிக்கருவி, செயர்க்கருவி இவைகளே துணைக்காரணம். ஆக மூலப்பொருள் முதற்காரணம். மூலப்பொருளை புதுப்பொருளாக ஆக்குவோன் நிமித்த காரணம். வினையை செய்ய தூண்டுபவர் துணைக்காரணம்.

பிறப்புக்கு வித்து வினைகள் மற்றும் மூலகன்மம். ஆணவம், கன்மம், மாயை இம்மூன்றும் பாசம் என்பர். இவற்றில் கன்மம் என்பது மூலகன்மத்தையே குறிக்கும். வித்து இன்றி விளைவு இருக்காது. யாவரும் அறிந்ததே, உடம்புகள் உலகத்துக்கு மூலமாக வித்தாக இருப்பது மாயை. அதே போல ஆணவம், இரண்டாயிரத்துக்கு மேல் இருக்கும் வினைகளுக்கு மூலபொருளாய் இருப்பதையே மூலகன்மம் என்கிறது சித்தாந்தம்.

மூலகன்மம் அனாதிப்பொருள். எப்படி என்றால் "சற்காரிய வாதம்" என்று ஒன்று உண்டு. உள்ளதே தோன்றும், இல்லாதது தோன்றாது என்பது அதன் கோட்பாடு. இந்த கோட்பாடின்படி மூலகன்மம் என ஒன்று முன்பே உள்ளது. ஆன்மா செயல்படும் காலத்தில், அதுவே வினையாக வெளிப்படுகிறது. ஆணவ இருளில் அறிவின்றி அல்லலுற்ற ஆன்மாக்களுக்கு, இறைவனாகிய சிவபெருமான் தன் அருட்சக்தியைக் கொண்டு சுத்த மாயையிலிருந்து ஒலி, ஒளி என்கிற நாதம், விந்து உடம்பினை தருகிறான். ஆணவ இறுக்கம் குறைந்தது. ஆயினும் ஆன்மா அறிவு விளக்கம் பெறவில்லை. அதனால் அசுத்தமாயையிலிருந்து அறிவு புகட்டும் வகையில் நுண் உடம்பினை கொடுக்கிறான் இறைவன். அதுபோது ஆன்மா இன்பத்தில், மயக்கத்தில், தன்முனைப்போடு செயல்படத் தொடங்கியது. அது இறைவனை எண்ணிப்பார்க்கவில்லை.

உயிர்களுக்காக பெருமான் ஐந்தொழிலில் ஈடுபடும்போது அருட்சக்தியின் இச்சை, ஞானம், கிரியைகளை தொழிற்படுத்துகிறான். உயிர்களுக்கும் இம்மூவகை ஆற்றல் இயல்பாகவே உண்டு. உடல், மலம், உள்ளத்து மாசுமலம், மூலகன்மம், ஆணவம், மாயை இவற்றிலிருந்து விடுபட்டால்தான் உயிர்களுக்கு உண்மையான இன்பத்தை பெறமுடியும்.

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/12 செல்வி **ச. சௌந்தர்யா** மூலம் 4ம் பாதம் சாத்துக்குட பூர்வீகம் : திருமைலாடி விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன்	22.12.95 5' - 3.6"	B.Sc., Maths	Amazon Rs. 3,60,000/PA	திரு. வை. சத்யாபாலு, கூத்தியம்பேட்டை, திருமைலாடி Post, சீர்காழி (Tk), மயிலாடுதுறை Dt. – 609 108. Cell : 99424 97817, 99429 03374
B 2/12 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சமபடிப்பு/சென்னை/பெங்களூரில் நல்ல பணியில் உள்ள வரன்	16.09.95 155 cm	B.E. (Com. Sci) M.Sc., Cyber Forensics and Information Security	Associate in MNC Bangalore (Top 5 Company)	திரு. N. Gowrishankar, 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044 – 2363 8284
B 3/12 செல்வி **ப. திரிபுரசுந்தரி** பூசம் 4ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : சாத்தநத்தம் விருப்பம் : பணியில் உள்ள வரன்	03.11.96 163 cm	B.C.A.,	CSS Corp. Chennai Rs. 35,000/PM	திரு. P. பழனிவேல், சாத்தநத்தம், திட்டக்குடி வட்டம், Cell : 95007 90802, 79040 77494
B 4/12 செல்வி **M. சரண்யா** திருவோணம் 3ம் பாதம் குழவிட பூர்வீகம் : மணிக்கிராமம் (மயிலாடுதுறை Tk.) விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன்	23.10.93 165 cm	B.E. (CSE)		திரு. V. முத்துக்குமார், 3/259, மெயின் ரோடு, மணிக்கிராமம் (Post), சீர்காழி (Tk.) மயிலாடுதுறை (Dt.) – 609 114. Cell : 73392 20541 93849 36175 (W)
B 5/12 செல்வி **R. அனுக்கிருபா** மகம் மருங்குட பூர்வீகம் : ஆக்கூர் விருப்பம் : சமபடிப்பு நல்ல வேலையில் உள்ள வரன்	10.05.92 169 cm	B.Com., MBA.,	TCS, Chennai	திரு. A. ராஜாராமன், 7/4, கல்லூரி மேற்கு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106. Cell : 97908 80266, 93809 97467 Phone : 044 – 2363 8205 E-mail : rajaramchennai2010@gmail.com
B 6/12 செல்வி **M. இந்துமதி** கேட்டை 4ம் பாதம் விஸ்வராய பூர்வீகம் : சிதம்பரம் விருப்பம் : சமபடிப்பு, அரசு வேலை / IT சென்னையில் உள்ள வரன்	13.06.95 5' - 3"	B.E., EEE., MBA.,	Software Engineer Rs. 10 Lakhs/PA	திரு. G. முருகேசன், 97, பார்த்தசாரதி தெரு, நன்மங்களம், சென்னை–600 129. Cell : 70106 83125 / 86089 00886
B 7/12 செல்வி **K. கௌசல்யா** சதயம் வறுவுடையான் விருப்பம் : நன்கு படித்து வேலையில் உள்ள வரன்.	03.10.98	D.C.E., D.C.A.,		திருமதி K. அலமேலு மங்கை, W/o. N. கார்த்திகேயன், 3/149, மேலத் தெரு, சோழம்பேட்டை, மயிலாடுதுறை Cell : 87549 92094, 86808 30632

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/12 செல்வி **கி. வைஷ்ணவி** ரேவதி தீவித்திரிய பூர்வீகம் : ஷேஷமூலை–பூந்தோட்டம் விருப்பம் : நிரந்தரபணியில் உள்ள வரன்.	14.05.96 145 cm	MCA Engineering		திரு. K. கிருஷ்ணமூர்த்தி, 462/2, முதல் தெரு, கற்பகம் நகர், தென்பாதி, சீர்காழி – 609 111. Cell : 94872 41513, 94898 57190
B 9/12 செல்வி **S. நிவேதா** மகம் தூதுடையான் பூர்வீகம் : கும்பகோணம்	25.08.95 5' - 3"	B.Arch., M. Plan Transport Planing	Transport Planer (Noida)	திரு. T. சுப்பராயன், S.E. (L.D. Centre) Officers Quarters, TNEB Head Quarters, Anna Salai, Chennai Cell : 94431 24630, 94453 75681
B 10/12 செல்வி **R. நிவேதிதா** ஹஸ்தம் மணலுடை பூர்வீகம் : அம்பாள்புரம் குறிப்பு : விவாகரத்து பெற்றவர். விருப்பம் : 35 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.	11.02.93 165 cm	B.E. (EEE)	CGI Inc. Chennai Rs. 10 Lakhs / PA	திரு. S. இரத்தினசபாபதி, R.S. நாதன் ரைஸ்மில், கீரப்பாளையம் Cell : 86755 43403, 89401 92492
B 1/11 செல்வி **T. செல்வபிரியா** ஆயில்யம் 2ம் பாதம் சேவுட பூர்வீகம் : திருப்புங்கூர்	14.08.96	B.E., MBA.,	ICICI Bank	திரு. K. தாமரைச்செல்வன், 184, 8வது குறுக்குத் தெரு, சிவசக்தி நகர், சிதம்பரம் Cell : 73734 67258, 87607 42498

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRA, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. TATA ZUDIO (INDIA)

"QUALITY IS OUR LIFE"

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/12 செல்வன் **R. ராகுல்** ரேவதி சாத்தனுட பூர்வீகம் : பெருஞ்சேரி விருப்பம் : பணியில் உள்ள வரன்.	15.08.95 178 cm	B.E. (EEE)	Technical Support In AZENTIO Rs. 6 Lakhs / PA	திரு. V. ராஜூ, 388 C/2, செட்டித் தெரு, சேந்தங்குடி, மயிலாடுதுறை – 609 001. Cell : 97865 93037, 94440 70676
G 2/12 செல்வன்**ரா. சிவக்குமார்** கார்த்திகை 4ம் பாதம் காங்கேய அம்பாள்புரம் (சிதம்பரம்) விருப்பம் : ஏதேனும் பட்டப்படிப்பு படித்த வரன்.	08.12.92 160 cm	M.Sc., M.Phil., B.Ed., Ph.D. (Mathematics)	உதவி பேராசிரியர் ஸ்ரீ மணக்குள விநாயகர் இன்ஜினியரிங் கல்லூரி புதுச்சேரி Rs. 25,000/PM	திரு. சி. ராதா, Plot No. 73, R.K. City, பார்வதிபுரம், குறிஞ்சிபாடி தாலுக்கா, வடலூர் – 607 303. Cell : 86676 46837 / 96591 03626 94876 20611
G 3/12 செல்வன் **R. திருவரசன்** பூசம் பாலுட பூர்வீகம் : வையூர் விருப்பம் : படித்த நல்ல குணம் உள்ள வரன்.	13.03.95 5' - 10"	B.E. (CSE)	Expert Solutions Technologies Chennai Rs. 8 Lakhs / PA	திரு. T. Ramamoorthy, 93, North Street, Vaiyur & PO Chidambaram TK - 608 401. Cell : 9789442746
G 4/12 செல்வன் **V. நந்தகுமார்** ரேவதி மருங்குட பூர்வீகம் : அரசிளங்குடி (மயிலாடுதுறை மாவட்டம்)	12.02.97 5' - 10"	B.Tech., Mech., Sastra	Asst. Manager (Buyer) Ford Global Technologies, Sholinganallur, Chennai. Rs. 7,00,000/PA	திரு. B. Vivekanandan, 8, Lakshmi Nagar, Therku Pal Pannaicheri, Collector Post Office, Nagapattinam - 611 003. Cell : 99420 73094, 98420 86926
G 5/12 செல்வன் **V. முருகவேல் அரசு** சுவாதி சேக்கிழார் பூர்வீகம் : அரச்சலூர், ஈராடு மாவட்டம் விருப்பம் : பணியில் உள்ள வரன்	07.12.96	B.E.	Global Logic India (P) Ltd., Chennai Rs. 8 Lakhs/Pa	திருமதி. V. கலாவதி, 1, சந்தைபேட்டை வீதி, அரச்சலூர் (PO), ஈரோடு (DT), – 638 151. Cell : 99948 81592, 97889 18159
G 6/12 செல்வன் **M. செழியன்** திருவாதிரை காருட பூர்வீகம் : ம.கொத்தங்குடி	27.04.93 5' - 10"	B.Sc., (Computer Science)	Cognizant (CTS)	திரு. G. ராமலிங்கம், 18, V.S.R. Nagar, Chidambaram Cuddalure Dt. Cell : 8667010342, 94424 41233
G 7/12 செல்வன் **இரா. சீதாராமன்** பூரட்டாதி இளமாங்குட இடைக்கட்டு	29.09.93 170 cm	DME, (Tool & Die)	6 Projects (Purchase Executive) Chennai Rs. 30,000/PM	திரு. சோ. இராமகிருஷ்ணன் பிள்ளை, இடைக்கட்டு, உட்கோட்டை (அஞ்சல்), ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம் – 612 901. Cell : 96298 89261 98298 89262 (W)
G 8/12செல்வன் **J. வினோத்** என்கிற **அச்சுதன்** ஆயில்யம் 3–ம் பாதம் காமகோட	16.03.92	Diploma Polytechnic	Shashan Company Pondicherry Rs. 35,000/PM	திரு. S. சபாநாயகம், 85, முருகேச நகர், பாதிரிக்குப்பம், கடலூர் மாவட்டம் – 607 402. Cell : 87543 26932, 95009 83065

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/12 செல்வன் **P. சீனிவாசன்** கேட்டை 3ம் பாதம் பல்லவராய பூர்வீகம் : மணிக்கிராமம் விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள, வேலைக்கு செல்ல விருப்பம் உள்ள வரன்.	07.08.95	B.E. (Civil),	காசா க்ராண்டு QC சென்னை Rs. 30,000/PM	திரு. M. பிரபாகரன், 8A, ராஜலட்சுமி நகர், 7வது குறுக்குத் தெரு, பள்ளிக்கரணை, சென்னை – 600 100 Cell : 98845 42741, 86109 32843
G 10/12 செல்வன் **M. பாலசுப்ரமணியன்** பூரட்டாதி சேமங்கலூட பூர்வீகம் : ஆக்கூர் விருப்பம் : நல்ல குணமுள்ள வரன்	10.01.81 175 cm	M.B.A., HRM.,	மனோன்மணி சிட்பண்ட் பைனாண்ஸ் ஆக்கூர் Rs. 50,000/PM	திரு. M. பாலசுப்ரமணியன், 7/130D, 7/61A, காமராஜபுரம் தெரு, ஆக்கூர் PO – 609 301, மயிலாடுதுறை மாவட்டம். Cell : 98845 42741
G 11/12 செல்வன் **M. அருண்குமார்** கார்த்திகை 2ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : 19 புதுக்குடி – எரவாஞ்சேரி வழி விருப்பம் : நல்ல குணமுள்ள, படித்த வரன், சென்னையில் இருந்தால் நலம்	29.11.96 175 cm	BCA M.Sc.	GUPSHUP சென்னை	திரு. S. மதியழகன், 3/781, தெரு வீதி அம்மன் கோவில் தெரு, கெருகம்பாக்கம், சென்னை – 600 128. Cell : 94446 31446, 90872 95484
G 12/12 செல்வன் **G. பிரகாஷ்** உத்திரம் 4ம் பாதம் குருகுலராய பூர்வீகம் : இலந்தைகூடம் விருப்பம் : பணியில் உள்ள / இல்லாத வெளிநாடு செல்ல விருப்பம் உள்ள வரன்.	02.03.91 180 cm	B.E. (EEE)	Electrical Engineer WEG Middle East Dubai Rs. 1,40,000/PM	திரு. T. ஞானம், 2/178, ராஜ வீதி, KTM இல்லம், இலந்தை கூடம், திருமழபாடி வழி, அரியலூர் மாவட்டம் – 621 851. Cell : 89402 37031, 78679 41629 E-mail : gsprakash91@gmail.com
G 13/12 செல்வன் **பா. தினேஷ் ராஜ்** அசுபதி வில்வராய பூர்வீகம் : கருவாழக்கரை விருப்பம் : வேலை பார்க்கும் பெண்ணாக இருந்தால் சிறந்தது.	02.05.92 174 cm	B.E.,	Maintenance Engineer, Kamarajar Port, Ltd., Chennai Rs. 34500/PM	திரு. கோ. பாஸ்கரன், 1/64, தெற்கு வெள்ளாழத் தெரு, (சிவன் கோவில் தெரு) கருவாழக்கரை – 609 304. மயிலாடுதுறை (Tk) Cell : 94437 03677, 063692 69113
G 14/12 செல்வன் **கே. மணிவேல்** கேட்டை முதுனுட பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)	15.02.93 6' - 00"	B.E. (EEE),	வணிகவரி துறை, சேலம்	திரு. T. கேசவன், 5/234-2, புதிய அம்பேத்கர் நகர், ஜாகிர் ரெட்டிபட்டி, சேலம் – 636 302. Cell : 94422 59692
G 15/12 செல்வன் **இர. வெற்றிச்செல்வன்** பூரம் தென்னவராய பூர்வீகம் : பெ.பொன்னேரி/பெண்ணாடம்	12.04.95 168 cm	B.E. (EEE)	ABPM (Indian Postal Dept. Central Govt.)	திரு. தி. இரவிச்சந்திரன், 6வது குறுக்குத் தெரு, சரோ ரத்தின மகால் அருகில், பெண்ணாடம் & அஞ்சல், திட்டக்குடி வட்டம் – 606 105. Cell : 85085 71741, 94426 56045

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 16/12 செல்வன் **S. ராஜராஜன்** உத்திரட்டாதி சாத்தனுட பூர்வீகம் : ஓலையாம்புத்தூர் – வைத்தீஸ்வரன் கோவில் விருப்பம் : சமபடிப்பு / வேலை	09.04.94 180 cm	B.E., (Electronics & Instrumentation)	Senior Engineer, Quest Global, Bangalore Rs. 9.5 Lakhs/PA	திரு. B. சுரேஷ்குமார், 5, கோவில் மேல வீதி, அண்ணாமலை நகர், சிதம்பரம் – 608 002. Cell : 9994483386, 9486388709 9487443392
G 17/12 செல்வன் **S. அசோக்குமார்** சுவாதி வில்வராய பூர்வீகம் : ஸ்ரீமுஷ்ணம் விருப்பம் : தகுந்த வரன்	05.09.89 5' - 7"	B.Sc. MBA	துணை பேராசிரியர் BPJ கல்லூரி கொழை ஸ்ரீமுஷ்ணம்	திரு. முத்து செல்வராஜ், 16A, வெள்ளாழர் தெரு, ஸ்ரீமுஷ்ணம் – 608 703. Cell : 94423 78258, 9578516108
G 18/12 செல்வன் **S. சந்தோஷ்** அனுஷம் பல்லவராய பூர்வீகம் : ஆக்கூர்	14.07.89 166 cm	B.Tech., MBA	Business	திரு. C. சிவஞானம், Cell : 98840 00033

உழைப்பு உயர்வு தரும்

A. RAJARETHINAM, PORUR,
CHENNAI. PH: 9444224366

உறவினர் திருமணத்திற்காக 4–9–2022 அன்று காலை நான் கோயம்புத்தூர் சென்றேன். அப்போது புகழ்பெற்ற ஈச்சநூரி வினாயகர் கோவில் அருகில் உள்ள "கோரல் ரெஸிடென்சி" என்ற தங்கும் விடுதியில் நானும் எனது உறவினர்களும் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 5–9–2022 காலை திருமணம், சிறப்பாக நடைபெற்றது. அந்த தங்கும் விடுதி மிகவும் நன்றாக அமைதியாக சுத்தமாக இருந்தது.

அந்த விடுதியின் உரிமையாளர் பெயர் திரு. கா. விஜயகுமார், அவரிடம் பேசிய போது பல விபரங்கள் எனக்கு கிடைத்தன. மனிதன் முன்னேறுவதற்கு தடைகள் தடையல்ல என்பது புரிந்தது. மற்றவர்களும் இதைப்பற்றி அறிய வேண்டும் என்பதற்காக இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

விஜயகுமார் எதிர்நீச்சல் அடித்து வாழ்வில் முன்னேறியவர். அவர் 1961–ம் ஆண்டு மதுரை அருகே உள்ள கொடைக்கானலில் பிறந்தார். அவர் மதுரை, காரைக்குடி, பழனி, கொடைக்கானல் போன்று பல ஊர்களில் பள்ளிகளில் படித்தார். அப்பா ரயில்வேயில் எலெக்ட்ரிகல் போர்மேனாக பணி ஆற்றி பணி ஓய்வு பெற்றார். அவருடைய ஊதியம் குறைவாக இருந்ததால், விஜயகுமார் அதிகம் படிக்க முடியவில்லை. P.U.C. படித்துவிட்டு I.T.I. யில் டீஸல் மெக்கானிக் பிரிவை எடுத்து படித்தார். 18 வயதிலேயே, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் 1979–ம் ஆண்டு அப்ரண்டிஸாக வேலைக்கு சேர்ந்தார். கடுமையாக உழைத்தார்.

N.L.C. யில் பணி புரியும் போது ஓய்வு நேரங்களில் இறால் பண்ணை எட்டு வருடங்கள் நடத்தினார். 2004–ம் ஆண்டு வந்த சுனாமியால் இறால் பண்ணை அடித்துச் செல்லப்பட்டது. பெரிய நஷ்டம். ஆனால் அவர் மனம் தளரவில்லை. 7 ஏக்கர் நிலம் லீஸுக்கு எடுத்து விவசாயம் நடத்தினார். முருங்கை, கத்தரிக்காய், வெண்டைக்காய் போன்ற காய்கறிகள் பயிர் செய்தார். பத்து பேருக்கு வேலை கொடுத்தார். நவீன விவசாய முறைகளை பின்பற்றி விவசாயத்தை லாபத்தில் நடத்தினார். தம்பி, தங்கைக்கு படிக்க, உறவினர்களுக்கு தந்தை பணி ஓய்வு பெற்ற பிறகு, பெற்றோருக்கு உதவினார். N.L.C. யில் வேலை செய்த இளைஞர்களுக்கு தொழில் கற்றுக் கொடுத்தார்.

விஜயகுமார் கோயம்புத்தூரில் ஈச்சநாரியில் வாங்கி வைத்திருந்த சொந்த நிலத்தில் 16 அறைகள் கொண்ட ஒரு அழகான கட்டிடம் கட்டி 'கோரல் ரெஸிடென்ஸி' என்ற பெயரில் சிறப்பாக விடுதி நடத்தி வருகிறார். கடலூரில் வசிக்கும் அவரது நண்பர் திரு. இமயவர்மன் என்பவர் அவருக்கு பல கால கட்டங்களில் தேவையான யோசனைகளைக் கூறி அவரை வழி நடத்தியிருக்கிறார், விஜயகுமாருடைய விருப்பம் குழந்தைகளுக்கு நல்ல கல்வி கொடுக்க வேண்டும், எல்லோரும் உடல்நலனை பேணிக்காக்க வேண்டும், பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான்.

விஜயகுமார் இவ்வளவு இன்னல்களிலும், கடின உழைப்பில் முன்னேறி இன்று நல்ல நிலையில் மனநிறைவுடன் இருக்கிறார். உழைப்பே உணர்வு தரும் என்பதையே இவரது அனுபவம் பிறருக்கு எடுத்துக்காட்டுகிறது. இந்த கட்டுரை எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலைஓசை, Spoken English for your success என்ற புத்தகங்களைப் படித்தால் திறன் மேன்பாடு அடையலாம்.

மணமகள் தேவை

பெயர் செல்வன் **R.S. அரவிந் குமரன்**
படிப்பு B.E. (E.E.E.) MBA
வேலை Asst. Manager, State Bank of India
Bilaspur, Chattisgargh
Rs. 9 Lakhs / PA

பிறந்த தேதி 01.10.1995
உயரம் 170 cm
நட்சத்திரம் மூலம் 4ம் பாதம்
கோத்திரம் உத்தரக்குட
பூர்வீகம் விழுப்புரம்
தகப்பனார் **S.G. ரமேஷ்,** LIC Adviser
தாயார் **G. செல்வராணி,** பட்டதாரி ஆசிரியை (அறிவியல்) அரசு நடுநிலைப்பள்ளி, செம்மனந்தல்,கள்ளக்குறிச்சி மாவட்டம்.
முகவரி 240, வி.ஜே.லே அவுட், சாலமேடு, சீனிவாசா நகர், விழுப்புரம், PIN : 605 401.
Cell : 94861 51679, 63694 39751
விருப்பம் சமபடிப்புள்ள வங்கிப்பணி மற்றும் அரசுப்பணி (மாநில அல்லது மத்திய பணியில் உள்ள வரன்)

பெயர் செல்வன் **G. நிர்மல்**
படிப்பு B.E. (Automobile)
வேலை Own Business,
Multibrand Two Wheeler Showroom at Mayiladuthurai.

பிறந்த தேதி 03.08.1998
உயரம் 6' - 0"
நட்சத்திரம் கேட்டை
கோத்திரம் பேருட
பூர்வீகம் திருவிளையாட்டம், மயிலாடுதுறை
தகப்பனார் **N. ஞானப்பிரகாசம்,** M.A., Agency Business
தாயார் **G. மாலதி,** இல்லத்தரசி
முகவரி TSR Motors,
12, பெரிய கண்ணாரத் தெரு,
மயிலாடுதுறை – 609 001.
Cell : 9360661600
93453 63234
விருப்பம் ஏதாவது பட்டப்படிப்பு முடித்த வேலைக்கு செல்ல விரும்பாத பெண். எங்கள் வியாபாரத்தை ஏற்று நடத்தலாம்.

பெயர் செல்வன் **G. விக்னேஷ்**
படிப்பு Diploma (ECE)
வேலை வெளிநாடு (சிங்கப்பூர் கேம்ப்)

பிறந்த தேதி 27.07.1991
உயரம் 170 cm
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் மாருடையான்
பூர்வீகம் இறவாங்குடி
தகப்பனார் **R. ஞானசேகரன்,** விவசாயம்
தாயார் **G. வேம்பு,** இல்லத்தரசி (ஜெயங்கொண்டம்)
முகவரி D.No. 35/2, நடுத் தெரு,
இறவாங்குடி அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்
Cell : 97888 38362, 93442 33568

பெயர் செல்வன் **K.S. அரவிந்த்**
படிப்பு D.E.C.E.
வேலை ZAWAWI Powertech of Engineering LLC, Oman, Muscat
Rs. 8,00,000 / PA

பிறந்த தேதி 25.06.1993
உயரம் 167 cm
நட்சத்திரம் பூரம்
கோத்திரம் லக்னமுடையான்
தகப்பனார் **S. சிவக்குமார்** (TNSTC-Rtd.), கும்பகோணம்
தாயார் **S. விமலா** (சிவபுரம்)
முகவரி 258, பெரியார் நகர்,
ஔவையார் தெரு,
சாக்கோட்டை,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம் – 612 401
Cell : 95008 67108, 98946 38450

மணமகள் தேவை

பெயர் செல்வன் **சி. கணபதி**
படிப்பு B.E., CSE
வேலை Team Lead - DEVOPS Software AG, Chennai
Rs. 36 Lakhs/PA
பிறந்த தேதி 06.07.1990
உயரம் 183 cm
நட்சத்திரம் கேட்டை
கோத்திரம் விச்சுடை
பூர்வீகம் வீரசிகாமணி, திருநெல்வேலி
தகப்பனார் **K. சிதம்பரம்**
தாயார் **C. முத்துலெட்சுமி**
முகவரி 34/185, 2nd Floor, 9th Cross Street,
ராமகிருஷ்ணா இல்லம்,
Thiruvanmiyur, Chennai - 600 041.
, Cell : 98415 27737
விருப்பம் நல்ல பண்புள்ள, பணிவான வரன் தேவை
குறிப்பு விவாகரத்தானவர்

பெயர் செல்வன் **ரெ. சிவராமன்**
படிப்பு B.Tech - Marine Engineering
வேலை Third Engineer, Omega Ship Management
பிறந்த தேதி 17.07.1991
உயரம் 183 cm
நட்சத்திரம் அஸ்தம்
கோத்திரம் கொங்குராய
பூர்வீகம் செந்துறை
தகப்பனார் தெய்வத்திரு. **சு. ரெங்கநாதன் பிள்ளை,** ஆசிரியர்
தாயார் தெய்வத்திரு. **ரெ. இராஜலெட்சுமி,** பெண்ணாடம்
முகவரி தெற்கு தெரு,
செந்துறை
Cell : 99520 56030 (W), 99439 49239,
95669 47917

மணமகன் தேவை

பெயர் செல்வி **ஸ்ரீரச்சனா**
படிப்பு B.Tech., M.Sc. IT / Computer Science
வேலை Software Engineer, Amazon, Sanjose, California, USA
$ 1,72,000 / PA
பிறந்த தேதி 11.08.90
உயரம் 173 cm
நட்சத்திரம் ரேவதி
கோத்திரம் நாரணகுடை
பூர்வீகம் மூவலூர்
தகப்பனார் **A. ராஜசேகர்**
தாயார் **R. சுமதி**
முகவரி B3, Aadarsh Apartments,
Old No. 567, New No. 91B,
பூந்தமல்லி ஹை ரோடு,
அரும்பாக்கம், சென்னை – 600 106.
Cell : 94425 44989
E-mail : rajasekaran.mech.mtech@gmail.com
விருப்பம் உள்நாடு / வெளிநாடு வேலையில் உள்ளவர்கள். USA செல்ல விருப்பமுள்ள வரன்.

பெயர் செல்வி **S. ஸ்வாதி**
படிப்பு B.Tech (IT)
பிறந்த தேதி 18.08.1999
உயரம் 155 cm
நட்சத்திரம் விசாகம் (1 பாகம்)
கோத்திரம் சாத்துகுட
பூர்வீகம் திருமாந்துறை
தகப்பனார் **R. சுந்தர்,** (சொந்த தொழில்)
தாயார் **V. கவிதா,** ஆசிரியை
முகவரி 25/L, கீழசாலை,
திருப்பணிப்பேட்டை,
திருவிடைமருதூர் – 612 104.
Cell : 94425 40962
விருப்பம் சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வி **K. பிரியதர்ஷினி**
படிப்பு B.B.A., M.Sc., IT
வேலை Azenito S/W Pvt. Ltd., Chennai
Rs. 4 Lakhs / PA
பிறந்த தேதி 09.02.1998
உயரம் 173 cm
நட்சத்திரம் புனர்பூசம்
கோத்திரம் பங்களதரிய
பூர்வீகம் கீழ்நத்தம் – சிதம்பரம்
தகப்பனார் **N. குமார்**
தாயார் **K. கவிதா,**
(மணிக்கிராமம், மயிலாடுதுறை)
முகவரி 34, S6 Plot,
சிதம்பர விலாஸ் குடியிருப்பு,
வ.உ.சி. தெரு,
சிதம்பரம் – 608 001.
கடலூர் மாவட்டம்
Cell : 98494 72775, 63692 64373
80725 15579

பெயர் செல்வி **மோ. அபிநயா**
படிப்பு B.E. (EEE)
வேலை Production Editor
Sinjore Technologies,
Thanjavur.
பிறந்த தேதி 21.09.1995
உயரம் 5' - 4"
நட்சத்திரம் ஆயில்யம் 3–ம் பாதம்
கோத்திரம் சணமுடை
பூர்வீகம் உடையார் பாளையம்
தகப்பனார் **கோ. மோகன் பிள்ளை**
தாயார் **மோ. மலர்கொடி**
(திருநாரையூர்)
முகவரி A/2, சீத்தா நகர்,
சிவாஜி நகர் வழி,
தஞ்சாவூர் – 613 001.
Cell : 94424 75666, 94424 75777
விருப்பம் சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.

மணமகள் தேவை

பெயர் செல்வன் **T. லோகேஷ் அரவிந்தன்**
படிப்பு B.Tech (IT)
வேலை Business Analyst,
Rs. 12 - 13 Lakhs / PA
பிறந்த தேதி 07.11.1995
உயரம் 173 cm
நட்சத்திரம் பரணி
கோத்திரம் தென்னவராய
பூர்வீகம் குடவாசல் வடமட்டம்
தாயார் **G. கிருத்திகா,** M.A., B. Lit., (இல்லத்தரசி)
முகவரி **A. திருமலைவேலு,** Central Govt. Employee
Flat No. 3A, Shanthiniketan Westcliff Apartments,
Durga Nagar, Sanitorium, Tambaram,
Chennai - 600 047.
Cell : 90809 98023, 94434 84596
விருப்பம் Very fair good looking, Working in Govt / IT Chennai

பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L & T Infotech, Chennai
Rs. 12 Lakhs / PA

பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – **606 111.**
கடலூர் மாவட்டம்
Cell : 99419 38426 / 91763 27234
E-mail : dhanamkarthi76@gmail.com

பெயர் செல்வி **க. ஜீவரத்தினம்**
படிப்பு B.E. (ECE)
வேலை Senior Software Engineer
Robet Bosch, Coimbatore
Rs. 16 Lakhs / PA

பிறந்த தேதி 12.03.1991
உயரம் 170 cm
நட்சத்திரம் திருவோணம் 2–ம் பாதம்
கோத்திரம் முள்ளுட
பூர்வீகம் நாட்டார்மங்கலம், காட்டுமன்னார்குடி
தகப்பனார் **P. கலிய பெருமாள் பிள்ளை**
தாயார் **K. புஷ்பகலா**
(வையூர், சிதம்பரம்)
முகவரி 40, மேயர் சண்முகம் நகர்,
பரமேஸ்வர நல்லூர்,
சிதம்பரம் (அஞ்சல் & தாலுக்கா),
Cell : 93645 09598, 81441 88405 (W)
E-mail : jeevak.ntm@gmail.com
விருப்பம் பணியில் உள்ள வரன்,
கோயம்புத்தூர் அல்லது பெங்களூர்
பணி மாற்றம் செய்ய விருப்பமுள்ள
வரன்.

வாழ்க மணமக்கள்





மணமக்கள் : **இரா. விக்னேஷ்வர்,** M.E., (Senior Banking Officer CUB)

இர. கஜப்ரியா, B.E., (IT Analyst TCS.)

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் மருத்துவமனைச்சாலை, ஏ. இராமலிங்கம் HM, இரா. செந்தமிழ்ச்செல்வி HM, இவர்களின் அன்பு மகன் திருவளர்ச்செல்வன் **இரா. விக்னேஷ்வர்,** M.E., சென்னை வேளச்சேரி, சோமசுந்தரம் தெரு, சி. இரவிச்சந்திரன், இர. சந்திரபிரபா இவர்களின் அன்பு மகள் திருவளர்ச்செல்வி **இர. கஜப்ரியா,** B.E., இவர்களின் திருமணம் செம்பனார் கோவில், ஆறுபாதி ஸ்ரீ அபிராமி திருமண மஹால் A/C யில் **(13–11–2022)** ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்கும், திருமண வரவேற்பிற்கும் அமைதி காத்த வருண பகவானுக்கும், வருகை தந்து வாழ்த்திய அன்புள்ளம் கொண்ட உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இருமனம் இணையும் இத்திருமணம் நிகழ கார்காத்தார் ஒப்புரவு (மணமகன் / மணமகள் தேவை) ற்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

பூவிழந்தநல்லூர் பத்மநாபன் இல்ல திருமண விழா



கடலூர் மாவட்டம், பூவிழந்தநல்லூர் கொங்கராய தெய்வத்திரு. P. ரெங்கநாதன்பிள்ளை, சாரதாம்பாள் மற்றும் கடலூர் மாவட்டம் குணமங்கலம் தெய்வத்திரு. N. பாலசுப்ரமணியன் பிள்ளை, ரத்தினாம்பாள் ஆகியோரது பேத்தியும், R. பத்மநாபன் – திரிபுரசுந்தரி இவர்களின் அன்புகுமாரத்தி திருவளர்ச்செல்வி **P. அபிநயா,** B.E., கடலூர் மாவட்டம், இராஜேந்திர பட்டணம் திரு. R. திருநீலகண்டன் பிள்ளை – சுந்தரி இவர்களின் அன்புக்குமாரர் திருவளர்செல்வன் **T. ரகுராஜன்,** B.E., இவர்களின் திருமணம் ஸ்ரீ சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 25ஆம் தேதி (11–11–2022) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்குமேல் 8.00 மணிக்குள், சிதம்பரம் ஸ்ரீ கிருஷ்ண கிராண்ட் மஹாலில் சென்னை ராதா எஞ்சினியரிங் ஒர்க்ஸ் உரிமையாளர் திரு. வெங்கடேசம் பிள்ளை – ஞானாம்பிகை தலைமையில் நடைபெற்றது. விழவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து பெரியோர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

R. திருநீலகண்டன்
சுந்தரி திருநீலகண்டன்

R. பத்மநாபன்
திரிபுரசுந்தரி பத்மநாபன்

வாழ்க சதாபிஷேக தம்பதியர்

சிதம்பரம் நகரம் எண் 42, திருவள்ளுவர் தெரு, திரு. **சிவபாலன்** – திருமதி. **லலிதா** தம்பதிக்கு 01–11–2022 செவ்வாய்கிழமை அன்று சதாபிஷேக விழா கடலூர் திருமாணிக்குழி அருள்மிகு வாமனபுரீஸ்வரர் கோயிலில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு வந்து சிறப்பித்தும், ஆசியும் பெற்ற சுற்றத்தார்க்கும், நட்புக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறோம்.

சி. மோகன் (ஆனந்த்).
கு. கவிதா.
மோ. ஹரிசங்கரன்.
மோ. அகிலேஷ்.
சோழிங்கநல்லூர், சென்னை
93455 24141

சி. நடராஜன்.
ல. சாவித்திரி.
ந. பாவனா.
சிதம்பரம்

சி. சிவக்குமார்.
ச. சுகன்யா.
சி. சாதனா.
சென்னை

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

உ

ஸ்ரீ மஹாகணபதி துணை

ஸ்ரீ அங்காளம்மன் துணை, ஸ்ரீ பாவாடைராயன் துணை

மயிலாடுதுறை மாவட்டம், மணல்மேடு கிராமம்,

அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக திருப்பணிகள் செய்ய நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

அன்புடையீர்,

இந்த பாரத புண்ணிய பூமியில் புண்ணிய கிராமத்தில் ஸ்ரீ சௌந்தர நாயகி சமேத ஸ்ரீ நாகநாத சுவாமி ஆலயத்திற்கு தென்புறம் மணல்மேடு கடை தெருவில் அமைந்து அருட்பாளித்து வரும் **ஸ்ரீ அங்காளம்மன் மற்றும் பாவாடைராயன்** சன்னதிகள் வெகுகாலமாக பழுதடைந்து இருந்தமையால் அதனை குலதெய்வக்காரர்களும் முக்கியஸ்தர்களும் கிராம பொது ஜனங்களும் முன்வந்து திருப்பணி குழு அமைத்து சற்று விஸ்தீரமாக கோயிலை நிர்மாணம் செய்ய முடிவு செய்து வேலைகள் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு மற்ற வேலைகளையும் சிறப்பாக முடித்து கும்பாபிஷேகம் செய்ய அனைத்து அன்பர்களிடமிருந்து நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. நன்கொடைகள் அனுப்ப விரும்புபவர்கள் கீழே உள்ள பேங்க் அக்கவுண்டிற்கு உங்கள் நன்கொடைகளை செலுத்தி அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அருள் செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆலயத்திற்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் கீழ்கண்ட முகவரியில் உள்ள வங்கி கணக்குகளுக்கு நன்கொடை அளிக்குமாறு பிரியமுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ARULMIGU ANGALAMMAN THIRUKOVIL | ACCOUNT NO : 7134274617
IFSC CODE : IDIB000K288 | INDIAN BANK, KUTHALAM

கூடுமான பொருட்கள் கொடுக்க விரும்புவோர் கீழ் கண்டோரை தொடர்புகொள்க :

திருப்பணிக் கமிட்டி தலைவர் :
து. குலசேகரன் - 94436 51547

திருப்பணிக் கமிட்டி துணை தலைவர் :
வி.கோபிநாதன் - 88706 92346

திருப்பணிக் கமிட்டி செயலாளர் :
க.ராஜமோகன் - 95979 52636

திருப்பணிக் கமிட்டி துணை செயலாளர் :
கெ. கோவிந்தராஜலு- 94437 85507

திருப்பணிக் கமிட்டி இணைச்செயலாளர் :
ஜெ.ஜெயக்குமார் - 98407 37919

திருப்பணிக் கமிட்டி பொருளாளர்:
வே. ராஜேந்திரன் - 94435 25455

திருவிளையாடற் புராணம்

35, தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

– 'சிவகாமியின் செல்வன்'

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

குலபூடண பாண்டியனின் மகன் இராசேந்திர பாண்டியன் முறையாகச் செங்கோல் செலுத்திக் கொண்டிருந்தான். அப்போது காடு வெட்டிய சோழன் வெளிப்படையாக சோமசுந்தரக் கடவுளை யாவரும் அறியும் வண்ணம் – தரிசனம் செய்து வழிபட விரும்பினான். அதற்காக பாண்டியனின் நட்பைப்பெற விரும்பினான். அதன் பொருட்டு வரிசையாகிய கையுறையை அனுப்பினான். அதில் பொன்னாபரணம், பொன்னாடை முதலியவை இருந்தன. பாண்டியன் அவற்றை ஏற்றான். நட்பு பாராட்ட பாண்டியனும் பதிலுக்கு வேறு பொருள்களைக் கையுறையாக அனுப்பினான். மகிழ்ந்த காடுவெட்டிய சோழன் தன் மகளை இராசேந்திர பாண்டியனுக்கு மணம் செய்து கொடுக்க விரும்பி உடன்பட்டான்.

சோழன் தன் மகளை அரசசிங்கனுக்கு மணஞ்செய்தளித்தல் :

இதனை அறிந்த இராசேந்திரனுடைய தம்பியும், சிற்றரசனும் பழிக்கு அஞ்சாதவனுமாகிய அரசசிங்கன் (இராசசிம்மன்) தன் தமையனுக்குப் பேசப்பட்ட சோழன் மகளைத் தானே மணக்க எண்ணினான். வஞ்சனையாகத் திட்டமிட்டான். கரவுடன் காஞ்சிக்கு வந்தான். சோழன் வரவேற்றான். எப்படியோ மனம் மாறி தன் மகளைத் திருமணம் செய்து வைத்தான்.

சோழன் தன் மருமகனோடு பாண்டியன் மீது படையெடுத்தல் :

தன் மருமகன் அரசசிங்கன் பாண்டிய நாட்டை ஆளவேண்டும் என எண்ணிய சோழன் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்தான். பாண்டிய நாட்டுத் தலைநகர் மதுரைக்கு இரண்டு யோசனைத் தொலைவில் பாடி வீடு அமைத்தான். முரசு அறைவித்தான்.

வருந்திய பாண்டியனுக்கு இறைவன் அருள்புரிதல் :

காடு வெட்டிய சோழன் அரசசிங்கனோடு படை எடுத்து வந்ததை இராசேந்திர பாண்டியன் அறிந்தான். திருக்கோவில் சென்றான். சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளை வணங்கினான். "எம்பெருமானே! நள்ளிரவில் தனியனாய் வந்து உன்னை வணங்கிய உன் பத்தன் காடுவெட்டிய சோழன் என்னுடன் நட்பு பாராட்டினான். இப்பொழுது படையெடுத்து வந்துள்ளான் என் தம்பியுடன். முப்புறங்களை எரித்த முக்கண்ணா! அன்று அவன் அறத்திற்குத் துணையானாய். இன்று அவன் மறச்செயலுக்குத் துணையாகி அருள்வீரோ?" என்று குறையிரந்து வேண்டினான். அப்பொழுது விண்ணொலி "பாண்டியா! நீ நாளைக்குப் போருக்குப் போ! உன்னை வெற்றிபெறச் செய்வோம்! என்றது. இதனைக் கேட்ட பாண்டியன் மகிழ்ந்தான். மீண்டும் சோமசுந்தரரை வணங்கினான். அரண்மனை சென்றான். விடியலை எதிர்பார்த்திருந்தான்.

பாண்டியன் சோழனோடு போருக்கு எழுதல் :

காலை சிவபூசையை முடித்துக்கொண்டு சேனைகளுடன் போர்க்களம் புகுந்தான். பெரும்படைகொண்ட சோழன் மீது பாண்டியன் சிறுபடை கொண்டு தாக்கினான். பாண்டியன் படை சோழப்படையை வருந்தி நின்றது.

கடும் போர் :

இருநாட்டுப் படைகளும் கடுமையாக மோதின. உருமம் வரை போர் தொடர்ந்தது. கடும் வெயிலால் எங்கும் வறட்சி. கானல் நீரும் வேர்வை நீரும் தவிர வேறு நல்ல நீர்கள் சிறிதும் இன்றி வற்றிப் போயின.

வேனில் வெப்பத்தால் சேனை வீரர்கள் வருந்துதல் :

பொல்லாருடன் சேர்ந்த நல்லாரும் பொல்லாப் பெயர் எடுப்பர். அது போல் வெப்பமண்ணில் உலவும் தென்றலும் சுட ஆரம்பித்தது. குதிரைகளும், யானைகளும் வெப்பத்தால் சோர்வடைந்தன. படை வீரர்களும் வெப்பம் வறட்சியால் மிகவும் தொல்லைக்குள்ளாயினர். வெம்மை வீசும் கள்ளிமரத்தின் நிழலில் சிலர் ஒதுங்கினர். சிலர் இலை உதிர்ந்த மரக்கிளையின் நிழலிலும், சிலர் யானை, குதிரை, தேர் இவற்றின் சிறு நிழலிலும் ஒதுங்கினர். நடுகல் தரும் சிறு நிழலில் சிலர் ஒதுங்கினர்.

சோமசுந்தரக் கடவுள் தண்ணீர்ப் பந்தல் வைத்தல் :

வீரர்கள் இப்படி வெப்பத்தால் வருந்தும் சூழலில், ஈன்ற தாயைப் போன்ற இறைவன் இராசேந்திர பாண்டியன் படை நடுவில் ஒரு தண்ணீர்பந்தலைத் தோற்றுவித்தான்.

நெற்றியில் திருநீறு. காது மடலில் மலர். திருவடியில் ஒற்றைக் கிண்கிணி. இடுப்பிலே புலித்தோலாடை. உள்ளம் ஈர்க்கும் புன்முறுவல். கண்களில் அருள் குறிப்பு. இத்தகையதிருக்கோலத்தில் கங்கையைச் சடையில் அணிந்த பெருமான் ஒரு

தவக்கோலத்தவராக அங்கு எழுந்தருளினான். அவன் கையில் ஒரு கெண்டி. அதில் முழுக்க கங்கை நீர். ஒருவருக்கு ஒன்றேயாய் இலட்சம் பேருக்கு இலட்சமாய் உள்ள துவாரத்தினாலே தண்ணீர் வார்த்தான். படைவீரர்கள் அனைவரின் தாகம் தீர்ந்தது. இச்செய்தியை "தண்ணீர்ப் பந்தர் சமயம் பெறவைத்து, நன்னீர்ச் சேவகனாகிய நன்மையும்" என்ற மாணிக்க வாசகரின் கீர்த்தித் திருவகவல் அடிகளும் வெளிப்படுத்துகின்றன.

பாண்டியன் வெற்றி பெறுதல் :

சிவபெருமானின் தண்ணீர்ப்பந்தல் சென்று பாண்டியப் படைவீரர்கள் நீர்பருகி இளைப்பு நீங்கினர். மீண்டும் வலிமை பெற்றனர். சினந்து எழுந்து சோழப்படைகள் மேல் பாய்ந்தனர். தாக்குதலைத் தாங்காமல் சோழன் படைகள் புறமுதுகிட்டு ஓடின. இரோசேந்திர பாண்டியன் வாகை மாலை சூடினான். பாண்டிய படைவீரர்கள் காடுவெட்டிய சோழனையும், அவன் மருமகனாகிய அரசசிங்க பாண்டியனையும் பிடித்து வந்து இராசேந்திர பாண்டியன் முன் நிறுத்தினர்.

பாண்டியன் சோழன் முதலியோரை விடுவித்து நாடாளுதல் :

தன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட சோழனையும், தன் குலத்திற்கு வடு ஏற்படுத்திய (வடு ஒன்று, தனக்கு மனைவியாக் குறித்தவளை மணந்து கொண்டது; வடு இரண்டு: தன் அரசை வௌவப் போருக்கு வந்தது ஆகிய இரு வடுக்கள் (வடுக்கள் – குற்றங்கள்), தன் தம்பியையும் சோமசுந்தரக் கடவுள் திருமுன் கொண்டுபோய் நிறுத்தினான் பாண்டியன். "எம்பெருமானே! இவர்களை என்ன செய்வது? உன் திருவுள்ளம் யாது?" என்று வணங்கி நின்றான். அப்பொழுது விண்ணொளி "பாண்டியனே! நீ அறநெறி பிறழாதவன் அல்லவா? உன் கருத்துக்கு இசைந்ததைச் செய்யக் கடவாய்!" என்றது. அதனைக் கேட்ட பாண்டியன் காடுவெட்டிய சோழனுக்கு சில யானைகளையும், குதிரைகளையும், அணிகலன்களையும், பிறவற்றையும் கொடுத்து அனுப்பினான். தன் தம்பியின் அஞ்சாமையும் ஆண்மைச் செருக்கும் அகலுமாறு அவன் அனுபவிக்கும் சில செல்வங்களை மாற்றி, அவனை வேறாக ஒதுக்கிவைத்துவிட்டான். பின் அனைத்துயிர்களுக்கும் அன்னைபோல தன் மக்களை கண்ணிமையா கயல்போல இருந்து காத்தான். வளங்கள் யாவும் சிறக்க வாழ்ந்து வந்தான். அறம் காப்போர்க்கு அரணாகும் அரன் கரவு மனத்தர்க்குக் காலனாவான்.

ஒரு நாள் ஆன்மீக சுற்றுலா

நங்கநல்லூர் சங்க உறுப்பினர்கள் 40 பேர் மகாபலிபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள வைணவ ஸ்தலங்களை தரிசனம் செய்ய முடிவு செய்து 8.10.2022 அன்று இரண்டு குளிரூட்டப்பட்ட வாகனங்களில் 40 பேர் அடங்கிய சுற்றுலாகுழு புறப்பட்டு முதலாவதாக உத்தண்டி அ/மி மத்யசா நாராயணர் கோவில் மேற்கூரையில்லாத முன்மாதிரி கோவிலில் 12 அடி மச்சாவதார நாராயணரை கண்குளிர தரிசித்து கடலை ரசித்தபடியே காலை உணவை முடித்து கானாத்தூர் புறப்பட்டது சுற்றுலா குழு.

ஒரிசா மாநில பூரி ஜெகன்னாதர் கோவில் போன்றே வடிவமைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ள ஜெகன்னாதர் கோவில் தரிசனம் முடித்து திருவிடந்தை சென்று அ/மி நித்யகல்யாண பெருமாள் தரிசனம். தரிசனத்துக்கு காத்திருந்த வேளையில் மகளிர் குழுவினர் விஷ்ணு சகஸ்கரநாமம் பாராயணம் செய்ய திருப்தியான தரிசனம்.

அடுத்து மகாபலிபுரத்தில் மதிய உணவினை முடித்துக்கொண்டு சிறிது ஓய்வுக்குபின், கடற்கரையில் ஐந்து ரதம், கடற்கரை கோவில், அர்ஜுன் தபஸ், கோவர்த்தனகிரியில் கிருஷ்ண பகவான் மக்களை காத்தது, எப்போதும் ஆச்சரியம் அளிக்கும் வெண்ணைப்பாறை கடல் காற்றுடன் கண்டு இரசித்தோம்.

இறுதியாக சென்னை திரும்புகின்ற வழியில் "அக்கறை" என்ற ஊரில் கண்ணிற்கும் மனதிற்கும் விருந்தளிக்கின்ற வகையில் அமைந்திருக்கும் ISKON Temple சென்று, நடந்துகொண்டிருந்த பஜனில் கலந்து கொண்டதுடன், கோவிலை சுற்றி பார்த்து நிறைவான மனதுடன் தயாராக இருந்த இரவு உணவினை அவரவர் பெற்றுக்கொள்கின்ற வேளையில் வருணபகவானின் ஆசிகள்.

சுற்றுலாவை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் அமைத்த சங்கச் செயலர் திரு. கோ. தியாகராஜன் உள்ளிட்ட சுற்றுலா குழுவிற்கு நன்றிகள் பல.

கலந்துகொண்ட இருபால் அன்பர்களுக்கும், Catering ECR பாலாவுக்கும் வாழ்த்துக்கள், பாராட்டுகள்.

– V. கிருஷ்ணகுமாரி,
இணைசெயலர், மகளிரணி

மார்கழித் திருவாதிரை விளக்கம்

1. திராவிட மாபாடியம் இயற்றியவர் ஸ்ரீமாதவச் சிவஞான யோகியாருடைய மாணாக்கர் ஸ்ரீகச்சியப்ப முனிவர். அவருடைய மாணவர் கந்தப்பையர். இவருடைய திருமகனார் திருத்தணிகை ஸ்ரீவிசாகப்பெருமாளையர். இவரால் திருவெம்பாவைக் கருத்து வெளியிடப்பட்டது. காஞ்சிபுரம் மஹாவித்துவான் ஸ்ரீசபாபதி முதலியார் அவர்கள் 1871–ல் வெளியிட்ட பதிப்பில் உள்ளதென 1941–ல் வெளியான சமரசப் பதிப்பு திருவாசகப் புத்தகத்தில் வெளியிடப்பட்டது.

2. மார்கழி : மா – மாய்தல், மறைத்தல் ஒடுங்குதல்

கழி – நீங்குதல், கழிதல்.

இறைவன் உயிர்களுக்குத் தனு, கரண, புவுன போகங்களைக் கொடுத்து, மாயையில் ஒடுங்கச் செய்து மீளத் தோற்றுவிக்கும் காலம்.

ஆதிரை ஆ – ஆன்மாக்கள்

திரை – மறைத்தல்.

ஆன்மாக்களை உலக வாழ்வில் அழுந்தச் செய்தல் இதை உணர்த்துவதே மார்கழித் திருவாதிரையின் நடைமுறை.

3.மக்களுக்கு உலகில் ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஓர் நாள் ஆகும்.

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை 6 மாதம் தேவர்களுக்கு பகற்காலம் **உத்ராயணம்.**

ஆடி முதல் மார்கழி முடிய 6 மாத காலம் இராக்காலம் **தட்சினாயணம்.**

விடிய 5 நாழிகையுள்ள மார்கழி மாத பிரம்ம முகூர்த்த காலம் அனுக்கிரஹத்துக்குரியது.

தை மாத உற்வசம் **சிருஷ்டி**

தை முதல் ஆனி வரை **காத்தல்**

ஆடி முதல் கார்த்திகை வரை **சங்காரம்**

திருக்கார்த்திகை மறுநாள் தொடங்கி மார்கழி கொடியேற்று முதல் நாள் வரை **திரோதானம் (மறைத்தல்)** உள்ள காலம்.

கொடியேற்று முதல் 10 நாட்கள் ஆன்மாக்கள் மல அருளில் கிடந்து துஞ்சாமல் பரிபாகம் பெறும் பொருட்டு திருவருள் வெள்ளத்தில் ஆழ்ந்தி முழுகுவதற்கு எழுப்புவதே **திருவெம்பாவை**யின் உட்கருத்து.

மலத்தை (ஆணவம், கன்மம், மாயை) கழுவுவதே முழுகுதல் எனவும் ; திருவருட் பெருவெள்ளமே தடாகம் என நினைத்து சிவத்தியானத்தோடு மார்கழி மாதத்தில் நீராட வேண்டும்.

இறைவன் பொன்னார் மேனியன் என்பதால் செவ்வந்திப் பூ சாத்தப்படுகிறது.

பசுவின் பின்புறம் லட்சுமிதேவி இருப்பதால் கெடுதல் நீங்கி செல்வம் சேரவும்; பசுவும் கன்றுமாக இருப்பதால் சிருஷ்டித் தொழில் செய்ய திருவுளம் கொள்கிறான். எனவே மார்கழித் திருவாதிரை ஆன்மாக்களுக்கு அனுக்கிரக காலம்.

4.கூத்தபிரான் சந்நதியில் காராம்பசு (கருப்பு நிற) கன்றுடன் பின்புறத்தைக் காட்டி நிறுத்தப்படுகிறது. ஆணவ மலத்தையுடைய ஆன்மாக்கள் இறைவன் திருவடி இன்பத்தை விரும்பாமல் உலக இன்பத்தை விரும்புவதை (கருப்பு நிற காராம்பசு) உணர்த்துகிறது.

எனவேதான் எம்பெருமான் சந்நிதியில் இறைவன் அருளிய அருட்பிரசாதமாக கருப்பு நிற குழைத்த சாம்பல் அணியக் கொடுக்கிறார்கள். உயிர்களுக்கெல்லாம் மலச்சார்பாகிய உலக வாழ்வைத் தந்தருள்கிறார் என்பதைக் குறிக்கிறது.

மலத்தில் ஒடுங்கிக் கிடந்த உயிர்களுக்கு இறைவன் தனு, கரண, புவனம் முதலியவற்றைப் படைத்துக்கொடுத்தலால் களிப்படைவதைக் குறிக்க, உணர்த்த களி பிரசாதமாக கொடுக்கப்படுகிறது.

– சி. சுப்பிரமணியன், நெல்லை.

சபையேறும் மாண்புகள்

புகுந்த வீட்டில்
தன் செல்வநிலை
அயல்நாட்டு வருமானத்தில்
அதீத வளர்ச்சி அடைந்தாலும்

பிறந்த வீட்டிலிருந்து
அண்ணன் கொணரும் 'சீரே'
முதல் சீரென

தனது மகளின்
திருமண வாசலில்
முதல் மரியாதையாய்
கொண்டாடி மகிழும்
தங்கைகளைக் கொண்ட
தமிழ்த் தேசமிது

வித விதமாய்
விலை உயர்ந்த பரிசுகளோடு
கார்களில் வந்திருப்போர்
காத்திருக்கும் சபையில்

ஊரே வியக்க
தனது திருமணத்தை
நடத்திக் காட்டிய
அண்ணன்

ஒற்றைத் தனிமரமாய்
ஓய்ந்த கால்களோடு
ஒதுங்கி அமர்ந்திருக்கும்
இடம் நோக்கி

மணவறையிலிருந்து
இறங்கி ஓடி வந்து
'தாய் மாமன்' முறையாக

தனது மகளுக்கு
முதல் மாலையிட வேண்டி
அண்ணனை
மண மேடைக்கு
அழைத்துச் செல்லும்
தங்கையின் மாண்பால்

தமிழர் பண்பாடும்
சேர்ந்தே சபையேறுகிறது !
புரட்டிப் போடும்
பொருளாதாரத்திலும்

புகழ் மங்காத உறவால்
ஒரு
சங்க இலக்கியம்
படைக்கப்படுகிறது !

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.

மைசூர் தசரா

மகிஷாசுர மர்த்தினி நரகாசுரனை வதம் செய்த நாட்கள் மகா நவமி என மைசூரில் கொண்டாடப்படுகிறது. ராஜா உடையார் என்பவரால் (1578–1617) முதன் முதலில் தசரா விழா கொண்டாடப்பட்டது. யானை மீது 750 கிலோ தங்கத்தால் ஆன அம்பாரி ஸ்ரீ குண்ட தத்தா நரசிம்மராஜ உடையார் என்பவரால் அமைக்கப்பட்டது. 14, 15–ஆம் நூற்றாண்டுகளில் விஜய நகர மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட இவ்விழாவானது பின்னர் 'உடையார்' என்ற வம்சத்தினரால் பின்பற்றப்பட்டது.

இந்த ஆண்டு (செப்டம்பர் 26–அக்டோபர் 5 வரை) தசரா விழாவானது நமது குடியரசுத் தலைவர் திரௌபதி மர்முவால் தொடங்கி வைக்கப்பட்டது. அவரது சிறப்புரையில் அந்நியர்களை எதிர்த்து கிட்டூர் சென்னம்மா, அம்பக்கா மகாதேவி ஆகியோர் போர் புரிந்ததை எடுத்துரைத்தார். அரண்மனையைச் சுற்றியுள்ள பகுதிகளில் 10 நாட்களும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட காட்சி, விழாவினை காண வந்த அனைவரின் பாராட்டையும் பெற்றது. மைசூர் அரண்மனை 'பூமியில்சொர்க்கலோகம்' என்கிற வகையில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது.

கர்நாடக மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (KSTDC) தசரா நிகழ்ச்சிகளை பொதுமக்கள் காண வேண்டி Double Decker பஸ் ஏற்பாடு செய்திருந்தது. பஸ்ஸின் மேல்தள திறந்தவெளியில் நாற்காலிகள் போடப்பட்டு (ரூ. 350 நபர் ஒன்றுக்கு) 124 கிலோ மீட்டர் தூரம் மாலை 6.30, 7.45, 9, 10 மணி வரை என நான்கு முறை (Lower Deck ரூ. 250/– நபர் ஒன்றுக்கு) மைசூர் பல்கலைக்கழகம், இராமசாமி Circle, தொட்டி அரண்மனை, ஜெயமார்த்தாண்ட Gate அரண்மனை, Zoo (மிருக காட்சி சாலை) குறிஞ்சி ஏரி, Jockey Quarters Circle, Snow city, Samumdi Vihar Stadium போன்ற இடங்களை சுற்றி காண்பித்தார்கள்.

4455 கிராமவாசிகளை 9 வட்டங்களிலிருந்து மைசூர் தசரா விழாவை காண வேண்டி அழைத்து வருவதை அரசாங்கமே ஏற்பாடு செய்திருந்தது. மீண்டும் அவர்களது கிராமங்களில் இறக்கிவிடுவது வரை அரசாங்கமே செலவை ஏற்றுக்கொண்டது. மாணவர்கள் தம் தனித்திறமைகளை, பல கலை நிகழ்ச்சிகளின் மூலம் வெளிப்படுத்தினர். ஹெலிகாப்டர் சவாரிக்கு ரூ. 3,990/– நபர் ஒன்றுக்கு கட்டணமாக பெறப்பட்டது. வான்வெளியில் தசரா விழாவைக் காண ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு தசரா விழாவைக் காண மைசூருக்கு வெளியிலிருந்து வந்திருந்த மக்கள் 10,00,000/– (பத்து லட்சம்) மேல் என்று ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

கொரோனா காலத்திற்கு பிறகு இந்த வருடம்தான் மைசூர் தசரா விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. 290 கலை நிகழ்ச்சிகள், மலர்க் கண்காட்சி, உணவுத்திருவிழா முதலியவை 10 நாட்கள் நடைபெற்றன.

- Dr. Prof. T. சீனிவாசன்,
மயிலாடுதுறை.
செல்: 9442524543

அருள்மிகு காமாட்சி அம்பாள் சமேத
ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம்

பூலோக கைலாயமாம் சிதம்பரம் நகருக்கு தென்மேற்கே சுமார் 5 கி.மீ தொலைவில் உள்ள துணிசிரமேடு கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு காமாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோயில் தருமபுரம் குருமகா சன்னிதானம் அவர்கள் ஆசியுடன் திருப்பணி செய்யப்பட்டு **நாளது சுபகிருது வருடம் தை மாதம் 20-ந் தேதி 03-02-2023 வெள்ளிக்கிழமை காலை கும்பலக்னத்தில் 8.15 மணிக்கு மேல் 9.30 மணிக்குள்** குடமுழுக்கு நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு திருவருள் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.

"கட்டம் – 99"

– கோலாகலன்

காதைப் பிளக்கும் இடி. கண்ணைப் பறிக்கும் மின்னல். பெருமழை. பேய்க் காற்று. இவற்றைக் கண்டு அஞ்சிய சிலர் அக்காரமங்கலத்து ஐயனார் கோயில் மண்டபத்தில் ஒதுங்கினர். அங்கே சிவகாமி சித்தர், இராசசேகரன் பிள்ளை உட்பட பத்து பேர் அங்கு நிற்க அடியேனும் அங்கு சென்று அவர்களுடன் ஐக்கியமானேன். சித்தர் சின்னதாகச் சிரிக்க, வணங்கினேன். நட்ட பயிர் வெள்ளத்தில் என்னாகுமோ என்ற கவலை பலருக்கு. அவர்களைக் கூர்ந்து நோக்கிய சிவகாமி சித்தரிடம் மெல்ல நான் போய் "மகிழ்ச்சி ஏன் தொலைகிறது சாமி?" என்றேன். சுவாமிகள் பேசத் தொடங்கினார். "வேணாட்டுமன்னன் வேங்கைமார்பன் உலாவச் சென்றான். உழவன் ஒருவன் ஏற்றம் இறைத்துக் கொண்டிருந்தான். தலையில் முண்டாசு, இடுப்பில் கோவணம், வாயிலே நாட்டுப் பாடல். மிகவும் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தான். மனமெல்லாம் மகிழம்பூ. அவ்வுழவனைப் பார்த்த மன்னனுக்குப் பொறாமை. தன்னால் அப்படி இருக்க இயலவில்லையே என்று ஏங்கினான். கவலையில் மூழ்கினான். அரண்மனைக்கு வந்த மன்னன் முகத்தைக் கவனித்த அமைச்சர் கவலைக்குக் காரணம் கேட்டார். மன்னன் உழவனின் மகிழ்ச்சியைக் கூறினான். மன்னனின் கவலை என்னவென்று மந்திரி நன்கறிவார். மன்னன் மனத்தை மாற்றிட எண்ணிய நிலையில் அமைச்சரின் மண்டைக்குள் ஒரு மின்னல். உடனே "மன்னா! அவ்வுழவனைக் கட்டம் 99–இல் வைத்துவிட்டால் அவன் மகிழ்ச்சி மறைந்துவிடும். பார்க்கலாம்" என்றார். அது என்ன என்றான் மன்னன். அமைச்சர் விளக்கினார்.

"அது ஒன்றுமில்லை மன்னா! பமரபத விளையாட்டில் 100 கட்டங்கள் உண்டு. கட்டம் 100–ஐக் கண்டவன் மகிழ்வான். 99–இல் நின்றவனைப் பாம்பு தொடக்கக் கட்டத்தில் கொண்டு வந்து நிறுத்திவிடும். மீண்டும் ஆட்டத்தை முதலிலிருந்து தொடங்கவேண்டும். மாந்த வாழ்வும் அப்படித்தான். கட்டம் 99–இல் விழுந்தவன் மகிழ்ச்சியைத் தொலைத்துவிடுவான். அல்லலுக்கு ஆளாவான். அந்த உழவனை கட்டம் 99–இல் வைப்போம். பின் அவன் ஆட்டத்தைப் பார்ப்போம்" என்றார் அமைச்சர். சரி என்றான் மன்னன்.

திட்டமிட்டபடி உழவன் வீட்டு வாயிற்படியில் 99 கழஞ்சு பொற்காசுகளை ஒரு சுருக்குப் பையில் இட்டு வைத்துவிட்டனர். அதிகாலை வெளியில் வந்த உழவன் பையைக் கண்டான். உள்ளே எடுத்துச் சென்று பார்த்தான். வியந்தான். எண்ணினான் 100க்கு ஒன்று குறைந்தது. சரியாக இருக்க வேண்டுமே! அந்த ஒற்றைப் பொற்காசு எங்கே என்று எங்கும் தேடினான். கிடைக்கவில்லை. கவலை கொண்டான். அந்த ஒரு பொற்காசினை ஈட்டி நூறாக்க வேண்டும் என்று பாடுபட்டான். கஞ்சத்தனம் வந்தது. கடும் உழைப்பினை மேற்கொண்டான். குடும்பத்தாரிடம் சிடுசிடுத்தான். சிரிக்க மறந்தான். பாட்டுப் பாட வாய் வரவில்லை. சோகம் உழவனை முற்றுகையிட்டது. பரமபதத்தில் உள்ள 99–ஆம் கட்டப் பாம்பின் வாயில் மாட்டிக்கொண்ட நிலையை அடைந்தான்.

எளிதில் கிடைத்த 99 பொற்காசுகள் அவனுக்கு மகிழ்வைத் தரவில்லை. 100–வதைத் தேடி மகிழ்ச்சியை இழந்தான்.

பாடாமல் சோகத்துடன் ஏற்றமிரைக்கும் உழவனின் பரிதாப முகத்தைக் கண்டான் மன்னன். அவன் மனத்துள் ஒரு பொறி மின்னியது. நாடு பிடிக்கும் ஆசையை அறவே ஒழித்தான். தந்தை வழங்கிய நாட்டைக் காத்து மக்களை மகிழ்வுடனும், வளத்துடனும் வாழவைப்பதுதான் தனக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது என்பதை உணர்ந்தான். நாடுபிடிக்கப்போரிடவேண்டும் என்ற நிலை தன் மகிழ்ச்சியைக் கெடுத்த உண்மையை அறிந்தான். மந்திரியை அழைத்து போர் செய்ய வேண்டாம் பிற நாட்டுடன் என்றான். அமைச்சன் அகமகிழ்ந்தான். உழவனை அழைத்து ஒரு கழஞ்சைக் கொடுத்தான். உழவனும் மகிழ்வுடன் பாடிக்கொண்டே சென்றான். இக்கதையைச் சொல்லி முடித்த சிவகாமி சித்தர் அந்தத் தூறலிலும் பாட ஆரம்பித்து ஆடத் தொடங்கினார்.

"ஆடு பூவே பாடி ஆடு பூவே
போதுமென்ற மனம் பொன் என்றும்
பாடி நீ கூத்தாடு பூவே!
கிட்டியதை மனங்கொண்டு மகிழாமல்
கிட்டாததை மனம் ஏங்கி நொந்திட
கட்டாயம் பெருங்கவலை துன்பம்
மட்டாகா மனத்துயர் சோகமென்று
ஆடுபூவே ஆடிப் பாடு பூவே!"

மழை நின்றது. மகிழ்வுடன் உள்ளோரை பொறாமையால் சிலர் இன்றும் கட்டம் 99–இல் வைத்து வேடிக்கைப் பார்த்து மகிழ்கின்றனர். எனவே மிகவும் எச்சரிக்கையாக இருந்தால்தான் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைக்கும். உசுப்பிடும் மனத்தைத் தள்ளிவைக்கவேண்டும். போதும் என்ற மனமே நம்மை மகிழ்ச்சியில் வைத்துக் காக்கும் என்று பேசிக்கொண்டே சிவகாமிச் சித்தரிடம் விடைபெற்றுக் கொண்டு கூட்டம் கலைந்தது.

‘‘சிற்றம்பலத்தான் அருளிய திருவாதிரை களி’’

சிதம்பரம் கிருஷ்ணமூர்த்தி.

சிவம் பேணும் நாடு நம் செந்தமிழ்நாடு, தமிழக வரலாற்றுக் கருவிற்கு உயிராகவும் உலகம் கலைச்செல்வத்திற்குச் சிகரமாகவும் இருப்பன இங்குள்ள திருக்கோவில்களே.

இறைவன், 1) அருவமாய் (உருவம் இல்லாத நிலை) 2) அருவ உருவ வடிவமாய் (இலிங்க வடிவநிலை) 3) உருவ வடிவமாய் (தேவ, மனித உருவ நிலை) என்ற மூன்று நிலையிலிருந்து நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களாகி, திருவாலங்காட்டில் இரத்தினசபையிலும், தில்லையில் பொன்னம்பலசபையிலும், மதுரையில் வெள்ளியம்பலச்சபையிலும், குற்றாலத்தில் – சித்திரசபையிலும் தூக்கிய திருவடியோடாடி நின்று உயிர்களை தோற்றுவித்து ரக்ஷித்து காத்து வருகின்றான். சிதம்பரம் சிற்றம்பலத்தில் இருக்கும் நடராசமூர்த்திக்கு ஓராண்டில் பல விழாக்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றுள் மார்கழி திருவாதிரைத் திருவிழாவும், ஒன்றாகும்.

‘‘அரும்பெறல் ஆதிரையான் அணிபெறமலர்ந்த’’ என்று சங்க இலக்கியமான கலித்தொகை நூலில் கூறப்படுவதிலிருந்து மார்கழி திருவாதிரைத்திருவிழா ஆதிகாலத்தில் இருந்தே கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை அறிகின்றோம்.

தில்லை நடராசர் திருக்கோவிலில் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்துக்கு முன்பு விழாக்கொடியேற்றி பத்து நாள் உற்சவம் தொடங்கி நடைபெறும். முதல் நாள் திருவிழா முதல் எட்டாம் நாள் திருவிழா வரையில் உற்சவ மூர்த்திகளான சோமாஸ்கந்தர், சிவானந்தநாயகி, விநாயகர், சுப்ரமணியர், சண்டேஸ்வரர் முதலிய பஞ்ச மூர்த்திகள் ஒவ்வொரு நாளும் தங்கத்தால் வெள்ளியால் செய்யப்பட்ட வாகனங்களில் வீதி உலா வருவார்கள். ஒன்பதாம் நாள் நடைபெறும் தேர் திருவிழாவில் நடராச மூர்த்தியும் சிவகாமசுந்தரியும் தேரேற வரும் காட்சியைக் காண ஆவலுடன் நிற்கும் பக்தர்கள் கூட்டம் தடுமாற, கண்ணிமைக்கும் நேரத்தில் மேகங்கள் கொட்டி தீர்த்த பெருமழையால் ஒதுங்கி நிற்க இடம் தேடி ஓடிக்கொண்டிருந்தார்கள். கொட்டிய மழை நீரோ நீரலைகள் போன்று ஆர்ப்பரித்து ஓடிக்கொண்டிருந்தது.

கீழ்வானம் சிவந்திட செங்கதிரோன் வந்துதித்தான். அதைக் கண்ட பக்தர்கள் கூட்டம் அரோகரா என்று கோஷமிட்டுக்கொண்டே தேரின் வடம்பிடித்திழுத்தனர். தண்ணீரைக் கிழித்துக் கொண்டுதேரோடத்தொடங்கியது.தேரோடும்வீதியில் வாழுகின்ற மக்கள் தேரில் வரும் இறைவனுக்கு பூசை புனஸ்காரங்கள் செய்து மகிழ்ந்தனர். மீண்டும் மழை வருவதற்குள் தேரை தேரடியில் கொண்டு சேர்த்திட வேண்டுமென ஆர்வத்தோடு தேரை இழுத்துக்கொண்டு செல்ல தொடங்கியது பக்தர்கள் கூட்டம்.

வேகமாக செல்லும் தேர் முடக்கில் திரும்ப முட்டுக்கட்டை வைத்து திருப்பிவிடும் தொழில் செய்வோரின் கவனக் குறைவால் தேரின் சக்கரம் தார் ரோட்டை விட்டு மண்தரையில் இறங்கி நின்றது. அங்கு குழுமியிருந்தோர் தங்களால் முடிந்த வரை முயற்சி செய்தும் நின்ற தேர் அசையவில்லை. பொழுதும் போய் கொண்டிருந்தது. பக்தர்கள் தேரை நகர்த்த படும்பாட்டைக் கண்ட இறைவன்.

தன் முன்னால் ஒவ்வொரு நாளும் உடல் முழுவதும் திருநீரணிந்து உருத்திராட்சத்தால் ஆக்கப்பட்ட சிவலிங்கத்தை தலையில் சுமந்து சிவவேடம் பூண்டு பாடி ஆடி வரும் பக்தன் தன்பால் கொண்ட பக்தியின் சிறப்பினை உலகத்திற்கு உணர்த்த விரும்பிய இறைவன்

அசரீரியாக; சேந்தா! இங்கு கூடியிருக்கும் பக்தர்கள் கூட்டம் பாராட்டும்படியாக என்மேல் பாட்டொன்று பாடுவாயாக என்று கூறியதைக் கேட்ட யாவரும் அவர் யார் ? யாராக! இருக்கும்!! என்று நாலு பக்கமும் சுற்றி பார்த்தனர்.

அப்பொழுது நனைந்த உடலோடும் பக்தியோடும் தேர் அருகே நின்றிருந்த சேந்தனார்,

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்த
பவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

என்று சேந்தனார் பாடியவுடன் நின்றிருந்த தேர் இழுப்பாறின்றி நிலைக்குப் போய் சேர்ந்தது.

அதைக் கண்ட விழாக்குழுவினர் அனைவரும் வியப்புற்று இச்சேந்தனுக்கு இணையான பக்தர் இந்த மாநிலத்தில் எவருமில்லை என்று போற்றிப் புகழ்ந்தனர்.

திருவாதிரை நாளில் தேரில் இருந்து இறக்கப்பட்ட நடராசபெருமானையும் சிவகாம சுந்தரியையும் ஆயிரக்கால் மண்டபத்தில் கொண்டு போய் வைத்தவுடன் அபிஷேக ஆராதனைகள் நடைபெறத் தொடங்கின. சேந்தனார் சிறந்த

சிவபக்தர், ஒவ்வொரு நாளும் வைகரையில் எழுந்து சிவகங்கையில் நீராடி அனுஷ்டானங்களை முடித்த பின் இறைவனுக்கு நிவேதனம் வைத்து படைத்த பின் அடியார்க்கு அன்னம் அளித்த பின்தான் தான் உண்ணும் பழக்கமுடையவர்.

திருவாதிரை திருநாளன்று பகலும் இரவும் விடாமல் மழை பெய்து கொண்டிருந்தபடியால் வீடெங்கும் நனைந்து அடுப்பு எரிய வழியின்றி போனதே என் செய்வேன்! கோவிலில் தினம் கிடைக்கும் சோற்றுருண்டையும் கிடைக்க வழியில்லாமல் போனதே இவையாவும் உன் திருவிளையாடலோ! என்று கூறி புலம்பிக் கொண்டு வீட்டின் தாழ்வாரத்தில் மழையில் நனைந்து தொங்கிக் கொண்டிருந்த வாரை குச்சியினை பிய்த்து எடுத்துக் கொண்டு போய் நனைந்த அடுப்பை பற்ற வைக்க தொடங்கினார். அடுப்பு எரியத் தொடங்கியதும் பானையில் கிடந்த பச்சரிசி குறுணையையும் பனைவெல்லத்தையும் சேர்த்து கிளறி வேகவைத்து ஏலக்காய், திராட்சை, முந்திரி, பருப்பு, பச்சைகற்பூரத்தையும் சேர்த்த களி உருண்டையை இறைவனுக்கு நிவேதனமாக வைத்து பூசை செய்தார். மழையோ நின்றபாடில்லை தெருவெங்கும் அடியார்க்கு அமுது படைக்க அடியாரைத் தேடிய சேந்தனார் உள்ளும் புறமும் நடந்து நடந்து கால்கள் சோர்ந்த நிலையில் நடராசரின் நர்த்தன தரிசனத்தைக் காண முடியாமல் போய்விடுமோ என்று அல்லலுற்றார்.

அப்பொழுது காவியுடை அணிந்த சாமியார் ஒருவர் தன் வீட்டு வாயிலில் வந்து நின்ற வரை கண்டதும் ஆனந்தத்தால் உள்ளம் மகிழ சாமியார்க்கு முகமன் கூறி அழைத்து வந்து அமரச் செய்து பாதபூசை செய்து அடியேனின் குடிலில் உணவருந்த வேண்டுமென சாமியாரிடம் சேந்தனார் வேண்டினார்.

இலையில் பரிமாறப்பட்ட களி உணவினை உண்ட இறைவன் சேந்தநாரை நோக்கி நீர் எமக்குத் தந்த களி உணவு மகிவும் சுவையாக உள்ளது என்று கூறிக்கொண்டே உண்டது போக எஞ்சிய களியுணவை தன்தோளில் பைய்யினுள் எடுத்து வைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டார் சாமியார்.

சாமியார் சென்றவுடன் சேந்தனார் அவசர அவசரமாக நடராசரின் நடனக் காட்சியைக் காண ஆயிரங்கால் மண்டபத்திற்கு சென்றார். அங்கு இறைவனுடைய நடனக் காட்சியைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார்.

இறைவனோடு சேர்ந்து மூலத்தானத்திற்கு சென்றார். அங்கு நின்ற தேரை ஓட வைத்த சேந்தனாரைக் கண்ட அடியார்களும் அந்தணர்களும் அகமும் முகமும் மலர வரவேற்று இறைவன் வீற்றிருக்கும் சிற்சபைக்கு அழைத்துச் சென்றனர் மூடியிருந்த மூலத்தானக் கதவை திறந்தவுடன் அங்கும் இங்குமாக களி உருண்டை சிதறிக் கிடப்பதை கண்டு இது எப்படி நிகழ்ந்தது என்று ஆலோசித்து நிற்கும் பொழுது அசிரீரியாக!

என் பக்தனான சேந்தன் அன்போடு எனக்கு ஊட்டிய திருவமுது களியாகும் இதற்கு ஈடு எதுவும் இல்லை என்று கூறி எல்லோரும் சுவைத்திடுங்கள். திருவாதிரை தினத்தில் சேந்தன் ஊட்டிய அமுத நிகர் திருவாதிரை களியை ஒவ்வொரு ஆண்டும் இதே நாளில் வைத்து நிவேதனம் செய்து அடியார்களுக்கு வழங்குங்கள் என்று அசரீரி கூறியதைக் கேட்டு எல்லோரும் சிதரிக்கிடந்த களியை உண்டு மகிழ்ந்தனர். அன்று முதல் இறைவன் (திருவாதிரையானுக்கு) களி கிண்டி வைத்து படைக்கும் வழக்கம் உண்டயிற்று என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

இரண்டாம் ஆண்டு துவக்கம்

G. Thiyagarajan
90429 57792

SRS

K. Baskaran
76679 62050

ஸ்ரீ ராஜன் ஸ்டோர்ஸ் SRI RAJAN STORES

No. 20/4, Ram Nagar, 2nd Main Road, Nanganallur, Chennai - 61.☎ : 88382 22283

FSSAI No. : 12422008000846 Reg. No. : UDYAM TN.02.0116765

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

நங்கநல்லூர்

27–11–2022 அன்று சங்கத்தின் மாதாந்திர கூட்டம் தலைவர் இல்லத்தில் நடைபெற்றது. மூத்த தமிழறிஞர் அவ்வை நடராசனார் மறைவுக்கும், சங்க உறுப்பினர் டாக்டர் M. செல்வகணபதி அவர்களது சகோதரர் M. அமிர்தகடேசன், பூர்வீகம் கானட்டம் புலியூர் அவர்களது மறைவுக்கும், YMK அமைப்பின் பொருளாளர் திரு. சுப்பையா அவர்களது துணைவியாரது மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையும், இதர சங்க நிகழ்வுகளும் செயலரால் விவரிக்கப்பட்டது. பொருளாளர் அளித்த நிதி நிலை விவரத்தினை குழு ஏற்றுக்கொண்டது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஒன்றிய அரசின் 10% சதவீத இட ஒதுக்கீட்டினை வரவேற்றுகும்படியும், தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவித்தும் கூட்டமைப்பின் கோரிக்கையின்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தற்போது KBF அமைப்பு முன்னெடுத்திருக்கும் "வைபவம்" திட்டத்திற்கு சங்கம் முழு ஒத்துழைப்பு அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. R. தில்லை கோவிந்தன் தம்பதியருக்கு மணிவிழா வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இனிவரும் காலங்களில் மாதாந்திர கூட்டத்தினை பிரதி மாதமும் 2–வது ஞாயிறன்று நடத்திட தீர்மானிக்கப்பட்டது.

காலண்டர் மற்றும் அழைப்பிதழை தாமதம் தவிர்த்து உறுப்பினர்களிடம் சேர்ப்பித்து சந்தா மற்றும் நன்கொடை பெறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. S. கல்யாணசுந்தரம் செயற்குழு உறுப்பினர் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

சங்க 35–வது ஆண்டு விழா 31–12–2022 அன்று பிற்பகல் 2 மணி முதல் நங்கநல்லூர் & பழவந்தாங்கல் வட்டார வியாபாரிகள் சங்கம், எண் 7, வ.உ.சி. தெரு, காந்தி நகர் மூவரசன் பேட்டை சென்னை–91. நடைபெறும் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

– க. சரவணன், தலைவர்.

அண்ணாநகர்

சங்க செயற்குழு கூட்டம் 20–11–2022 அன்று கொரட்டூரில் உள்ள சங்க வளாகத்தில் தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. கைலை ஷண்முகம் தமிழ்நாடு கார்காத்த சங்க கூட்டமைப்பின் அமைப்புச் செயலாளர் மற்றும் மாநிலத் துணைத்தலைவர் திரு. கோ. தியாகராஜன் நங்கநல்லூர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

திரு. கைலை. ஷண்முகம் தனது உரையில் சென்னையில் சிறப்பாக செயல்படுகிற சங்கங்களில் அண்ணாநகர் சங்கமும் ஒன்று என கூறி சங்க நிர்வாகிகளை பாராட்டினார். அது மட்டுமல்லாமல் மாதம்தோறும் செயற்குழு நடத்துகிற சங்கம் என கூறினார்.திரு. கோ. தியாகராஜன் தனது உரையில் ஜனவரி. 2023, 8–ம் தேதி சென்னை சங்கத்தின் நூற்றாண்டு விழா நடைபெறவுள்ளது. அதில் அண்ணாநகர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றார் மேலும் LKG முதல் Std XII வரை படிக்கும் மாணவ/ மாணவிகளுக்கு போட்டி நடைபெறவுள்ளது. அதில் தங்கள் குழந்தைகளை போட்டியில் பங்கேற்க வேண்டும் என்றார். சங்க ஆலோசகர் முனைவர் விவேகானந்தன் தெய்வத்திரு. ரா. பூவராகமூர்த்தி பிள்ளை சென்னை சங்கத்தில் நிர்வாகியாக ஆறாண்டு காலம் இருந்துள்ளார். மேலும் அண்ணாநகரில் நம்மவர்கள் 40 சதவிகிதத்திற்கு மேல் வாங்கியது அவர்கள் காலத்தில் தான் என்றார்.

திரு. V. ராஜசேகரன் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

– ஜெ. கோபாலகிருஷ்ணன், தலைவர்.

குரோம்பேட்டை

25–12–2022 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 2.00 மணி முதல் 8.30 மணி வரை நமது குரோம்பேட்டை கார்காத்தார் சங்கத்தின் 16–வது ஆண்டு விழா, சென்னை–600064 அஸ்தினாபுரம், ராஜேந்திர பிரசாத் சாலையில் (R.P. Road) உள்ள, ஸ்ரீ ராம் கணேஷ் மஹால் (A/c)-ல் நம் வீட்டு விழாவாக நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்களே! நமக்காக நாம் எல்லோரும் சேர்ந்து நடத்தும் விழாவில் குடும்பத்துடன் கலந்துகொண்டு சொந்தங்களுடன் இணைந்து, நம் வீட்டு குழந்தைகளின் திறன்களை வெளிக்காட்டவும், விளையாட்டு, ஆடல், பாடல், கலை நிகழ்ச்சிகளை கண்டு களித்து, கொண்டாடி மகிழவும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

நிகழ்ச்சி நிரல் :

பிற்பகல் 2.00 மணி முதல் : விளையாட்டுப் போட்டிகள் & கோலப் போட்டி பங்கு பெறுவோர் பெயர் பதிவு செய்தல்

பிற்பகல் 3.00 – 5.00 மணி வரை : விளையாட்டுப் போட்டிகள் & கோலப்போட்டி

மாலை 5.00 மணி முதல் : கலை நிகழ்ச்சிகள்

மாலை 6.30 மணி : பொதுக்குழு கூட்டம்

இரவு 8.00 மணி : பரிசு வழங்குதல்

இரவு 8.15 மணி : அறுசுவை விருந்து

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ! கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!!

R.S. அகோரம்,	J. தீபன்,	V. ஆறுமுகம்,
தலைவர்.	செயலர்.	பொருளாளர்.
9445230732	9659632577	9940081814

மற்றும் சங்க நிர்வாகிகள்.

பெருங்களத்தூர் :

பொதுக்குழு மற்றும் நான்காவது ஆண்டு விழாவினை வரும் 2022–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24–ம் நாள் (24–12–2022) உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்போடு சிவாலி ஹாலில் நடைபெற உள்ளது.

சிறுமியர், இளைஞர், மகளிர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 10–12–2022 அன்று சிவாலி ஹால் மற்றும் அதன் எதிரில் உள்ள மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு செயற்குழு உறுப்பினர் திரு. B. கார்த்திகேயன் – 9444332323 அவர்கள் பொறுப்பேற்று நடத்த உள்ளார்கள்.

ஆண்டு விழாவில் நமது உறுப்பினர்களின் குடும்பத்தில் ஆயிரம் பிறைகள் கண்ட / 80 வயது பூர்த்தியடைந்த பெரியவர்களை பெருமைப்படுத்த உள்ளதால் அவர்களின் விபரங்களை 15.12.2022 க்குள் நமது இணைச்செயலாளர் திரு. R. கார்த்திகேயன் (9791078294) அவர்களுக்கு வாட்ஸ் ஆப் மூலமாக தெரியப்படுத்தவும்.

2024–ம் ஆண்டிற்கான காலண்டர் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

நமது உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள சிறுவர் / சிறுமியர்கள் சிறப்பாக தேர்ச்சி பெற்றிருந்தால் (பள்ளியில், கல்லூரியில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது) அவர்களைப் பற்றிய விபரங்களை திருமதி. R. சாந்தி (9677210160) அவர்களுக்கு வாட்ஸ் ஆப் மூலமாக தெரியப்படுத்தவும்.

2022–ம் ஆண்டு சங்கத்திற்கு சந்தாதொகை செலுத்தாதவர்கள், சந்தாதொகையினை G.Pay மூலமாக திரு. S. சீனிவாசன், துணைத்தலைவர் (9840447235) அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முன்னேறிய வகுப்பினரில் பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கான 10% இட ஒதுக்கீட்டை மாநில சங்கம் பெற்றுத் தருவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளையும் முன்எடுக்க தரவேண்டும் என்றும், மாநில சங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நம் சங்கம் உறுதுணையாக இருக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

காலஞ்சென்ற நமது சங்க உறுப்பினர்கள் MMDA சந்திரசேகர் – பெண்ணாடம், அருணாசலம் பிள்ளை– கஞ்சா நகரம், ராம்குமார் – சிறகிழந்தநல்லூர். சபாநாயகம் – நெய்தவாசல், ஆகியோருக்கு கூட்டத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆண்டு விழாவினை சிறப்பாக நடத்திட அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம். விழாவினை சிறப்பாகநடத்திட உறுப்பினர்களின் நன்கொடைகள் பணமாகவோ / பொருளாகவோ வரவேற்க்கப்படுகின்றன.

மணிமங்கலம் K. மோகன்ராஜ் அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிதே நிறைவேறியது.

C. குழந்தைவேல்,
தலைவர்

விக்கிரமங்கலம் :

இளைஞர் அணி முதல் கூட்டம் 25–10–22 அன்று சா. சுந்தரம் இல்லத்தில் நடைபெற்றது. தலைவராக வை. மணிகண்டன், செயலாளராக இரா. அரவிந்த், பொருளாளராக மு. சுரேஷ் தேர்வு செய்யப்பட்டனர். மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் நடத்தவும், மாத சந்தா ரூ. 50/– வசூலிப்பது எனவும், அனைவரும் கார்காத்தார் ஒப்புரவிற்கு சந்தா செலுத்தவும், அடுத்த கூட்டம் 11–12–2022 அன்று அனைத்து பொறுப்பாளர்களையும் அழைத்து நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. திரு. சா. சுந்தரம், திரு. இரா. சத்தியமூர்த்தி, சு. சம்பூர்ணம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

– இரா. சத்தியமூர்த்தி,
செயலாளர்

பிள்ளைப்பாளையம்

சங்க கூட்டம் 26–11–2022 அன்று தலைவர் G. சுப்பரமணியன் இல்லத்தில் அவர் தலைமையில் நடைப்பெற்றது. பொருளாளர் R. செந்தில்வேல் வரவு செலவு கணக்குகள் வாசித்தார் அதை ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. செயலாளர் மு. கோவிந்தராஜன் கீழ்கண்ட தீர்மானங்களை வாசித்தார்.

பொது பட்டியலில் பொருளாதாரத்தில் பின் தங்கிய முற்பட்ட சமூகத்திருக்கு 10% சதவீத இட ஒதுக்கீடு செல்லும் என்று வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கிய உச்சநீதி மன்றத்திற்க்கும் வழக்கறிஞர் K.M. விஜயன் அவர்களுக்கும் மாநில சங்கத்தின் சார்பாகவும் கிளை சங்கத்தின் சார்பாகவும் நன்றியை தெரிவித்தும்

இந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை எதிர்க்கின்ற தமிழக முதல்வர், சில அரசியல் கட்சி தலைவர்கள், சில சமூக தலைவர்களுக்கு நம் எதிர்ப்பை ஊடகங்கள் பத்திரிக்கைகளின் வாயிலாகவும் தெரிவிக்கவும்

இட ஒதுக்கீடு தீர்ப்புக்காக தேவைபட்டால் எதிர்ப்பவர்களுக்கு தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் சார்பாக கண்டன பேரணி நடத்திடவும்

2023–2025 ஆண்டுக்கான சங்க தேர்தலை நடத்தவும் சங்க உறுப்பினர்கள் ஆண்டு சந்தா ரூ. 100 செலுத்த வேண்டும். இந்த தொகையில் மாநில சங்கத்திற்கு 5% வீதம் வளர்ச்சி நிதிக்கு வழங்குவோம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

– செயலாளர் மு. கோவிந்தராஜன். 7598517100

சீர்காழி

5–11–2022 அன்று மாதாந்திர செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

2023–ம் ஆண்டிற்கான நாட்காட்டி அச்சிடவேண்டும் என்றும் பழைய விளம்பரதாரர்கள் மீண்டும் இணைத்து கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரும் கல்வி ஆண்டில் மாணவர்களுக்கு கல்வி உதவிதொகை வழங்குவதற்க்கு விருப்பம் உள்ள புரவலர்கள் முன்வந்து நிதி அளித்தால் அதை வைப்பு நிதியில் வைத்து பயன்படுத்திகொள்ளலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

– குண. அமுதன் பிள்ளை,
செயலாளர்.

மயிலாடுதுறை

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 6–11–22 அன்று நடைபெற்றது. துணைத்தலைவர் R. முருகானந்தம் அவர்கள் தலைமையேற்க இறைவாழ்த்துடன் கூட்டம் இனிதே தொடங்கியது. இணை செயலாளர் திரு. A. இராஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

செயலாளர் M.S. முருகேசன் அவர்கள் மாதாந்திர அறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. R. சந்திரசேகரன் அவர்கள் அக்டோபர் மாதத்திற்கான வரவு செலவு கணக்கை தாக்கல் செய்து அதற்கு செயற்குழுவில் ஒப்புதல் பெற்றார்.

பின்னர் துணைத்தலைவர் திரு. R. முருகானந்தம் அவர்கள் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். இணைச்செயலாளர் திரு. A. இராஜேந்திரன் மற்றும் இளைஞரணி செயலாளர் S. விவேகானந்தன் அவர்கள் சங்க வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கினார்கள்.

நகர சங்க கட்டிடம் சுமார் ரூ. 2,00,000/– செலவில் புனரமைக்கப்பட்டதால் அச்செலவினை ஈடுகட்ட சங்க கட்டிடத்தில் நடக்கும் மங்கல நிகழ்ச்சிகளுக்கு கட்டிட நிதியாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 3000/–ல் இருந்து ரூ. 5000/– ஆக உயர்த்துவது எனவும், இது 01–01–2023–க்கு பிறகு நடக்கும் நிகழ்வுகளுக்கு உயர்த்தப்பட்ட கட்டிட நிதியை வசூலிப்பது எனவும்,

2023–ம் ஆண்டிற்கான மாத காலண்டர் அச்சிடுவது எனவும் அதற்கு உண்டான தொகையை

விளம்பர கட்டணமாக வசூலிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர் அணி பொறுப்பாளர் திரு. G.V. கவாஸ்கர் நன்றியுரை நல்க சென்ற மாதத்தில் இறைவனடி சேர்ந்த நம் கார்குல உறவுகளுக்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

M.S. முருகேசன்,
செயலாளர்.

செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–11–2022 அன்று சங்க சிறப்பு தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை இல்லத்தில் அவர்களே இறைவணக்கம் பாடிட தலைவர் திரு. சி. இராமநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குமரன் தெற்கு வீதி திரு. பி. பாலசுப்ரமணியம் பிள்ளை வரவேற்பு உரையும் சென்ற மாத அறிக்கை தலைவர் அவர்கள் வாசித்திடவும் வரவு செலவு அறிக்கை பொருளாளர் திரு. எம்.சி. செல்வராஜ் பிள்ளை அவர்கள் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. 28–10–2022 அன்று மெய்கண்டார் ஐ.டி.ஐ–இல் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை தலைவர் அவர்கள் விளக்கி கூறினார்கள். செயற்குழு கூட்டத்திற்கு துணை தலைவர் ராமநாதன் பிள்ளை செம்பொன் ஒன்றிய தலைவர் பி. லெட்சுமணன் பிள்ளை நமது பொருளாளர் எம்.சி. செல்வராஜ் பிள்ளை, மண்டல செயலாளர் எல். ராமசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். 2023–ம் ஆண்டு காலண்டர் அச்சடிப்பது பற்றியும் முற்பட்ட சமுதாயத்திற்கு 10% இட ஒதுக்கீடு செல்லும் என்று தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றத்திற்கு நன்றி தெரிவித்தும், முன்னாள் துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை காசி சென்று இருப்பது பற்றியும் வரும் 2023–ம் ஆண்டு முதல் சங்க உறுப்பினர்கள் இல்லத்தில் கூட்டம் நடத்துவது பற்றியும் விளக்கமாக பேசி கருத்துக்கள் கூறினார்கள் சங்க செலவில் காரம் தேநீர் வழங்கப்பட்டது. முன்னாள் பொருளாளர் க. ராஜா பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– ச. நெடுஞ்செழியன்,
செயலாளர்.

பரசலூர் :

06–11–2022 அன்று மாத கூட்டம் லெஷ்மி நகர் A. இரவிச்சந்திரன் இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராஜன் தலைமையில் திருமதி. R. சாந்தி இறைவணக்கம் பாட திரு. A. இரவிசந்திரன் வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

செயலர் திரு. V. கண்ணன் சென்ற மாத அறிக்கையையும், பொருளர் திரு. M. விஜய் நிதிய அறிக்கையையும் தலைவர் திரு. க. கோவிந்தராஜன் மு.அ. நிதிய அறிக்கையையும் வாசிக்க, வரவு செலவு பதிவேடுகள், வங்கி பாஸ் புத்தகம் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

கார்த்திகை தீப திருவிழா கொண்டாடுவது பற்றி மகளிரணியினர் கலந்துரையாடினார்கள். CREW கல்விஉதவித்தொகைவிண்ணப்பிக்காதமாணவர்கள் இந்த மாதத்தில் உரிய முறையில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. பரசலூர் சங்க துணை செயலாளர் திரு. A. ராமலிங்கம் – செந்தமிழ்ச்செல்வி மகன் இரா. விக்னேஷ்வர், மற்றும் மூத்த உறுப்பினர் V. சண்முகம் – செல்வி மகன் ச. அஜய்குமார், மற்றும் மேமாத்தூர் ந. புகழேந்தி – லதா மகன் P. தென்னவன் திருமணத்திற்கு சங்கத்தின் சார்பாக பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

2023– ஜனவரி மாதம் 14–1–2023 சனிக்கிழமை மகர சங்கராந்தி தேவதை இரவு 12.15 மணிக்கு மகர ராசியில் பிரவேசிக்கிறார். (மார்கழி மாதம் 30 தேதி) 15–1–2023 தை மாதம் 1–ம் தேதி காலை மணி 8.00 – 10.00 பகல் மணி 11.00 – 12.00 மணி வரை பொங்கல் வைக்க நல்ல நேரம் (திருக்கோயில் அனுஷ்டான வாக்ய பஞ்சாங்கப்படி) நாள் குறிக்கப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான பரிசை V. சிவக்குமாரும், பெண்களுக்கான பரிசை K. ராஜேஸ்வரியும், பெற முறையே ரவிச்சந்திரன், சாந்தி வழங்கினர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, சுண்டல், காப்பி வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு திரு. க. கோவிந்தராஜன், V. கண்ணன் சால்வை அணிவித்தனர்.

திரு. M. விஜய் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன்,
செயலர்.
Cell: 9894960438

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு சங்க மாதாந்திர கூட்டம் 05–11–2022 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் துவங்கியது.

செயலாளர் திரு. R.K. ராஜசேகரன் அவர்கள் 35 வருடங்கள் மேலப்பெரும்பள்ளம் அஞ்சலக கிளை அதிகாரியாக இருந்து சிறப்புடன் பணியாற்றி ஓய்வு பெற்றதை தொடர்ந்து, சங்க மூத்த உறுப்பினர் திரு. R. பாலசுப்பிரமணியன் ஆசிரியர் (ஓய்வு) அவர்களும், தலைவரும் அவரின் சிறந்த சேவைக்கு மனமார பாராட்டி, சங்கம் சார்பில் வாழ்த்தினை தெரிவித்தார்கள். 26–10–2022 அன்று திரு. R. பாலசுப்பிரமணியன் ஆசிரியர் (ஓய்வு) திருமதி சாவித்திரி தம்பதியரின் சதாபிஷேகம் திருக்கடையூர் கோவிலில் நடைப்பெற்றப் போது சங்கம் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌவிக்கப்படுத்தப்பட்டது.

கீழப்பெரும்பள்ளம் அருள்மிகு ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி அம்மன் ஆலயம் கும்பாபிஷேகம் சென்ற 5–9–2022 அன்று சிறப்புடன் நடைபெறவும், அதனை தொடர்ந்து மண்டலாபிஷேக பூர்த்தி 21–10–22 அன்று சிறப்புடன் நடைபெறவும் பேருதவிகள் செய்து, அரும் முயற்சி மேற்கொண்ட திருவெண்காடு திரு. சா. ஜெயராமன் அவர்கள் புதல்வி திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களுக்கு நமது கார்காத்தார் சங்கம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் பதிவு செய்கின்றோம்.

பின்னர் சங்க உறுப்பினர்களுக்கு திரு. R.K. ராஜசேகரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– பால. இலட்சுமணன்,

தலைவர். 9443783743

விசலூர் :

மாதாந்திர கூட்டம் 7–11–2022 அன்று அகஸ்த்தீஸ்வரர் ஆலய வளாகத்தில் இறைவணக்கத்துடன் தொடங்கி தலைவர் பொன். சொக்கலிங்கம் பிள்ளை தலைமையில் செயலர். ராமசெல்வம் பிள்ளை அறிக்கை வாசிக்க, பொருளர். S. கந்தசாமி பிள்ளை பொருளாதார வரவு செலவு சொல்ல கூட்டம் அதனை ஏற்றுக்கொண்டது.

ஜனவரி 6–ம் தேதி மார்கழி 22 வெள்ளிக்கிழமை ஆருத்ரா தரிசனம் சுவாமி வீதி உலாவிற்கு விக்கிரகங்கள் கிடைக்க முன் கூட்டியே செயல் அலுவலருக்கு கடிதம் அனுப்புவது அந்நிகழ்வை திறம்பட நடத்துவது, கார்குல சொந்தங்கள் மாநில சந்தா செலுத்துவது தொடர்பாக கருத்துகள் கலந்துரையாடல் செய்யப்பட்டது.

– செயலர். L. ராமசெல்வம்,

விசலூர். 9750806991

இலையமுது கூடம்

நவம்பர் மாதக்கூட்டம் 20–11–2022 அன்று சங்க உறுப்பினர் G. சிவக்குமார் அவர்கள் இல்லத்தில் சங்கத்தலைவர் திரு. A. நடனம் அவர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

சங்க வரவு செலவு கணக்கு பொருளர் திரு. S. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் படிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது.

சந்தாதொகையை மாநில சங்கத்திற்கு தலைவர் அவர்கள் வழங்கியமைக்கும், உடனடியாக இரசீது பெற்றுத்தந்த மயிலாடுதுறை துணைத் தலைவர் திரு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் 2023–ம் ஆண்டிற்கு தினசரி காலண்டர் அனைத்து சங்க உறுப்பினர்களுக்கு வழங்கவும்

ஒவ்வொரு ஆண்டும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தினசரி காலண்டர் வழங்க ஏற்பாடு செய்த திருவெண்காடு சிட்பண்ட் M.D.யும் நம் சங்க உறுப்பினருமான திரு. S. கணபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கியும் இடமளித்தும் சிறப்பித்த திரு. G. சிவக்குமார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

- G. சுப்பிரமணியன், செயலர்.

இராதாநல்லூர் :

சங்க மாதாந்திர கூட்டம் 20–11–2022 அன்று இணைச்செயலர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் இணைச்செயலர் காதி. G. சந்தோஷ்குமார் அவர்கள் வரவேற்புறைக்குப்பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் கன மழையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் உடனடியாக பயிர் காப்பீடு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட 10% இட ஒதுக்கீட்டை சங்கம் வரவேற்று மகிழ்கிறது.

2023–ஆம் ஆண்டிற்கான மாதாந்திர நாட்காட்டி, விளம்பரங்கள் பெற்று நல்ல முறையில்

அச்சிட்டு வழங்க தீர்மானிக்கப்பட்டது. செயலர் அ. இரத்தினவேல் சுப்ரமணியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- T. முத்துக்குமரசாமி, தலைவர்.

கைபேசி : 9443645646

இளந்தோப்பு

சங்க கூட்டம் 07–11–2022 அன்று சிவன் கோவிலில் நடைபெற்றது.

மறைந்த E.V. அமிர்தலிங்கம் பிள்ளை அவர்களுக்கு உறுப்பினர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

பொருளாளர் முன்னிலை வகிக்க திரு. S.S. ராஜேந்திரன் பிள்ளை அவர்கள் தலைமை உரையாற்றினார். பொருளாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது

V. இராஜேந்திரன்,

செயலாளர், 9444610907

நெடுங்காடு :

மாதக் கூட்டம் சங்கச் செயலர் திரு. G. செல்வகுமார் அவர்கள் இல்லத்தில் 13–11–2022 அன்று நடைபெற்றது. 27 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முனைவர். திரு. T. பிரபு இறைவணக்கம் பாடினார்.

சங்க முன்னாள் தலைவர் திரு. மு. முருகையாப் பிள்ளை அவர்களின் வாழ்க்கைத் துணைவி திருமதி. மு. மீரா அம்மாள் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

CREW அறக்கட்டளை கல்வி நிதி கேட்டு விண்ணப்பித்த மேலும் 5 பேருக்கு கல்வி நிதி அளித்து உதவிய திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கும் திரு. தி.நெ. முத்துக்குமரசாமி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த ஆண்டு மொத்தம் 20 பேருக்கு கல்வி நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றம் EWS பிரிவினருக்கு 10% அளிக்கும் முடிவிற்கு இணங்க இப்பிரிவின் மூலம் நமது காரைக்கால் சங்க உறுப்பினர் மகள் காரைக்கால் ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார்.

நமது மாநில கார்காத்த வேளாளர் சங்கக் கூட்டமைப்பானது EWS இட ஒதுக்கீட்டால் பயன்பெறும் அனைத்து சாதிகளையும் ஒன்றிணைத்து ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பினை நடத்த வேண்டும் என கேட்டுக்கொள்ளவும்,

EWS பிரிவினருக்கு வழங்கப்படும் 10% இட ஒதுக்கீட்டிற்கு பெரும்பான்மை ஆதரவு பல்வேறு சமுதாய மக்களிடையே இருக்கிறது என்பதை தமிழக அரசு உணர்த்திட வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பரிசுக்குலுக்கலில் திரு. வேலாயுதம் பிள்ளை, திரு. வைத்தியநாதன், திரு. பத்மநாபன் ஆகியோர் பரிசு பெற்றனர். டிசம்பர் மாதக்கூட்டம் 4/12/2022 அன்று காரைக்கால் பாரதிதாசன் நகர் திரு. G. சாய்முரளி அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

- G. செல்வகுமார், செயலர்.

திருவாரூர் :

மாதக்கூட்டம் 7–11–2022 அன்று ராஜன் கட்டளையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க துணைத்தலைவர் கண்ணபிரான் பிள்ளை தலைமையேற்றும் பனங்காடி பொன்னுசாமி பிள்ளை முன்னின்றும் நடத்தினார்கள். கடவுள் வணக்கமாக திருமுறை பாராயணம் அனைவராலும் ஓதப்பட்டது. தலைவர் உரையில் திரு. கண்ணபிரான் அவர்கள் வந்திருந்த அனைவரையும் வரவேற்று இன்னும் அதிகமான உறுப்பினர்கள் வரும் காலங்களில் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். சிறப்புரையாக திரு. பாலசுப்ரமணியன் பிள்ளை திருமருகல் சிறப்பாக உரையாற்றினார். ஆன்மீக கருத்தாக திரு. சோமசுந்தரம் அவர்கள் விஷ்ணு கதையை விரிவாக கூறினார்கள். திரு. C. ரவி அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையையும் திரு. கந்தசாமி அவர்கள் சங்க பொருளாதார நிலையை பற்றியும் கூறினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கம் சார்பில் தேநீர், சிற்றுண்டி அளிக்கப்பட்டது. திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் நன்றி கூறினார். ஓய்வு பெற்ற காவல் அதிகாரி திரு. சந்திரசேகரனின் தாயார் மறைவிற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கல்வி நிதி கோரி வந்த இரண்டு விண்ணப்பங்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. அடுத்த கூட்டம் அறிவிப்பு பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அ. சோமசுந்தரம்,

செயலாளர்.

குத்தாலம் :

சங்க செயற்குழு கூட்டம் 26–11–2022 அன்று இராமச்சந்திரன் நினைவரங்கில் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்கிய மத்திய அரசுக்கும், நியாயமாக தீர்ப்பு வழங்கிய உச்ச நீதி மன்றத்திற்கும் நன்றி

தெரிவித்துக்கொண்டது. மேலும் இத்திட்டத்தை நிராகரிக்கும் வகையில் தற்போது ஆட்சிப்பொறுப்பில் உள்ள மாநில அரசு அதனை ஏற்காது, மறு சீராய்வுக்கு அனைத்து கட்சி கூட்டம் கூட்டி, தீர்மானம் நிறைவேற்றியதை கண்டித்தும், சமூக நீதி என்பது அனைவருக்கும் பொதுவானதே! அதனை தமிழக அரசு கருத்தில் கொண்டு மறுசீராய்வு மனுவை உடனே திரும்ப பெறுதல் வேண்டும் என்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு 10% இட ஒதுக்கீட்டை உடனடியாக தமிழக அரசு நடைமுறைபடுத்த வேண்டும் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் கௌரவத்தலைவர் P. நாகராஜன் பிள்ளை தலைமை வகித்தார். குத்தாலம் கார்காத்த வேளாளர் சங்கத்தின் தலைவர் R. சுவாமிநாதன் செயலர் M. கண்ணன் பொருளாளர் M.R. பலராமன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மண்டல பொறுப்பாளர்கள், மற்றும் மகளிரணி தலைவி T. பர்வதம் மற்றும் மகளிரணி பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

– இரா. சுவாமிநாதன், தலைவர்.

மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 5–11–22– ம் தேதி அன்று ஸ்ரீதிருமேனி அழகர் கோவிலில் நடைப்பெற்றது. செயலர் இறைவணக்கம் பாட தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும் செயலர் திரு. G. அன்பழகன் அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. 2023–ம் ஆண்டுக்கு மாதாந்திர காலண்டர்கள் அச்சு அடிப்பது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. கார்த்திகை மாதத்தில் சிவன் கோவிலில் குருமூர்த்தி அபிஷேகமும், சோமாவரம் செய்வதற்கும் குழு அமைக்கப்பட்டது. பொருளாளர் நன்றி கூற, நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், செயலர்.

கும்பகோணம் :

13–11–2022 அன்று தலைவர் TM. வைத்தியநாதன் அவர்கள் இல்லத்தில் அவரது தலைமையில் ஆலோசகர் G. ராஜாராமன் அவர்கள் முன்னிலையில் மாதாந்திர கூட்டம் நடைப்பெற்றது. செயலாளர் S. விஜயகுமார் அவர்கள் சென்ற மாதம் தீபாவளி நிகழ்வு நிகழ்ச்சியை எடுத்துரைத்தார்கள். பொருளாளர் அறிக்கை ஏற்று கொள்ளப்பட்டது.

பொருளாதாரத்தில் நலிவடைந்தபொது பிரிவினருக்கு 10 சதவித இட ஒதுக்கீடு செல்லும் என உச்சநீதிமன்ற தீர்ப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்றும்,

சரியான தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்ற நீதி அரசர்களுக்கும், தீர்ப்பை ஆதரித்து அறிக்கைவிட்ட அனைத்து கட்சி மற்றும் சமுதாய தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்தும்,

பொருளாதாரத்தில் நலிவடைந்த பொது பிரிவினருக்கு 10% சதவீத இட ஒதுக்கீட்டை தமிழக அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனவும், மறு சீராய்வு மனுவை அளிப்பதை தவிர்க்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. 10% சதவீத இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் அரசியல் கட்சிகளுக்கு கண்டனம் தெரிவித்தும்,

கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு கார்காத்தார் வேளாளர் கூட்டமைப்பு ஏற்படுத்தும் அறக்கட்டளையை வரவேற்று ஆதரவு அளிப்பது எனவும்,

31–12–2022 அன்று நடைபெற உள்ள பொங்கல் விழாவிற்கு M. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் T.S. சூரியநாராயணன், S. குணசீலன், V. ஸ்ரீராம், M.R.K. பாண்டியன் ஆகியோரை உறுப்பினராக கொண்டு குழு அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

கம்பட்ட விஸ்வநாதர் வடக்கு வீதி ஆ. கனகசபாபதி பிள்ளை அவர்கள் மறைவுக்கும், கோடையன்தோட்டம் ஆராவமுதன் பிள்ளை மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

நன்றியுரை திரு. M.R.K. பாண்டியன் அவர்கள் கூறினார்கள்.

S. விஜயகுமார் பிள்ளை, செயலாளர்

தஞ்சாவூர்

சங்கக் கூட்டம் 30–10–2022 அன்று கற்பக விநாயகர் மன்றத்தில் சங்கத் தலைவர் திரு. மு. தண்டாயுதபாணி தலைமையில் திரு. சண்முகம் வரவேற்புரைக்குப்பின் நடைபெற்றது.

காமதேனு அறக்கட்டளை துணைத்தலைவர் திரு. S. மோகன் குமார் அவர்கள், இந்த ஆண்டு வழங்கிய கல்வி உதவித்தொகை எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது என்றும், நவம்பர் 30 வரை கல்விஉதவித்தொகை கேட்டு விண்ணப்பிக்கலாமெனவும் தெரிவித்தார்கள்.

திரு. S. திருஞானசம்பந்தம் தலைமை ஆசிரியர் (ஓய்வு) முதலில் சங்க உறுப்பினர்கள் கூட்டத்திற்கு ஏன் வரவேண்டும், வருவதால் அதன் நன்மைகள் குறித்தும் பின் நம் கார்குல பண்டைய கால வரலாறு பற்றியும் உயர்வுகளைப்பற்றியும், விருந்தோம்பலிலிருந்து ஆரம்பித்து நமது கார்குல சொந்தங்களின் நல்ல பண்புகளை எடுத்துக் கூறினார்கள்.

ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாட 5 பேர் குழுவை நியமிப்பதற்கு, அதிகாரம் வழங்கப்பட்டது. சங்கச் செயலாளர் திரு. S. மதியழகன், முன்னாள் மண்டல செயலாளர் திரு. S. இராஜசேகரன் மற்றும் திரு. S. பாலசுப்ரமணியன் ஆகியோர்கள் சங்க கருத்துக்களை பேசினார்கள்.

மருத்துவ பொறிமனையிலிருந்து பணி ஓய்வுப் பெற்ற திரு. S. கல்யாணகுமார், ஆவின் பொது மேலாளர் திரு. M. ரவி, திரு. S. திருஞானசம்பந்தம், சென்னையில் இருந்து வந்திருந்த திருமதி. T. சூரியா தியாகேசன் ஆகியோருக்கு பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

இறுதியாக திருமதி. S. லதா ராஜசேகரன் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

– S. மதியழகன்,
செயலாளர்.

மதுரை

செயற்குழு கூட்டம் 13–11–22 அன்று நடைபெற்றது.இரா.கணேசன் அவர்கள்கடவுள்வாழ்த்து பாடினார். தலைவர் முனைவர் கு. சிவசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்க, செயலாளர் C.M. சொக்கலிங்கம் கடந்த கூட்ட நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். நூற்றாண்டு விழா கொண்டாடும் சென்னை கார்காத்தார் சங்கத்திற்கு விளம்பரம் செய்ய Rs. 2500/- க்கு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்கம் சார்பாக 53 பேர் கல்வி உதவித்தொகை கேட்டு CREW அறக்கட்டளைக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் ஒப்புதல் வழங்க மங்கள சந்திப்பு படிவம், மற்றும் திருமண வாழ்த்து மடல் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாநிலத் துணைத்தலைவர் இரா. மாரியப்ப பிள்ளை அவர்கள் மாநில கார்காத்தார் சங்க சுற்றறிக்கையினை வாசித்து அவற்றை ஏற்க கோரினார்.

பின்னர் பொருளாளர் சிவ. முருகன் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- C.M. சொக்கலிங்கம், செயலாளர்.

ஈரோடு

சங்கத்தின் அவசர பொதுக்குழு 20–11–22 அன்று மரகதம் அண்ணாமலை மெட்ரிக் பள்ளியில் திரு. பூபதி மண்டல செயலாளர், திருமதி. அலமேலு மங்கை மகளிர் அணி செயலாளர் முன்னிலையில், திரு. V.M. ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரை மற்றும் கடந்தகால நிகழ்வுகளை திரு. மதியழகன் விளக்கினார். மேலும் 10 சதவீத ஒதுக்கீட்டின் அவசியத்தை மூத்த உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் விளக்கினார். திரு. ஹரிஹரன் அவர்கள் நம் வசம் இருந்த திருச்செங்கோடு கணக்கு பிள்ளை மண்டபத்தை மீட்க வேண்டுமென வலியுறுத்தினார். திரு. சிற்றரசு அவர்கள் 1938–ல் நமது கார்காத்தார் சங்கம் ஈ.வே.ரா. பெரியார் தலைமையில் நடைபெற்றதை 2009 ஒப்புரவில் வரப்பெற்ற அந்த செய்தியினை காட்டி பேசினார். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

10 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவு அளித்த அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும், தீர்ப்பு வழங்கிய மாண்புமிகு நீதியரசர்களுக்கும் நன்றி தெரிவித்தும்

இதை எதிர்த்து சீராய்வு மனுதாக்கல் செய்யும் தமிழக அரசுக்கு கண்டனமும், 10 சதவீதத்தை அமுல் செய்ய கேட்டுக்கொண்டும் CREW அறக்கட்டளை மூலம் ஈரோடு மாவட்ட மாணவ / மாணவியர்களுக்கு 2,25,000 வழங்கிய கார்குல கர்ணன் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கும், திரு. முத்துகுமாரசாமி பிள்ளை அவர்களுக்கும், மாநில மையத்திற்க்கும் நன்றியை தெரிவித்தும்

Family Tree (பரன் / பறை) விவரங்கள் வழங்காதவர்கள் உடனடியாக வழங்க வேண்டும் எனவும்

கார்காத்தார் சங்கத்தின் சார்பாக ஒரு அறக்கட்டளை துவங்குவது எனவும்

8–1–23 அன்று நடைபெறும் சென்னை நூற்றாண்டு விழாவிற்கு 10 பேருக்கு குறையாமல் ஈரோட்டிலிருந்து செல்வது எனவும்

சந்தா தொகையை தாமாக முன்வந்து செலுத்திய 98% உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்ட முடிவில் D. குமார் தணிக்கையாளர் சங்க கூட்டத்திற்கு தொடர்ந்து இடம் அளித்துவரும் திரு. S. திருநாவுக்கரசு IFS அவர்களுக்கும் நன்றி கூறினார். கூட்டம் 5.45 மணிக்கு நிறைவுபெற்றது. கூட்டத்திற்கு 42 பேர் கலந்து கொண்டனர்.

- R. ராம்குமார், பொருளாளர்.

கோவை

சங்க கூட்டம் 29–10–22 அன்று திரு. சிவராஜகோபால் அவர்கள் வீட்டில் திரு. காசி விஸ்வநாதன் அவர்கள் இறைவணக்கம் பாட, திரு. அரியநாயகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

முன்னாள் கோவை கார்காத்த சங்கத் தலைவர் திரு. நமசிவாயம், மற்றும் ஆச்சி மெஸ் திரு.

கணேசன் அவர்கள் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. சோமசுந்தரம் அவர்கள் திரு. நமசிவாயம் சங்கத்திற்கு ஆற்றிய உயரிய பணிகளை பற்றியும் திரு. சைலப்பன் அவர்கள் ஆச்சி மெஸ் கணேசன் சங்கத்திற்கு செய்த உதவிகளை பற்றியும் நினைவு கூர்ந்தார்கள்.

நம் சங்க மாணவ / மாணவிகளுக்கு CREW அறகட்டளையின் மூலமாக கல்வி உதவிக்கு வழங்கிய கார்குல வள்ளல் திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கும், திரு. முத்துகுமாரசாமி அவர்களும் மனமார்ந்த நன்றிகளை சங்கம் தெரிவித்து கொள்கின்றது.

தற்போதைய பொருளாளர் திரு. திருவேங்கடம் அவர்கள் கோவை மண்டல பொறுப்பாளர் ஆக தேர்வு செய்யப்பட்டுள்ளதால். திரு. சிவராஜகோபால் அவர்களுக்கு சங்க பொருளாளராக தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

சங்கத்திற்கு இடம் வாங்க ஆலோசனைகள் கூறப்பட்டன. இதற்கு ஆதரவு தெரிவித்து அங்கிருந்த சங்க உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து Rs. 2.25 லட்சங்கள் தருவதற்கு ஒப்புக்கொண்டார்கள். மற்ற உறுப்பினர்களுக்கும் இந்த செய்தியை அறிவித்து ஆலோசனைகளை பெற முடிவு செய்யப்பட்டது.

திரு. வள்ளிநாயகம் அவர்கள் நன்றியும், திரு. காசி விஸ்வநாதன் அவர்கள் வான்முகில் வழாது பெய்க பாடலுடன் கூட்டம் நிறைவுற்றது.

நினைவாற்றல் பெருக!

பள்ளி, கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களுக்கு நினைவாற்றல் பெருக!

கந்தரனுபூதி, பாடல் எண். 15

முருகன், குமரன், குகன், என்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வு என்று அருள்வாய்
பொருபுங்கவரும், புவியும் பரவும்
குருபுங்கவ, எண்குண பஞ்சரனே !

P.G. இராமலிங்கம்,
பகிர்பவர்.

கண்ணீர் அஞ்சலி



திரு. K. விஜயகுமார்

சிதம்பரம், கி. ஆடூர், நெல் வியாபாரி பிள்ளை தெய்வத்திரு. M. கனகசபை பிள்ளை – K. ஆண்டாள் அம்மாள் அவர்களின் குமாரரும், சிறுகாளூர் தெய்வத்திருமதி V. வேம்பு அவர்களின் கணவரும், எனது இளைய சகோதரராகிய **K. விஜயகுமார்** அவர்கள் சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 12ஆம் நாள் 28.11.2022 திங்கட்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு சிவலோக பதவியை அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

என்றென்றும் உங்கள் நினைவில்

மகள்
சுஷ்மிதா (எ) V. சங்கீதா
மாப்பிள்ளை
பாலாஜி (எ) A. மணிரத்தினம்
மைத்துனர்கள்
N. ஞானம், N. சிவக்குமார்
சகோதரிகள் மற்றும் **குடும்பத்தினர்**

லயன் **K. சுப்ரமணியன்**
சரவணா பிளாட்ஸ்
13வது குறுக்குத் தெரு, நியூகாலனி,
குரோம்பேட்டை, சென்னை–44.
போன் : 98417 32421

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

R. விமலா

மறைவு : 6–12–2021

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்குடி (T.K.) திருநாரையூர் தெய்வத்திரு மணியார் சொக்கலிங்கம் பிள்ளை, கமலாம்பிகை அவர்களின் அன்பு மகளும், செல்லமகளும், இளங்கம்பூர் தெய்வதிரு. மணியார் E.S.R. என்கிற இராமசாமி பிள்ளை அவர்களின் மனைவியும், எங்களின் அன்பு தாயாருமாகிய விமலா அவர்கள் 6–12–2021 செவ்வாய்கிழமை அதிகாலை 1 மணியளவில் பொல்லாப் பிள்ளையாரின் திருவடிகளை அடைந்தார்கள். என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

அம்மா

மறக்க முடியாத
நினைவு நீ
இழக்க கூடாத
உறவு நீ

படுத்தால் தூக்கம் வருகிறதோ
இல்லையோ
அம்மா உன்னை பற்றின நினைவு
மட்டும் கண்ணீராக வருகிறது!!

மகன்கள்

R. **சீத்தாராமன்.**

R. **செந்தில்குமார்.**

இளங்கம்பூர்.

மகள்கள்

செல்வி ஜெயக்குமார்,

சிறகிழந்தநல்லூர்.

தமிழரசி,

ஓரத்தூர்.

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
15–08–1947

மறைவு :
15–12–2017

திருமதி. **A. தனலட்சுமி**
கானூர்

அன்பின் திருவுருவாய், குடும்பத்தின் தியாகியாய் வாழ்ந்து, எங்கள் அனைவர் இதயத்திலும் நீங்கா இடம் பெற்ற நீ, எங்களை விட்டு விண்ணுலகம் சென்று ஐந்து ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனாலும் எங்கள் அனைவரின் இதயத்திலும் உன் நினைவுகள் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்றும் உன் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்

கணவன்: **சி. ஆதிவராகன்**, Retd HM. கானூர்.
Cell : 9487921285
கௌரவத் தலைவர் : எம்.ஆர்.வி. நகர் குடியிருப்போர் நலச்சங்கம், லால்புரம், சிதம்பரம்.
துணைத்தலைவர் : சிதம்பரம் வட்ட தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் நலச்சங்கம்.

மருமகன் : திரு. **R. கார்த்திகேயன்,** B.Com., Dip.in Cop., (பண்ணப்பட்டு)
மகள் : திருமதி. **K. தமிழ்ச்செல்வி**
மருமகன் : திரு. **Dr. S. வீழிநாதன்,** M.Sc., Ph.d., (பனங்காடி)
மகள் : திருமதி. **V. உமாராணி,** B.Com., Dip. in Cop.,
மகன் : திரு. **Er. A. அன்புச்செல்வன்,** BE., (A.C.M.T.S. -N.L.C. நெய்வேலி)
மருமகள் : திருமதி. **A. கவிதா**

பேரன் – பேத்திகள்

A. பூரணி, M.Sc.,
Er. K. நரேந்திரசிவம், B.E., (USA)
Er. A. கலைவாணி, B.E.,
Dr. A. வனிதா, M.B.B.S.,
Dr. P. பரத்வாஜ், M.D.,

கொள்ளுப்பேத்தி
N. மித்திரவள்ளி

5-ம் ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம் :
1–1–1936

மறைவு :
28–12–2017

பெண்ணாடம் **கு. வேலாயுதம் பிள்ளை**

(Rtd. ASST. SECRETARY, S.A.C.C. BANK)

எப்போதும் தங்கள் நினைவுகள் மட்டுமே துணையாயிருக்க வாழ்ந்து கொண்டிருக்கும்

உங்கள் அன்பு

மனைவி,

மணிக்கொடி

மற்றும்

தங்களை கொண்டாடி மகிழ்வித்த சொந்தமும் பந்தமும்.

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
10.04.1939

மறைவு :
06.12.2020

கோ. ஜானகி

கணவர் : **க. கோபாலன்** (ஆசிரியர் ஓய்வு)
தில்லை நகர், பூம்புகார் சாலை, மயிலாடுதுறை–1.

மகன்கள்

கோ. பாலுசாமி
சுமதி பாலுசாமி

கோ. செந்தில்குமார், ஆசிரியர்
மணி மொழி செந்தில்குமார், ஆசிரியை

பேரன் : **அருள் பிரகாஷ்** (SPA, Singapore)

பெயர்த்தி : **சரண்யா கார்த்திகேயன்,** செம்பாக்கம், சென்னை

கொள்ளு பேரன் : **K. வெற்றிவேல்,** சென்னை

என்றும் உங்கள் நினைவில்

சுமதி சம்பூர்ணானந்தன், நல்லத்துகுடி

கண்ணீர் அஞ்சலி

மலர்ந்தது
17.09.1944

உதிர்ந்தது
12.10.2022

திரு. T. இராமதாஸ்

(ஆசிரியர் பணி நிறைவு)

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மடப்புரம் தெய்வத்திருமதி R. கமலா அவர்களின் கணவரும் ஜெயசக்தி, உமா மகேஸ்வரி இவர்களின் தகப்பனாரும், மா. தர்மலிங்கம், மு. கம்பன் ஆகியோரின் மாமனாரும் ஆன திரு. T. இராமதாஸ் அவர்கள் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 25ம் தேதி (12.10.2022) புதன்கிழமை சிவலோக பதவியை அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

என்றென்றும் தங்கள் நினைவில் வாழும்

பேரன், பேத்தி

த. யக்னேஷ்வர்

த. ரோகன்

க. சஜ்ஜீ பிரியா

மா. தர்மலிங்கம்

த. ஜெயசக்தி

அடையார், சென்னை

மு. கம்பன்

க. உமாமகேஸ்வரி

மாப்படுகை

நினைவஞ்சலி

10 ம் ஆண்டு

G.இலஞ்சியம் அம்மாள் அவர்கள்

உதிர்ந்தது : 12.12.2012

2 ம் ஆண்டு

C.கோவிந்தராஜன் பிள்ளை அவர்கள்

தலைமையாசிரியர் பணி நிறைவு

உதிர்ந்தது : 26.11.2020

எடுத்துகட்டி-சாத்தனூர்

என்றும் எங்கள் மனதில் வாழும்... உங்கள் அன்பு நினைவுகளுடன்...

மகன்கள், G.குமார் CREW (P) LTD - APL GUJARATH K.கலாவதி

Er.G.சண்முகம் S.பிரியா

தீவ்யா கன்ஸ்ட்ரக்ஷன் & டிரான்ஸ்போர்ட்,

மகள் - மருமகன் M.சித்ரா தலைமையாசிரியர் P.முத்துக்குமார் CREW-MTPS-METTUR

பேரன் - பேத்திகள் E.கிருஷ்ணகாந்த்,B.E.,M.B.A.,. K.திவ்யா,M.E.,

M.கௌதம்ராம்,B.E., G.ஓவியா,B.E.,

S.கிஷோர், S.திஷா, - K.ஸ்ரீ, K.சூரியா கொள்ளு பேத்தி K.பிரதிக்ஷா

மாப்படுகை - மயிலாடுதுறை

மணல், ஜல்லி, கிராவல், M சண்ட் சப்ளையர்ஸ்

செல் : 9443785264

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மறைவு:
02.12.2020

K.சாந்தா குமாரி

W/o. S.கலியபெருமாள் (Rtd. H.M)

"என்னும் உங்கள் நினைவில்"

குடும்பத்தார் மற்றும் உறவினர்கள்

5, திருநகர், சிதம்பரம்.

Cell: 98946 13432, 95006 88714

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
30.05.1930

மறைவு
25.10.2022

திரு. மு. சம்பந்தம் பிள்ளை

Retd. RBI Officer – சென்னை – 600 028

S/o. தெய்வத்திரு. S. முத்தையா பிள்ளை, நெடுங்குளம்

என்றும் உங்கள் நினைவில் வாழும்

குடும்பத்தினர்

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th December 2022

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

We are truly honored and privileged to get blessings from one of the renowned Business Man of our community
Mr. R Subramanian
(Former Chairman/Managing Director, Sterling Holiday Resorts India)


To Mr M.K. SUNDARAM

Dear Sir/Sri

This is R.S. (Sterling) we had a wonderful stay in KANAKABISHEGAM & congratulate you for maintaining the hotel so neat in a place like THIRUKADAIYUR. Service was good. Food was tasty. Tariff reasonable

Congratulations once again
Keep it up

29-11-2022

Hand written Appreciation note by Mr. R Subramanian

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**